Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 07 செவ்வாய்க்கிழமை (19.02.2013) பக்கங்கள் 20 ஓசை – 142
















# பரிந்துரைகளின் அமுலாக்கம் இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமைகள் மாநாடு எதிர் வரும் 25 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம பமாகவுள்ள நிலையில் உண்மையைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழு வின் இறுதி அறிக்கையின் பரிந்துரைகள் மற்றும் அமுலாக்கம் தொடர்பாக வெளி நாட்டு இராஜதந்திரிகளுக்கு அரசாங்கம் விளக்கமளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு இரா ஜதந்திரிகளுக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை விசேட விளக்கம் அளிக கப்படவுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத் துவது தொடர்பில் அரசாங்கம் பாரிய ளவு முன்னேற்றமடைந்துள்ளதாக வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரி வித்துள்ளார் இந்த விடயங்கள் குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு பூரண விளக்கம் அளிக்கப்படும் என அவர் சுட் டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட உள்ள தீர்மானம் குறி த்து இன்னமும் ஆராயவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, இந்த அறிக்கை பற்றிய தகவல்களை தற்போ தைக்கு வெளியிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார். தீர்மானம் தொடர்பில் ஆராய்ந்து அதன் பின்னர் கருத்துக்கள் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் தேசிய செயற்திட்ட அமுலாக் கம் தொடர்பில் ஒருமாத காலத்திற்கு முன்னதாகவும் விளக்கம் அளிக் கப்பட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காந்தி சிறுவர் துஷ்பிரயோகம்; 2 சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி காந்தி சிறுவர் இல்ல சிறுவர்களைத் துன்புறுத்திய சம்பவத் துடன் தொடர்புடைய 2 சந்தேகநபர் கள் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தி னம் குறித்த நபர்கள் கைதுசெய்யப் பட்ட நிலையில் நேற்று இவர்களைப் பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீத வான நீதிமன்றில் ஆஜர்பபடுத்தினர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி குறி த்த நபர்களில் ஒருவரை எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் மற்றைய நபரை ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையி லும் 50 ஆயிரம் ரூபா காசுப்பிணையி லும செல்ல அனுமதியளித்துத் தீர்ப்பளி த்தார். அத்துடன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர் வாரத்தில் ஒரு நாள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத் திற்குச் சென்று கையொப்பமிட வேண் டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார்.(கே)

## யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபராக பொறுப்பேற்றார் கருணாரட்ன

யாழ். மாவட்ட பிரதிப் பொலி ஸ்மா அதிபராக வி.பி இந்து கருணாரட்ன நேற்றுக் காலை கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்

கொழும்பு தலைமைப் பொலிஸ் காரியாலயத்தில் இரு ந்து யாழிற்கு இடமாற்றம் செய் யப்பட்டுள்ள இவர் நேற்றுக் காலை யாழ். பொலிஸ் நிலைய த்திற்கு வருகைதந்தார்.

யாழ். பொலிஸ் நிலையத் தில் இடம்பெற்ற பொலிஸ் அணி வகுப்பு மரியாதையை ஏற்று கொண்ட இவர் சம்பிரதாய பூர் வமாக தனது கடமைகளைப்



பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியசட்கர் முகமட் ஜெப்றி, யாழ். பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி சமன்

19 ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க்கட்சிக் கூட்டில் இணைவதா? இன்று முடிவு செய்யும் கூட்டமைப்பு

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு கூட்டணியுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத் திடுவதா? இல்லையா? என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு இன்றையதினம் ஆரா யவுள்ளது.

கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையில் இன்று நடைபெறும் நாடாளு மன்ற குழுக்கூட்டத்தின் போதே மேற்படி விவகாரம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக் கூட்டணியின் புரிந்துணர்வு உடன் படிக்கையில் ஒன்பது கட்சிகள் கொழும்பில் வைத்து கடந்த 11 ஆம் திகதி கைச்சாத்திட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பு அந்த புரிந்துணர்வு உடன் படிக்கையில் அன்றையதினம் கைச்சாத்திடவில்லை. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறு ப்பினர் எம்.சுமந்திரன் புரிந்துண ர்வு உடன்படிக்கை கைச்சாத்தி டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினார். கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன்

19 ஆம் பக்கம் பார்க்க

## சிறிதரன் எம்.பி.யிடம் மூன்றுமணிநேர விசாரணை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடம் பயங்கரவாத புலனாய்வுப் பிரி வினர் மூன்று மணிநேரம் விசார ணை நடத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள பயங்கர வாதக் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ். தலைமையகத்தில் நேற்று மதியம் 12.00 மணியிலி ருந்து பிற்பகல் 3.00 மணிவரை இடம்பெற்ற இவ்விசாரணை களின் போது சிரேஷ்ட சட்டத் தரணி கே.வி.தவராசா, கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப் பினரும் சிரேஷ்ட சட்டத்தரணி யுமான ஏ.சுமந்திரன் மற்றும் ஐ.தே.க பிரதித் தலைவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஊடகவியலாளர் லசந்தவை பொன்சேகாவே கொன்றார்

முன்னாள் இராணுவத் தள பதி சரத் பொன்சேகாவே, சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக் கிரமதுங்கவைக் கொலை செய் ததாக, மகிந்த ராஜபக்ஷ தெரி வித்ததாக, புலம்பெயர்ந்துள்ள ஊடகவியலாளர் உவிந்து குரு குலசூரிய ஐ.நா. மனித உரிமை கள் ஆணையாளர் நவநீதம்பிள் ளையிடம் தெரிவித்துள்ளார்.

மூன்றுமுறை ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷ இதனை லசந்த விக்கிரமதுங்கவின் சகோதரர், லால் விக்கிரமதுங்கவிடம் கூறிய தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லண்டனில் பொருளாதார மற்றும் அரசியல் விஞ்ஞானப் பாடசாலையில், நவநீதம்பிள்ளை கடந்த வெள்ளிக்கிழமை உரை யாற்றியிருந்தார்.

அவரது உரையை அடுத்து இடம்பெற்ற கருத்தரங்கிலேயே உவிந்து குருகுலசூரிய இதனை பகிரங்கமாக கூறியுள்ளார்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலையில் சரத் பொன்சேகா சம்பந்தப்பட்டுள்ளதாக மூன்று முறை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ கூறியதாக, தன்னிடம் தெரிவித்த லால் விக்கிரமதுங்க,

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசாங்கம் எழுதிய நாடகத்தில் நடித்துவருகிறார் வீரவன்ச

### என்கிறது ஐ.தே.க.

அரசாங்கத்தால் எழுதப்பட்ட ஒரு நாடகத்தில் அமைச்சர் விமல் வீரவன்ச நடித்துவரு கின்றார். அரசாங்கத்தின் முறை கேடான செயல்களை மூடி மறை க்கவும் வீரவன்ச முயல்கின்றார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் எதிர்க்கட் சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நிதி மற்றும் திட்டமிடல் அமை ச்சரும் இந்த நாட்டின் பொருளா தார நெருக்கடிக்கு காரணகர்த் தாவுமான ஜனாதிபதி மகிந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## இரகசிய ஆயுதக்குழுக்கள் இல்லை என்கிறது இராணுவம்

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும இராணுவத்தைத் தவிர எந்த ஒரு இரகசிய ஆயுதக் குழுக்களும் இல்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரி வித்துள்ளார். சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட இராணுவத்தைத் தவிர சட்டவிரோதமாக எந்தவொரு ஆயுதக் குழுக்களும் இயங்க முடியாது. அவ்வாறு கூறப்படும் செய்திகளில் எந்தவித உண்மை யும் கிடையாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் வழிகாட்டலில் படையினரால் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அரசியல் வாதிகளும், பொதுமக்களும் எந்தவித தங்குதடை யின்றி சுதந்தி ரமாக தமது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செலலக்கூடிய சூழலை படையினர் ஏற்படுத்தியுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# பாடசாலை வளங்களை ஆக்கிரமிக்கிறது உடுவில் கோட்டக்கல்வி அலுவலகம்

## மாணவர்கள் கல்வி பாதிக்கும் அபாயம்

(சுன்னாகம்)

உடுவில் கோட்டக்கல்வி அலுவலகம், மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் இயங்கி வருவதால் அப்பாடசாலையில் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றமை தொடர்பாக பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் இரு வகுப்பறைகளில் அரசினால் வழங்கப்படும் இலவச பாடநூல்கள் கோட்டக்கல்வி அலுவலகத்தினரால் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் சில பாடங்களைக் கற்பிப்பதற்கான வகுப்பறைகள் போதியளவு இலலாத நிலை அங்கு தோன்றியுள்ளது.

அத்துடன், மாணவர்கள் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்கும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் பாடசாலைச் சுற்றாடலில் கழிவுக் கடதாசிகள் வீசப்படுவதாகவும் பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஆரம்பத்தில் பாடசாலைகளில் இயங்கி வரும் கோட்டப்பணிமனை ஒருவாரத்தினுள் அங்கிருந்து அகற்றப்பட வேண்டுமென ஆளுநரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இதுவரை இக்கோட்டக் கல்விப் பணிமனை அகற்றப்படவில்லை எனப் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (31)

## வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

(யாழ்.நிருபர்)

நாவாந்துறை றோ.க.வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை கல்லூரி அதிபர் தலைமையில் நாவாந்துறை சென்.நீக்கொலஸ் மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில், வடக்கு மாகாணக் கல்வித்திணைக்கள உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் பிரதம விருந்தினராகவும், யாழ்.பிரதேச செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் கே. சிவச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (10)

## இந்து சமுதாய மாநாட்டுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்துஸ்வயம் சேவா சங்கம் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு கொழும்பு - நாரஹன்பிட்டி சாலியா மைதானத்தில் கடந்த 10.02.2013 இல் நடத்தியிருந்த அகில இலங்கை இந்து சமுதாய மாநாட்டுக்கு 25 ஆயிரம் ரூபா நிதியினை அன்பளிப்புச் செய்துள்ளது.

இச்சங்கத்தின் உடுவில் பிரதேசக் கிளையினால் இப்பிரதேச வாழ் இந்துக்களை மேற்படி மாநாட்டுக்கு அழைத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவிற்காக இந்த நிதி அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தது.

இந்த அன்பளிப்பு நிதி மூலம் இப்பிரதேசத்திலிருந்து மேற்படி மாநாட்டுக்கு ஏறக்குறைய அறுபது இந்துக்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்

'நல்லார் ஒருவர் உளர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை' போல் அமைந்த அமைச்சரின் இந்த நிதியுதவியினை முன்னிட்டு உடுவில் வாழ் இந்து சமூகம் மகிழ்ச்சியடைவதுடன், அவரது பரோபகாரச் சிந்தனையைப் பாராட்டி நிற்பதுடன், தங்களது உளபூர்வமான நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறது. (06)

## நூலகங்களின் அபிவிருத்திக்கு உதவி

(யாழ்.நிருபர்)

கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் 'சபிரி' ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் அடங்கும் பாடசாலைகளில் உள்ள நூலகங்களின் அபிவருத்திக்கு உதவ தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை முன்வந்துள்ளது

இச்சபையின் சேவைகளான புத்தக அன்பளிப்பு, நூலகத் தரப்படுத்தல் ஏனைய அன்பளிப்பு போன்றவற்றுக்கு உதவும் முகமாக பாடசாலை நூலகங்கள் பற்றிய கருத்துக் கணிப்பொன்றினை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை மேற்கொண்டுள்ளது.

'சபரி' ஆயிரம் பாடசாலைகள் தரமுயர்த்தும் திட்டத்தில் அடங்கும் பாடசாலைகள் தமது நூலகம் பற்றிய கருத்துக் கணிப்பு படிவத்தைப் பூர்த்தி செய்து பிரிவுத்தலைவர், விரிவாக்கல் சேவைகள்பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல.14, சுதந்திர வழி, கொழும்பு-07. என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (10)

## விவசாய நிலங்கள் உவராகும் ஆபத்து

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பகுதியூடான பூநகரியை அண்டிய பயிர்ச்செய்கை நிலங்கள் உவரடைந்து வருவதால் விவசாயிகள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆனைவிழுந்தான் குஞ்சுக்குளம் ஆகிய பகுதி வயல் நிலங்கள் உவரடைந்துள்ளதால் 40 குடும்பங்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. (கே)

## "குருவிக்கூட்டம்" கவிதை நூல் வெளியீடு கல்லூரி மாணவனின் அனுபவப் பகிர்வு

(கிளிநொச்சி)

கிளி/பூநகரி மகாவித்தியாலய மாணவன் நற்குணம் தயானின் "குருவிக்கூட்டம்" கவிதைத் தொகுதி, பொது அறிவு தரம் 05, தரம் 11 மாணவர்களுக்காக வினா-விடைகள் மற்றும் பூநகரி பற்றிய ஓர் எடுத்துக்காட்டு" எனும் நூல் வெளியாகியுள்ளது.

இந்நூல் தொடர்பாக அந்த மாணவனின் உள்ளத்திலிருந்து வெளியான கருத்துக்கள்;

எனது குடும்பம் பல இழப்புக்களைச் சந்தித்த குடும்பம். கடந்த யுத்தத்திற்கு முன்பு நான் கிளி/கனகபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வந்தேன். அந்தப்பாடசாலையில் எனக்கு பல வருடகாலமாக இருந்து வந்த கனவு ஓர் எழுத்தாளராக வரவேண்டுமென்று. அதற்கு பல முயற்சி எடுத்தேன் அது முடியாமல் போய்விட்டது.

யுத்தத்தின் பின்பு பூநகரியில் மீள் குடியேறிய எனது குடும்பத்தினர் என்னை மிகவும் கஷ்டத்தின் மத்தியில் கல்விகற்க வைத்தனர். நான் அங்கு கல்வி கற்றதுடன் ஓர் எழுத்துப் பணியையும் தொடர்ந்தேன். இவ் எழுத்துப்பணிக்கு முன்னுதாரணமாக இருந்த எனது அதிபர் ஆர்.பாலச்சந்திரனுடன் எனது மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரினதும் உதவியுடன் முதன் முதல் ஊனம் சிறிது தாக்கம் பெரிது மற்றும் பாசக்கிளிகள் என்ற இரு நூலகளை பாடசாலை தமிழ் மன்றம் ஊடாக வெளியிட்டேன். பின்பு பூநகரிப் பிரதேசத்தில் பிரிவு, தாயுள்ளம், எங்கும் அவலம், உயிரிலே கலந்து மற்றும் பல அம்சங்கள் அடங்கிய நூல்களை வெளியிட்டேன்.



தற்போது எனது தந்தையின் இறப்பின் பின்பு எனது தங்கையையும், தாயையும் பார்க்கும் பொறுப்பு எனக்கு உள்ளதால் எனது எழுத்துப்பணியை நிறைவு செய்துள்ளேன். இந்நிறைவையிட்டு மிகவும் கவலையடைகின்றேன் என்றார்.

## 12 ஆவது நினைவு நாள்

தாயின் மடியில்
19 – 04 – 1949



தரணியின் மடியில்
19 – 02 – 2001

### அமரர் கனகர் கந்தசாமி
(கண்ணன்)
கல்வயல் சாவகச்சேரி

ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
ஆறாத துயர் தந்து விட்டு
அமைதியாக போனீர்களே!!
கண் விழிக்க வைத்து எம்முன்
கண்மூடியதேன் தந்தையே
காட்டிய வழி என்ன!
கரடு முரடான பாதையில் நாம் பயணித்தோம்.
காலம் கைகூடிய வேளை
எம் கண்முன்னே உங்களை காணோம்.
இன்னும் இருந்திருக்கலாம்
எம்முடன் இன்னும் மறவோம்
உயிர் தந்த உங்களை
இன்னல்கள் சுமந்தாலும்
வாழும்வரை உங்கள் நினைவுகளோடு
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

தகவல் : மகன்
க.வதிமகன், யாழ்ப்பாணம். (C/1794)

## அமுலாகிறது வாழ்வின் எழுச்சித் திட்டம்; கிளிநொச்சியில் 4,750 குடும்பங்கள் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் 4 ஆயிரத்து 750 பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இத்திட்டத்திற்கு இம்மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர் பிரிவு ரீதியாக ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 50 பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதன்படி கரைச்சி, கண்டாவளை, பச்சிளைப்பள்ளி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் இப்பயனாளிகள் தெரிவு இடம்பெறவுள்ளது.

மேலும் கிராம மட்டப் பயனாளிகள் தெரிவில் 25 பயனாளிகள் பட்டதாரி பயிலுநர்கள் மூலமாகவும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை, இதில் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 19 கிராம அலுவலர் பிரிவில் 950 பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன், ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளில் மிகுதிப் பயனாளிகளுமாக மொத்தம் 4 ஆயிரத்து 750 பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (கே)


## சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

நயினாதீவு 5ஆம் வட்டாரம் தீர்த்தக்கரையடியில் நன்னீர் கொண்ட 7 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு. காணியின் பெறுமதி நேரில் பேசிக் கொள்ளலாம்.

தொடர்பு : 0778716355 (C/2450)


## தரம் 8, 9, 10 மாணவர்களுக்கு விழுமியக்கல்வி வதிவிட முகாம்

(யாழ்.நிருபர்)

நல்லூர் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 8,9,10 மாணவ மாணவிகளுக்கான விழுமியக்கல்வி தொடர்பான வதிவிட முகாம் எதிர்வரும் 23, 24, 25 ஆம் திகதிகளில் யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் சின்மியாமிஷனால் நட்த்தப்படும் இவ்வதிவிட முகாமில் நல்லூர் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் கலந்து கொள்கின்றனர்.

பெரியோரை மதித்தல், விட்டுக்கொடுத்தல், அன்பு, பொறுப்புணர்வு, பிறந்த இடத்தை நேசிக்கும் பண்பு மற்றும் இந்துமன்ற செயற்பாடுகளுடன் ஈடுபாடுடைய மாணவர்கள் இவ்வதிவிட முகாமில் கலந்து கொள்ள முடியுமென வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (10)



வவுனியா–நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய 125 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பாடசாலை வாயிலில் அமைக்கப்பட்டிருந்த பெயர் வளைவினை நாடாவெட்டி திறந்துவைப்பதையும், விருந்தினர்களால் கேக் வெட்டப்படுவதையும், மாணவர்களின் நடன நிகழ்வையும் காணலாம். (படங்கள்: கே.நந்தகுமார்)

# மாணவர்கள் தமது ஆளுமையை விளையாட்டினூடாக வளர்க்கவேண்டும்

## கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்கள் கற்றல் செயற்பாட்டினூடாக மட்டும் தமது திறமைகளையும் ஆளுமைகளையும் வளர்த்துக் கொள்ளமுடியாது. விளையாட்டுச் செயற்பாடுகள் இணைப் பாடவிதான செயற்பாடுகள் ஆகியவற்றிலும் ஈடுபடவேண்டும்.

அதன்மூலம் மாணவர்கள் ஆளுமை மிக்கவர்களாக திகழ முடியும் என கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

அசசுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் இடைநிலைப்பிரிவு மாணவர்களுக்கான வருடாந்த இல்லமெய் வல்லுநர் போட்டி அண்மையில் கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றொசாரியோ தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

தற்காலத்தில் பாடசாலை மாணவர்கள் மிகவும் திறமை மிக்கவர்களாக காணப்படுகின்றனர். எனினும் இம்மாணவாகள் தமது திறமையை மேலும் வளர்ப்பதற்கு விளையாட்டுச் செயற்பாடுகளிலும் கலைத் துறைசார் செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டும்.

பாடசாலையில் மாணவர்களின் விளையாட்டுத்திறன் செயற்பாடுகளுக்கு மைதானம் என்பது முக்கியமான ஒன்றாக காணப்பட்டாலும், இப்பாடசாலையில் அதன் பற்றாக் குறையினை அவதானிக்கமுடிகிறது.

மேலும் இப்பாடசாலைக்கு அருகில் இருக்கும் தனியார் காணியினை பெற்றுத்தருவதற்கு பிரதேச செயலகம் எந்த விதத்திலும் உதவியாக இருக்கும். அத்துடன் ஏனைய அகச்செயற்பாடுகளுக்கு உதவ நாம் தயாராக உள்ளோம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராசா, அருட்தந்தை ஏ.பி.வின்சன், அச்சுவேலி பொலிஸ் நிலைய அதிகாரி மதுரங்க குணவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர். (15)

# தும்பளை வீதி காபற்றாக புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட தும்பளை வீதி உயர்த்தப்பட்டு தற்போது காபற் இடப்பட்டு வருகிறது.

நீண்டகாலமாக இவ்வீதி திருத்தப்படாமல் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்த நிலையில் தற்போது இவ்வீதி காபற் வீதியாக புனரமைக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் 2 ஆம் குறுக்குத்தெரு வீதியிலும் காபற்போடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக நகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (109)

# பேருந்துகளில் தொடரும் மதுப்பிரியர்கள் அட்டகாசம்

(கல்வயல்)

யாழ்ப்பாணத்தில் தற்காலத்தில் மதுபாவனை மற்றும் புகைப்பொருள் பாவனை என்பன அதிகரித்துள்ள நிலையில் இவற்றை பாவிப்போர் பொது மக்களுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்துவது கண்டனத்துக்குரிய விடயம் என பலராலும் சுட்டிக் காட்டப்படுகிறது.

குறிப்பாக பேருந்துப் பயணங்களை மேற்கொள்வோர் இவ்வாறு மதுபோதையிலும், புகைத்துக்கொண்டும் பயணம் செய்வதால் அதில் பயணம் செய்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

பொது இடங்களில் புகைப் பிடிப்பது குற்றம் என அறிவுறுத்தப்பட்டும் சிலர் மறைமுகமாக இவ்வாறு செயற்படுவதாகவும் மதுபோதையில் நிலைதடுமாறி பயணங்களை மேற்கொள்வோரால் சனநெரிசல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஏனைய பயணிகளுக்கு ஒவ்வாமை ஏற்படும் நிலைமையும் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை மதுபோதையில் பயணம் செய்வோர் அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபடுவதால் குறிப்பாக பெண்கள் சிரமங்களுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படும் நிலையில் இவ்வாறானவர்கள் குறித்து பேருந்து நடத்துநர்கள் கவனம் செலுத்தி ஏனைய பயணிகளுக்கு இடையூறை ஏற்படுத்தாதவாறு பயணிக்க ஆவன செய்ய வேண்டும் என பயணிகள் தெரிவிக்கின்றர். (43)

# தென்மராட்சி பகுதிகளில் பாம்புகள் அதிகரிப்பு

(சாவகச்சேரி)

நெல் அறுவடை தற்போது நடைபெற்றுவருகின்ற வேளையில் பாம்புக்கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

தனங்கிளப்பு, மறவன்புலவு, அறுகுவெளி, தஞ்சன்தோப்பு மணன்குழாய் போன்ற பகுதிகளிலும், இயங்கன் பள்ளம், கொட்டை மரத்தடி போன்றபகுதிகளிலும் இவ்வாறு பாம்புகளின் நடமாட்டம் அதிகம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தவாரம் மறவன்புலவில் ஒருவர் புடையன்பாம்புக் கடிக்கு இலக்கானார். கடந்த சனிக்கிழமை அறுகு வெளிப்பகுதியில் ஒருவர் புடையன பாம்புக்கடிக்கு இலக்காகி யாழ்.போதனாவைத்தியசாலை அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்பொது மழை வீழ்ச்சி அதி கரித்த நிலையில் இப்பாம்புகளின் பெருக்கம் அதிகரித்திருப்பதாகவும் வரம்புப் பகுதிகளில் இவற்றின் நடமாட்டம் காணப்படுவதாலேயே இவ்வாறு அறுவடைக்காக வயலுக்குச் செல்லும் தொழிலாளர்கள் பாம்புக்கடிக்கு இலக்காவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# மரண விசாரணையை நடத்த உரிய அதிகாரிகள் இல்லை

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச வைத்தியசாலையில் மரண விசாரணை அதிகாரி மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் இல்லாமையால் இப்பகுதி மக்கள் பல சிரமங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.


அண்மையில் தெல்லிப் பளைப் பகுதியில் குளவி கொட்டிய சம்பவம் தொடர்பாக மரணம் அடைந்த வல்லி திருநாவுக்கரசு என்பவரது உடல் தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து நேரடியாக உறவினர்களினால் பொறுப் பேற்க முடியாத நிலை காணப்பட்டது.

தெல்லிப்பளை வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்செல்லப்பட்ட குறித்த நபர் அங்கு மரணமானதைத் தொடர்ந்து அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக தெல்லிப்பளையில் இருந்து யாழ்ப்பாண வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே உறவினர்களிடம் இவரது உடல் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை இடம் பெயர்ந்து இன்னல்களை அனுபவித்து தற்போது மீளக்குடியமர்ந்த நிலையில் தெல்லிப் பளையில் இருந்து இறந்து உடலை யாழ்ப்பாணம் வரை கொண்டு சென்று மீளவும் தெல்லிப்பளை வரைகொண்டு வருவதற்கான செலவுகளையும் உறவினரே செலுத்தவேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலமைகள் தொடர்ந்து நிகழாத வண்ணம் தெல்லிப்பளை மாவட்டவைத்திய சாலையில் சட்ட வைத்திய அதிகாரி, மரண விசாரணை அதிகாரி ஆகியோரை நியமிக்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (17)

# முறிகண்டிப் பிள்ளையார் ஆலய புனிதத்தன்மை பாதுகாக்கப்படுமா?



(கல்வயல்)

ஏ-9 வீதியில் அமைந்துள்ள திருமுறிகண்டிப்பிள்ளையார் ஆலய சூழலில் வைக்கப்பட்டிருக்கும் குப்பைத்தொட்டிகள் உரியமுறையில் மூடப்பட்டாமல் திறந்த நிலையில் காணப்படுவதால் இங்கு தேங்கி கிடக்கும் குப்பைககளை கட்டாக்காலி கால்நடைகள் கிளறி சின்னாபின்னப்படுத்துவதால் அப்பகுதியின் புனிதத் தன்மை சீர்கெடுவதாக பொதுமக்கள் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணத்தை மேற்கொள்வோர் இவ்வாலயப் பகுதியில் சற்று இளைப்பாறிச்செல்லும் நிலையில் இவ்வாறு வரும் சுற்றுலாப் பயணிகள் எஞ்சிய உணவுப் பொருட்கள், பொலித் தீன் பைகள், வெற்றுசோடாப் போத்தல்கள் என்பவற்றை குப்பைத் தொட்டிகளில் போட்டு விட்டு செல்கின்றனர்.

இந்நிலையில் இவ்வாறு குப்பைத்தொட்டியில் தேங்கிக் கிடக்கும் கழிவுப்பொருட்களை ஆலய நிர்வாகத்தினர் உரிய வகையில் அப்புறப்படுத்தினால் இவ்வாறான சுகாதார சீர் கேடுகள் ஏற்படுவதைத்தவிர்க்க முடியும் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கால்நடைகள் குப்பைகளை கிளறுவதால் பொலித் தீன்பைகள், சோடாப் போத்தல்கள் காற்றுடன் பறந்து வீதியில் கிடப்பதுடன் பறவைகளும் இவற்றை இழுத்து செல்கின்றன.

இதனால் துர்நாற்றம் வீசுவதாக தெரிவிக்கும் மக்கள் இவ்வாலய சூழலின் புனித் தன்மையை கருத்தில் கொண்டு உரியவர்கள் குப்பை களை உரியவகையில் அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்களும் பயணிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (43)

வெற்றியின் போது கை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம். பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நேய உரையாடலைத் திறப்போம்!

தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று இத்தனை காலமாகத் தமிழரின் அரசியலைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்கள், தமிழ் மக்களின் அரசியலுரிமைகள் தொடர்பாக எந்த புத்திசாலித்தன முடிவையோ, திட்டமிட்ட நகர்வையோ காண்பித்ததாய் வரலாற்றில் தடயம் இல்லை.

இப்போதும், சர்வதேசம் எதையாவது செய்யும் தானே என்ற காத்திருப்பும், ஆட்சி மாறினால் ஐ.தே.க. அரசில் தங்களுக்கான சொந்த சலுகைகளை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்புமே மிச்சமாக இருக்கிறது. இலங்கையில் ஆட்சி மாற்றத்தை இவர்கள் மட்டுமல்லாது அமெரிக்க, ஐரோப்பிய அரசுகளும் ஐக்கிய தேசியக் கட்சியும் சேர்ந்து விரும்புகின்றன.

இதையே தமிழ் மக்களும் விரும்புகின்ற அரசியலாக இவர்களும் இவர்களது ஊடகப் பலமும் கட்டமைத்துக் காட்டுகின்றன. ஆட்சியை மாற்றிவிட்டால், தமிழ் மக்களுக்கு என்ன கிடைக்கும், எதைப் பெற்றுத் தரமுடியும், அப்படித் தரக்கூடியவர்கள் யார், அவர்கள் அதுபற்றி ஏதேனும் உறுதியளிக்கிறார்களா என்பது பற்றியெல்லாம் யாரும் எதுவும் பேசுவதில்லை. அக்கரைப் பச்சையைக் காட்டியபடியே காலத்தை ஓட்டுவதுதான் இவர்களது அரசியல் வேலைத் திட்டம்!

சரி, இப்போதைக்கு இலங்கையில் ஆட்சி மாற்றம் நடக்கக்கூடிய வாய்ப்பு ஏதாவது இருக்கிறதா என்றால், குறைந்தது ஐந்து வருடங்களுக்கு இல்லை என்பது அரசியல் அரிச்சுவடி தெரிந்தவர்களுக்கும் விளங்கும். அத்தகைய நப்பாசைகளைப் பரவவிட்டுவிட்டுக் காத்திருப்பதென்பது, காலமறிந்து தமிழ்மக்களுக்குத் தேவையான அரசியலைச் செய்யவோ சொல்லவோ முடியாமல் இதுகாலவரை செய்துவந்த ஏமாற்று சுயநல அரசியலின் தொடர்ச்சிதான்.

இப்போதைக்கு எந்தத் தேர்தல் நடந்தாலும் ஆட்சியைப் பிடிக்கக்கூடிய நிலையில் எதிர்க்கட்சி இல்லை. தொடர்ந்து முப்பதுக்கு மேற்பட்ட தேர்தல்களில் தோல்வியைத் தவிர வேறெதுவும் காணாத கின்னஸ் சாதனையுடனேயே எதிர்க்கட்சித் தலைமை இருக்கிறது. அந்தக் கட்சியில் வேறு நம்பிக்கைக்குரிய, கவர்ச்சிமிக்க தலைமைகளாகவும் யாருமில்லை. ஆளும் கட்சியில் இருப்போரை விட மென்போக்குடையவர் என்றோ, தமிழ் மக்களுக்கு தீர்வுதர இசையக் கூடியவர் என்றோ கூட அங்கே எந்தத் தலைமையும் இல்லை. எதிர்க்கட்சியாக இருக்கும்போது கூட அத்தகைய உறுதிமொழிகளையோ, இதுதான் நாம் ஆட்சிக்கு வந்தால் தமிழர்களுக்குத் தரப்போகும் தீர்வு என்றெதையுமோ சொல்ல அவர்கள் தயாரில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதுடெல்லியிலும் ஐரோப்பாவிலும் பேசிவரும் பேச்சுக்களை வைத்து, ஆட்சிமாற்றம் அவர் வடிவிலாவது வர வாய்ப்பிருக்குமா என்றும் சிலருக்கு அங்கலாய்ப்பிருக்கிறது. இலங்கையில் இன்றிருக்கும் யதார்த்தத்தை ஜீரணிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் திணறும் கற்பனாவாதிகளால் எப்படி நடைமுறைச் சாத்தியமான திட்டங்களையும் தீர்வையும் பற்றி யோசிக்க முடியும்? இனத்தனித்துவச் சிந்தனையிலிருந்து இன்றும் இறங்கிவர முடியாத் தத்தளிப்பு இது.

தமிழர்கள் இன்றும் புலிக்காலச் சவாலுடனேயே இருக்கிறார்கள் என்ற மனப்பதிவே நம் தரப்பிலிருந்து சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதுதான் இன்றைய ஆட்சியின் ஸ்திர நிலைமைக்குக் காரணம். அப்படியிருக்கையில் சந்திரிகா போன்ற மென்போக்குடைய ஒருவர் ஆட்சிமாற்றத்திற்கு வழிவகுக்க முடியும் என்று யோசிப்பது பவளக்கொடிக் கனவல்லாமல் வேறென்ன?

தமிழர்களாகிய நாம் சிங்கள மக்களுடனான நேயு உரையாடலைத் திறக்காமல் இங்கு எந்த மாற்றமுமில்லை. அவர்களிடம் நம்மைப் பற்றி இருக்கும் சந்தேகங்கள் அகன்றால்தான் எந்த ஆட்சியாளரும் இங்கு தீர்வைக் கொண்டுவர முடியும். ஆட்சியாளர்களும் தமிழ்த் தலைமையும் இனமுரணை வளர்த்து தங்கள் அரசியலிருப்பை உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள் என்பது நம் விமர்சனமாக இருந்தால், அவர்களைக் கடந்து, நாம் சிங்கள மக்களிடம் செல்ல வேண்டும். வேறு குறுக்கு வழிகள் இல்லை. - ஆசிரியர்

# யாழில் காணியற்றவர்களுக்கு அரச காணி பகிர்ந்தளிக்க ஏற்பாடு

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

30 வருடங்களுக்கு மேலாக சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் காணியற்ற நிலையில் இருக்கும் குடும்பங்கள், காணி சீர்திருத்த ஆணைக்குழவிடம் வேண்டுகோள் விடுத்தால் அவர்களுக்கு காணி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென்று மேற்படி ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி என். விமலராஜ் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் பல் வேறு பிரதேசங்களிலும் மக்கள் 30 வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு காணிகளற்ற நிலையில் வாழ்பவர்கள் மற்றும் காலாகாலமாக காணிகளின்றி வாழும் குடும்பங்கள் தமது பிரிவு கிராம சேவகரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன், பிரதேச செயலர் ஊடாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்படும் நிலையில் காணிகள் வழங்கப்படும் என அவர் கூறினார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் உள்ள காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவாவினால் பரிசீலிக்கப்பட்டு, காணிகளற்றவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று அவர் மேலும் கூறினார். (25)

# டெங்கு நோய்த் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றும் நேற்று முன்தினமும் நால்வர் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் மானிப்பாய் மற்றும் சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் இருந்து இருவரும் நேற்றுமுன்தினம் நல்லூர் மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் இருந்து இருவரும் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். அத்துடன் இந்த வருடம் இதுவரை 104 பேர் இவ்வாறு டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகி இவ வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை அண்மையில் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய்க்கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதனை அடுத்து இந்த நோய்த் தொற்றுக்கு இல்க்காகி சிகிச்சைபெற வருபவர்களின் எண்ணிககை சற்றுக் குறைந்திருப்பதாகவும் வைத்தியசாலை அதிகாரி மேலும் குறிப்பிட்டார். இதேவேளை தொடர்ந்து டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகும் பகுதிகளில் அதனைத்தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலமும் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதன் மூலமும் இந் நோயைக்கட்டுப்படுத்த முடியும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (பா)

## போதைப்பொருள் வைத்திருந்தவருக்கு மரண தண்டனை தீர்ப்பு

போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான நபர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கேகாலை மேல் நீதிமன்றம் நேற்று இந்த தண்டனையை வழங்கியுள்ளது. புத்தளம் - மதுரங்குளிய பிரதேசத்தில் வசிக்கும் 52 வயதான ஒருவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் இவர் கடந்த 2004 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். கைது செய்யும் போது இவரிடமிருந்து 25 கிராம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. இவர்மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிருபிக்கப் பட்டுள்ளவேளையில் நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## வயல் அறுவடையில் ஈடுபட்ட தமிழ் நாட்டவர்கள் கைது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து சுற்றுலா விசாவில் வந்து பாலமுனை வயல் பிரதேசத்தில் வேளாண்மை வெட்டும் இயந்திரத்தில் வேலை செய்து கொண்டிருந்த மூன்று தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை நேற்றுக்காலை கைது செய்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி ஹயா முகைடீன் தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து பாலமுனை வயல் பிரதேசத்தில் மேற்கொண்ட தேடுதலின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தில் கைது செயயப்பட்டவர்களை அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் ,மேற்கொண்டு வருகின்றனர்.

# மருந்து இறக்குமதி மோசடி ஒய்வுபெற்ற அதிகாரி கைது

(கொழும்பு)

இலங்கைக்கு மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக போலியான முறையில் பங்களாதேஷ் அரசாங்கத்துடன் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த முற்பட்ட இலங்கை சுகாதார அமைச்சின் ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.வெளிநாட்டு அரசாங்கங்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு இலங்கைக்கு மருந்துப்பொருட்களை இறக்குமதி செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்திருந்தது.

இது தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் இந்தியா சென்றிருந்தபோது, அங்கு வந்திருந்த பங்களாதேஷின் சுகாதார அமைச்சரை சந்தித்துள்ளார்.

இதன்போது, இலங்கைக்கு மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யும் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்காக, சுகாதார அமைச்சின் பிரிதிநிதி ஒருவர் பங்களாதேஷ் வந்ததாகவும், அவர் கூறிய உடன்படிக்கைக்கு தமது அரசாங்கம் இணக்கம் வெளியிட்டதாகவும் பங்களாதேஷின் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும் தாம் அவ்வாறான பிரதிநிதி யாரையும் பங்களாதேஷிற்கு அனுப்பவில்லை என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அவரிடம் விளக்கமளித்துள்ளார். பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சுகாதார அமைச்சில் இருந்து ஓய்வு பெற்ற சிரேஷ்ட அதிகாரி ஒருவரே, இவ்வாறு போலியான நாடகம் ஒன்றை நடத்தியிருக்கின்றமை தெரிய வந்துள்ளது. இதன்மூலம் அவருக்கு பாரிய தரகுப் பணத்தொகை ஒன்று கிடைத்திருப்பதாக கூறப்படுகிறது.

## முச்சக்கர வண்டிகளுக்கு அலங்கார சட்டம் தளர்வு

முச்சக்கர வண்டிகளை அலங்கரிக்கும் பகுதிகளை பொருத்துவது தொடர்பில் இருந்த சட்ட திட்டங்களை, மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தளர்த்தியுள்ளதாக ஆணையாளர் எச்.ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி முச்சக்கர வண்டிகளை அலங்கரிக்கும் சுமார் 70 உபகரணங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளது.

# பங்கு பிரிப்புக்களும் படு கொலையும் 09



**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கையில் மே மாதம் 2009ஆம் ஆண்டு முடிவிற்கு கொண்டுவரப் பட்ட பின்னர் புலம் பெயர் நாடுகளில் எஞ்சியிருக்கும் அதன் கட்டமைப்பின் இன்றைய சமகாலப்பார்வை.**



சாத்திரி

இலங்கை போன்ற சிறிய நாடுகள் மேற்குலக நாடுகளிற்குள் புகுந்து அரசியல் கொலைகளை செய்வதற்கு துணிய மாட்டாது என்பதை யாரும் புரிந்துகொள்ள முடியும். அதுவும் Le Parisien பத்திரிகையில் வெளி வந்தது போல் இலங்கையரசின் தூதரகம் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்காது. இலங்கைத் தூதரகத்திற்கே தெரியாமல் இலங்கை புலனாய்வுத் துறை வேறு தரகர்கள் ஊடாக கூலிக் கொலையாளர்களை வைத்து நடத்தியிருந்ததை பிரெஞ்ச் புலனாய்வுத் துறை அதை கண்டுபிடித்திருந்தாலும் பிரெஞ்ச் அரசு, விசாரணைக் கைதிகள் என்கிற பெயரிலேயே ஆறு அல்லது ஏழு வருடங்கள் கழித்து எச்சரித்து விடுவித்து விடுவார்கள். அவர்கள் விடுவிக்கப்பட்ட செய்தி எந்த ஊடகத்திலும் வராது. ஆனால் உண்மையில் என்ன நடந்தது என்பதனை ஊடுருவி தேடல்கள் நடத்தி கண்டுபிடித்து கொலையை வெளியே கொண்டு வரும் அளவிற்கு எம்மவரின் எந்த ஊடகமோ ஊடகர்களோ இல்லை. எங்களை நாங்களே மகிழ்ச்சிப்படுத்த எழுதும் ஊடகங்களும் தலைப்பை மட்டும் மாற்றி விட்டு வெட்டி ஒட்டும் ஊடகங்கள் மட்டுமே எம்மிடம் உள்ளன. எனவே, பரிதியின் கொலை என்பது இன்னும் சில காலங்களில் மறக்கப்பட்டதொன்றாகவே மாறிவிடும்.

இது இப்படியிருக்க, அனைத்துலகச் செயலகம் அடுத்த கட்ட ஆயுதப் போரை நடத்தப் போவதாக கூறியிருப்பது தெய்வீகன் என்கிற நபரை வைத்துத்தான். தெய்வீகன் என்பவர் யாரென்று சுருக்கமாக பார்த்து விடலாம். இவர் புலிகள் அமைப்பில் ஒரு அமைப்பின் இறுதி முயற்சியான ஆனந்தபுரம் ஊடறுப்பு சமர் நடந்த வேளை அதற்கு தலைவர் பிரபாகரனே நேடியாக நின்று கட்டளைகளை வழங்கியிருந்ததும், அது தோல்வியில் முடிந்து புலிகள் அமைப்பின் முன்னணி தளபதிகளும் ஆயிரக்கணக்கான போராளிகளும் பலியானதோடு தலைவர் பிரபாகரன் உயிர் தப்பியிருந்தார். அந்த சண்டைக்காக மேலதிக ஆயுத மற்றும் காய



மடைந்தவர்களிற்கான அவசர மருத்துவ உபகரணங்களை வழங்குமாறு களத்தில் நின்றிருந்த தளபதிகள் தெய்வீகனை தொடர்பு கொள்ள முற்பட்ட வேளை, தனது தொடர்புகள் அனைத்தையும் துண்டித்து விட்டு காணாமல் போயிருந்தவர். மீண்டும் 2010-ம் ஆண்டு தை மாதமளவில் இந்தியாவில் மதுரையில் நடமாடத் தொடங்கியிருந்தார்.

அவரோடு வெளியக புலனாய்வுத் துறையின் புகழேந்தி மற்றும் தென்னவன் அல்லது கரிகாலனும் மதுரையில் தங்கியிருந்து புலிகளின் காலகட்டத்தில்தான் இலங்கை வான்படையின் உலங்கு வானூர்தியொன்று காலநிலை காரண-மாக காட்டுப் பகுதியில் விபத்திற்குள்ளாக அதனை ராமின் தாக்குதலிற்குள்ளானதாக வெளி நாடுகளில் பிரசாரம் செய்யவும் அனைத்துலகம் முயன்றிருந்தது.

பின்னர் சில காலங்கள் தெய்வீகனின் தொடர்பு அறுந்து போயிருந்ததோடு, தென்னவன் (கரிகாலன்) பிரான்ஸ் வந்து சேர்ந்ததும் மீண்டும் அனைத்துலக செயலகம் மற்றும் பழைய வெளிநாட்டு கட்டமைப்பை சேர்ந்தவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்துகிறார். அப்பொழுது மீண்டும் என்னுடன் ஒரு தொடர்பையும் ஏற்படுத்தியிருந்தார். இவர்தான் தற்சமயம் அனைத்துலக செயலகத்தோடு சேர்ந்து நின்று தெய்வீகனால் அடுத்த கட்ட ஆயுதப் போரை வழிநடத்த முடியும் என்று அவர்களையும் நம்பவைத்து தெய்வீகனோடு தொடர்புகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளார். ஆயுதப் போர் நடக்கிறதா இல்லையா அனைத்துலகம் மக்களையும்... தெய்வீகன் அனைத்துலகத்தையும் ஏமாற்றுகிறாரா என்பதையெல்லாம் விட்டு விட்டு பார்த்தால், இறுதியாக மாவீரர் தினத்தின் போது யாழ். பல்கலைக்கழகத்து பிரச்சினைகளின் பின்னால் யாழில் பல மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் அதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டிலும் சில கைதுகள் நடந்து செய்திகளில் வெளிவந்தவைதான். ஆனால் அதன் பின்னால் இருந்த

தமிழர்களிற்கு அநீதி நடந்து விட்டது என்று இலங்கையரசை குற்றம் சாட்டவோ ஐ.நா சபையில் இலங்கைக்கெதிராக தீர்மானமோ அல்லது தமிழீழத்தை வாங்கித் தரவோ போவது கிடையாது. பிரான்ஸ் தன்னுடைய நலனிற்கு தேவையான ஏதோ ஒன்று இலங்கையிடமிருந்து பெற முடியுமானால் இலங்கையரசுடன் பேரம் பேசி இலங்கையை அடி பணிய வைத்து தன்னுடைய தேவையை தீர்த்துக்கொள்ளும். அதேநேரம் பரிதி கொலைக்காக நீதி கேட்டு கூட்டம் போட்டாலென்ன பாரிஸில் இருந்து ஐ.நா சபை வரை பிரதட்டை, தூக்கு காவடி என்று எடுத்தால் கூட ஒன்றும் நடக்கப்போவதில்லை. காரணம் பரிதி பிரான்ஸில் தடைசெய்யப்பட்டதொரு அமைப்பின் பிரதிநிதி என்பதோடு, பிரெஞ்ச் காவல்துறையின் கண்காணிப்பில் இருக்கின்ற ஒரு முன்னை நாள் கைதி.

ஆனால் தற்சமயம் பரிதியின் கொலை விசாரணை உள்வீட்டு விவகாரம் என்கிற கோணத்திலேயே தான் போய்க்கொண்டிருக்கின்றது. கைதானவர்கள் பரிதியோடு நெருக்கமாக இருந்த ஒரு வன்முறைக் குழுவினர். பரிதி தலைமைச் செயலகத்துடன் இணைவதை விரும்பாத சுவிஸ் ரகுபதியும், லண்டன் தனமும் கொடுத்த அழுத்தத்தினால் இரும்பொறையே பாம்பு குழுவிடம் பரிதியை போடச் சொல்லியிருக்கலாம். இப்படி நடந்ததை பிரெஞ்ச் காவல்துறை உறுதி செய்தாலும், செய்ததும் தமிழன் செத்ததும் தமிழன், எனவே கணக்கு தீர்த்தல் என்கிறவகையில் இந்தக் கொலையை அடக்கி, கைது செய்யப்பட்டவர்கள்

**உண்மையில் என்ன நடந்தது என்பதனை ஊடுருவி தேடல்கள் நடத்தி கண்டுபிடித்து கொலையை வெளியே கொண்டு வரும் அளவிற்கு எம்மவரின் எந்த ஊடகமோ ஊடகர்களோ இல்லை. எங்களை நாங்களே மகிழ்ச்சிப்படுத்த எழுதும் ஊடகங்களும் தலைப்பை மட்டும் மாற்றி விட்டு வெட்டி ஒட்டும் ஊடகங்கள் மட்டுமே எம்மிடம் உள்ளன.**

இளநிலை போராளி விமான ஓட்டியாக பயிற்சி பெறுவதற்காக புலிகள் அமைப்பினால் கிழக்கு ஐரோப்பிய நாடொன்றிற்கு அனுப்பி விமான ஓட்டிக்கான கல்வியும் பயிற்சியும் பெற்றவர். அதில் தேர்ச்சி பெறாததால் திரும்பவும் வன்னிக்கு அழைத்து புலிகளின் உள்ளக புலனாய்வுப்பிரிவில் இணைக்கப்பட்டிருந்தார். இறுதிக்கட்ட யுத்தத்தில் இவரே வழங்கலிற்கும் பொறுப்பாக இருந்தவர். புலிகள் அனைத்துலக செயலகத்தின் வெளிநாட்டு கிளைகளோடு தொடர்புகளை ஏற்படுத்தி தாங்கள் இன்னமும் பலநூறு போராளிகளுடன் வன்னி காடுகளிற்குள்ளேயே நிற்பதாகவும் மறுபக்கம் கிழக்கு மாகாண காட்டிற்குள் ராமும் தங்களோடு தொடர்பில் இருப்பதாகவும் ராமின் தலைமையில் அடுத்த கட்ட தாக்குதல்களை நடத்துவதற்காக தங்களிற்கு ஆயுதங்களை பெறுவதற்காகவும் அத்தியாவசிய தேவைகளிற்காவும் நிதி உதவி கோரியிருந்தார்கள். அதை நம்பி அனைத்துலக செயலகமும் பணம் அனுப்பியிருந்தது.

அன்றைய காலகட்டத்தில் தென்னவன் என்கிற கரிகாலனும் என்னுடன் தொடர்புகளை ஏற்படுத்தி கதைத்திருந்தார். பணத்தை அனுப்பி விட்டிருந்த அனைத்துலகச் செயலகத்தினர் தாக்குதல் எதுவும் நடக்காததால் ஏமாற்றமடைந்து ராமோடு தொடர்புகளை ஏற்படுத்தி ஏதாவது தாக்குதல் செய்தால் தான் இங்குள்ள மக்கள் நம்புவார்கள். அப்பொழுதான் பணம் சேகரித்து அனுப்பலாம். ஏதாவது தாக்குதலை செய்யும்படி கேட்டிருந்தனர். ஆனால் இதுவரை காலமும் தலைவரின் கட்டளைக்கிணங்கவே தான் தாக்குதல்களை நடத்தியதாகவும் . வெளிநாட்டிலிருந்து வரும் கட்டளைகளிற்கிணங்க தன்னால் இயங்க முடியாது தலைவரின் கட்டளை வரா-மல் தன்னால் எதையும் செய்ய முடியாதென ராம் எவ்வித தாக்குதலையும் செய்ய மறுத்து தெய்வீகனின் தொடர்பும் தனக்கு இல்லையென்று அவர்களிற்கு சொல்லிவிட்டிருந்தான். பின்னர் ராமிற்கும் எனக்கும் நடந்த உரையாடல்களின்போது அதை தெரிவித்திருந்தான். அன்றைய

தெய்வீகனும் புகழேந்தியும் தமிழ் நாட்டில் மதுரையில் சுதந்திரமாகத்தான் நடமாடுகின்றார்கள். அதாவது இந்தியாவின் இலங்கை மீதான அடுத்த கட்ட மேலாதிக்க நடவடிக்கைகளிற்கு தொடர்ந்தும் பலியாகப் போவது நாங்களா? அதற்கு அனுசரணை புலிகளின் வெளிநாட்டு கிளைகளான அனைத்துலக செயலகமா? இது கேள்வி மட்டும் தான். பதில் எனக்கும் தெரியாது. காலம்தான் பதில் சொல்லும்.

இறுதியாக ஒரு விடயம். அனைத்துலகச் செயலகத்தின் டென்மார்க் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவானது பிரியனின் தலைமையில் அண்மைக்காலமாக தாயகத்தில் மக்களிற்கான உதவிகளைச் செய்து வருகிறது. அதே போல சுவிஸ் இளையோர் அமைப்பும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் தங்கள் பிரதிநிதி-களை கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி கிழக்கு மக்களிற்கு உதவுகின்றது. இந்த மாற்றம் வரவேற்கப்பட வேண்டிய விடயம். இவர்களை முன்மாதிரியாக எடுத்து மற்றைய நாடுகளில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்பு குழுக்களும் வீணே ஊருக்கு போகின்றவன் உதவி செய்பவன் எல்லோரையும் துரோகி என்றும் அடுத்த கட்ட ஆயுதப்போர் என்றும் கதைவிட்டு காலத்தை கடத்தாமல் தாயகத்து மக்களிற்கான உதவிகளைச் செய்து அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்திவிடுவதே இனிவரும் காலங்களில் செய்யக்கூடிய தொன்றாகும். செய்வார்களா???

(முற்றும்)

# குரோதங்களை வளர்ப்பதில் மாணவர்கள் ஈடுபடக் கூடாது

## - ஜனாதிபதி அறிவுரை



(கொழும்பு)

சிறார்கள் எதிர்காலத்தில் மதவாத மற்றும் இனவாத குரோதங்களை அதிகரிப்பதில் இருந்து விலகியிருக்க வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆயிரம் பாடசாலைகளை மேம்படுத்தல் செயற்றிட்டத்திற்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டாவது பாடசாலையை திறந்து வைக்கும் நிகழ்வு மாத்தறையில் இடம் பெற்றது.

மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் என பெயரிடப்பட்டுள்ள குறித்த பாடசாலை மாத்தறை - ரஸ்ஸன்தெனிய பிரதேசத்தில் 24 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நிகழ்வில தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, எதிர்கால தலைமுறையினரின் மத்தியில் முற்போக்கான நிலைப்பாடுகளை மேம்படுத்துவதற்கு பெற்றோர் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.


பெந்தர மற்றும் களனி பாலங்களுக்கு அப்பாலும் அபிவிருத்திப் பணிகளை கொண்டு சென்றது தமது அரசாங்கமே என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். திறன் காண் பரீட்சைகளில் மாணவர்கள் வெளிக்காட்டும் திறமைகளால் அவர்களின் முற்போக்கான சிந்தனை வெளிப்படுவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, முழுமையான தலைமைத்துவப் பண்பை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தலைமைத்துவப் பண்பு நாட்டை ஆளுபவர்களுக்கு மாத்திரம் இருந்தால் போதாது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாட்டின் எதிர்கால பயணம் மிகவும் சுலபமானதாக அமையும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தின் 2013ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பதக்கம் அணிவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

# முப்பது அடி பள்ளத்தில் பாய்ந்தது முச்சக்கர வண்டி

## ஐந்து பேர் வைத்தியசாலையில் அனுமதி



கொட்டகலையில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியொன்று விபத்துக்குள்ளானதில் காயமடைந்த ஐவர் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு ஹட்டன் ரயில்வே கடவைக்கு அண்மையில் இடம்பெற்ற இவ்விபத்தில் முச்சக்கர வண்டி பாதையை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

காயமடைந்த ஐவரில் மூவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் சிறிய குழந்தை ஒன்றும் அடங்குவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அதிக வேகம் காரணமாக வண்டியை கட்டுப்படுத்த முடியாத நிலையில் வண்டியில் ஏற்பட்ட கோளாறே விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# ஹெரோயினுடன் கைக்குண்டு மீட்பு

(கொழும்பு)

ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் பதுளை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். பதுளை-யக்காராம பிரதேசத்தில் லொறி ஒன்றை பொலிஸார் சோதனை நடத்தியுள்ளனர்.

இதன்போது இரண்டு கிராம் ஐம்பது மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் கைகுண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 3000 சாரதிகளுக்கு புள்ளிக்குறைப்பு

இலங்கையில் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளின் அனுமதிப்பத்திரங்களின் புள்ளிகளை குறைப்பது தொடர்பான புதிய சட்ட முறைமை கடந்த மாதம் அமுலுக்கு வந்த நிலையில் பெருந்தொகையான சாரதிகள் தமது புள்ளிகளை இழந்துள்ளனர்.

இதனடிப்படையில், மது போதையில் வாகனத்தை செலுத்திய 3,000இற்கு மேற்பட்டவர்களுக்கு எதிராக புள்ளிகள் குறைக்கப்பட்டுள்ளன.

அவர்களில் 24 புள்ளிகளையும் இழந்த மூன்று சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரங்கள் நிரந்தரமாக இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத்திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமுல்படுத்தப்பட்ட புதிய சட்டத்திற்கு அமைய மதுபோதையில் வாகனங்களை செலுத்துபவர்களின் 12 புள்ளிகள் குறைக்கப்படும்.

அதேவேளை, பாரிய வீதி விபத்துக்களை ஏற்படுத்துவதற்கு காரணமாக உள்ளவர்களின் 12 புள்ளிகள் அகற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சாரதிக்கும் வழங்கப்பட்டுள்ள மொத்த 24 புள்ளிகளையும் இழக்கும் பட்சத்தில், அவர்களது சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செயயப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேல் மாகாணத்திலேயே அதிக அளவிலான போக்குவரத்து குற்றச் செயல்கள் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீயினால் சுடப்பட்டதால் ஒரு கை செயலிழந்துள்ளது

## வெளிநாடு சென்ற பெண்ணின் அனுபவம்




(கொழும்பு)

திருமணத்திற்கு பணம் சம் பாதிக்கும் நோக்கில் வெளிநாட்டிற்கு சென்ற பெண் ஒருவர் அங்கவீனமான நிலையில் நாடு திரும்பியுள்ளார்.

பாதுக்கை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதான இந்திகா குமாரி என்ற பெண்ணே இவ்வாறு நாடு திரும்பியுள்ளார். கடந்த வருடம் நவம்பர் மாதம் 5ஆம் திகதி கொழும்பிலுள்ள தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஊடாக வெளிநாடு சென்ற இந்திகா இம்மாதம் 6ஆம் திகதி நாடு திரும்பியுள்ளார்.

குறித்த தனியார்ர் நிறுவனம் டுபாய்க்கு அழைத்துச் செல்வதாக தெரிவித்து தம்மை ஈராக்கிற்கு அனுப்பியதாகவும் ஈராக்கில் தமக்கு பாரிய கொடுமைகள் இழைக்கப்பட்டதாகவும், தீயினால் சுடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் தமது ஒரு கை செயலிழந்துள்ளதாக அவர் குறிப்பிடுகிறார். இந்த சம்பவம் தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் வினவியபோது அது தொர்ட்பில் ஆராய்வதாக அதன் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய குறிப்பிட்டுள்ளார்.

# சம்மாந்துறை வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை வெற்றி



சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையொன்று வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது.

பத்து வயது சிறுவன் ஒருவரது ஆண் குறியில் சிறுநீர் வழி பிறப்பால் கீழ் நோக்கி இருந்தமையை சாதாரண நிலைக்குக் கொண்டு வரும் வகையில் இந்த பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையிலேயே இச்சத்திர சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் விசேட சத்திர சிகிச்சை நிபுணரான மருதமுனை டாக்டர் ஏ.டபிள்யூ.எம்.சமீமினால் இச்சாதனை நிலை நாட்டப்பட்டுள்ளது.

கல்முனைப் பகுதியைச் சேர்ந்த இச்சிறுவன் கல்முனையிலுள்ள வைத்தியசாலை ஒன்றினால் கொழும்பு பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு சத்திர சிகிச்சைக்கான காலம் இழுத்தடிக்கப்பட்டு வந்த சூழ்நிலையிலேயே சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இந்த பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான சத்திர சிகிச்சையை கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் மேற்கொள்வதாயின் இரண்டு இலட்சம் ரூபாவுக்கு மேல் செலவாகும் என்று கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிராமங்களை இணைக்கும் பெட்டிப்பாலம்



பலாங்கொடை இலுக்க மற்றும் எந்த கலயாய கிராமங்களை இணைக்கும் பெட்டி பாலம் இது.

இரண்டு மாவட்டங்களில் அமைந்துள்ள பலாங்கொடை மற்றும் தனமல்வில பிரதேச செயலகங்களின் எல்லையாக வலவே ஆறு அமைந்துள்ளது. இந்த பிரதேச மக்கள் வலவே ஆற்றை கடக்கும் விதம் வியப்புக்குரியது.

# மாணவர்களின் சிறப்பான கற்றலுக்கு புறச்சூழல் மிக முக்கியமானதாகும்



(யாழ்ப்பாணம்)

மக்களின் வளமான வாழ்விற்கு தேவையான அனைத்து வசதிகளும் நிறைவேற்றித் தரப்படுமென ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

உடுவில் தெற்கு மானிப்பாய் யாழ்.புதுமடம் றோ.க.த.க. பாடசாலை வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போக்குவரத்திற்கு சிரமமாக காணப்படும் வீதிகள், பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான வகுப்பறைத் தொகுதிகள் மேலும் அவர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குரிய பாடவிதான செயற்பாடுகள் போன்ற அனைத்து வசதிகளையும் நாம் எமது மக்களுக்கு பாரபட்சம் இன்றி படிப்படியாக நிறைவேற்றி வருகின்றோம்.

எமது பிரதேச மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்த நிலையில், தற்போது தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிக்கொண்டு இருக்கிறார்கள். இந்நிலையில் வரும்கால சந்ததியினருக்கு தற்போது மிகவும் அத்தியாவசியமாக உள்ளது மாணவர் பராய கல்விச்செயற்பாடே. எனவே எமது குடும்பங்களின் உள்ள இன்னல்களினை பிள்ளைகளின் மனதில் விதைத்து அவர்களின் கல்விச்செயற்பாட்டிற்கு பங்கம் விளைவிக்காது அவர்கள் இயல்பான ஓர் சூழலில் கல்விகற்க இடமளிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அத்துடன் பாடசாலை அதிபர் அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றித்தரப்படும் என உறுதிபடத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், சமாதான நீதவான் தேசமானி லயன். செல்வராஜா, வலிகாமம் கல்வி வலய முறைசாரக் கல்வி ஆசிரிய ஆலோசகர் செல்வி சி.வேலும் மயிலும், கிராமஅலுவலர் ந.நாகேந்திரராசா, ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்), ஈ.பி.டி.பியின் வலி.வடக்கு இணைப்பாளர் ஜெயபாலசிங்கம் (அன்பு) ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நெல்லியடி - பருத்தித்துறை வீதி அகலமாக்கும் பணி விரைவில்

(பருத்தித்துறை)

நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை வரையான வீதி அகலா மாக்கும் பணி எதிர்வரும் மார்ச்மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி 3 மாதத்திற்குள் முடிவடையும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன் முதல்கட்டமாக ஓராங்கட்டைச் சந்தியிலுள்ள மதகு கிராம கோட்டுச் சந்தியிலுள்ள மதகு ஆகியனவற்றை அகலாமகாக்கும் பணிகள் தொடங்கியுள்ளன. வீதி அகலமாக்கும் பணிகளின் நில அளவுகளை சீன பொறி யியலாளர்கள் அளந்து கணக்கெடுத்து வருகின்றனர்.

பருத்தித்துறை நகரத்தை ஒட்டிய கற்கள் யாவும் உடைக்கப்பட்டு வீதியை அகலமாக்குவதற்கு அப்பகுதி வர்த்தகர்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்கள். (109)

## கற்கைநெறிக்கான இறுதித் தேர்வுகள்

(சண்டிலிப்பாய்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா நிலை 1D, 2D கற்கை நெறி அலகுகளுக்கான கற்கை நெறி இறுதித் தேர்வுகள் எதிர்வரும் பங்குனி மாதம் ஆரம்பமாக உள்ளன.

இவ் அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வில் மீள் பரீட்சார்த்திகளாக தோற்றவுள்ள மாணவர்கள் மீன்பிடியியல் விஞ்ஞானத் துறையில் விண்ணப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்பாக மீன்பிடியியல் விஞ்ஞானப் பிரிவில் சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழக பதிவாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (54)

## நல்லூர் ஆலய சூழலில் கட்டாக்காலி கழுதைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் - பருத்தித்துறை வீதியில் தன்னிச்சையாக நடமாடும் இரண்டு கழுதைகளால், அவ்வீதியால் செல்லும் பொது மக்களும் பயணிக்கும் வாகன சாரதிகளும் பல இடையூறுகளையும் விபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

யாழ்.குடாநாட்டில் இவ்வாறான மிருகங்கள் காணப்படுவது அரிதாக இருக்கையில் குறிப்பிட்ட இரண்டு கழுதைகளும் ஒரு தனிநபருடைய வளர்ப்புமிருகங்களா அல்லது தன்னிச்சையாக வந்து சேர்ந்தனவா என்பது குறித்து அவ்வீதியால் பயணிக்கும் பலரும் கூறிச்செல்வதைக் அவதானிக்க முடிந்தது.

நேற்றுக்காலை 8.00 மணியளவில் மேற்படி நல்லூர் முன் வீதியில் இவ்விரண்டு கழுதைகளும் தறிகெட்டு ஓடியதன் நிமித்தம் மிதிவண்டியில் பயணம் செய்த மூவர் நிலைதடுமாறி விபத்துக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (138)

## ஆலய வீதி புனரமைப்பு



(கல்வயல்)

சாவகச்சேரி - மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்கு செல்லும் சாவகச்சேரி- புத்தூர் சந்தியிலிருந்து பருத்தித்துறை பிரதான வீதியை இணைக்கும் வீதிப்பகுதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி ஆலயத்தில் பங்குனி மாதங்களில் விசேட பொங்கல் வழிபாடுகள் இடம் பெற்றுவரும் நிலையில், பெருமளவிலான பக்தர்கள் பங்குனித்திங்கள் நாளில் இங்கு வருகின்றனர். இந்நிலையில் முன்னர் இவ் வீதி எவ்வித புனரமைப்புக்கும் உட்படாமல் மிகமோசமாக சேதமடைந்திருந்தது. இதனால் கனரக வாகனங்களின் போக்குவரத்து மற்றும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் பயணங்களை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் பொதுமக்களின் போக்குவரத்து தேவையையும் ஆலய பொங்கல் வழிபாட்டையும் கருத்தில் கொண்டு இவ் வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது. (43)

## பொய்யுள்



மூலபாரதி

### நிழல்கள்!

இவர்களுக் கெல்லாம் விளையாட்டு
இமயம் போகிறது விலைவாசி
அவனுக்கென தூங்கி விட்டான்
அகப்பட்டவன் நான் அல்லவோ?

மக்கள் இவ்விதம் தவிக்கையில்
மறக்கச் செய்யும் போராட்டம்
எக்கணம் வாக்கு வங்கியை
எகிறச் செய்வதே நோக்கமாம்.

குடிசை அடுப்புள் பூனையும்
குசாலாய் நித்திரை செய்திடும்
அடிதடி என்றால் புகைப்பட
ஆல்பம் பத்திரிகை போட்டிடும்.

## முரசின் இன்றைய பலன்

(19.02.2013 – செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் மாசி 07 ஆம் திகதி. நட்சத்திரம் ரோகிணி. பிற்பகல் 03.46 வரை. திதி நவமி முன்னிரவு 07.07 வரை. இராகுகாலம் 03.32 - 05.02 வரை. சுபநேரம் 11.02 - 12.32 வரை. அமிர்தசித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எதிர்கால நலன் குறித்த சிந்தனை. நல்லோரின் ஆலோசனை உதவும். தொழில் மாற்றம். அதிக பணவரவு. முக்கிய வீட்டுப்பொருள் வாங்குவீர்கள். திடீர் பயணம் உருவாகும். |
| ரிஷபம் | நல்லவர் செயலும் தவறாக தெரியும். தொழில், இருப்பதை பாதுகாப்பது நல்லது. அளவான வரவு. அரசு தொடர்பான அனுகூலம். மனதில் அச்ச உணர்வு. இழப்புகள் இருக்கும். |
| மிதுனம் | பேச்சு, செயலில் தயக்கநிலை இருக்கும். தொழில், நினைத்தது நிறைவேறும். அளவான பணவரவு. தாயின் தேவை நிறைவேற்றுவீர்கள். இசையால், மனம் இலகுவாகும். ஓய்வு. |
| கடகம் | மனதில் அன்பும், கருணையும். வாழ்வில் வளம். தொழில் செழித்து, பெருமிதம். உபரி பணவரவு. குடும்பத்தேவை நிறைவேறும். அறப்பணி செய்வீர்கள். சமூகத்தில் புகழ் ஓங்கும். |
| சிம்மம் | புதிய அனுபவம் கற்றுக்கொள்வீர்கள். செயல்கள் எளிதாய் முடியும். தொழில், செழிப்பு. உறவினர் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். இல்லறத்துணை விரும்பியதை தருவீர்கள். |
| கன்னி | கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். வளம் பெற, புதிய வாய்ப்பு. தொழில், திருப்திகரம் உபரி வருமானம். சுபநிகழ்ச்சி நடத்த திட்டம். புதிய முயற்சிகளுக்கு நற்பலன். |
| துலாம் | அதிக முயற்சி. தொழில், வளர்ச்சி அதிகரிக்கும். தனம் சேரும். சிறு மருத்துவ சிகிச்சை. எதிர்பாரா உதவி வரும். புத்திரர் விரும்பியதை தருவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| விருச்சிகம் | உடல்நலத்தில் அதிக அக்கறை. செயல்களில் கூடுதல் கவனம். தொழில், திட்டமிட்டது நிறைவேறும். சிறுஅளவில் கடன். புத்திரர் மகிழ்விப்பர். விருந்தும் கொண்டாட்டமும். |
| தனுசு | முன்னேறும் ஆர்வம். பேச்சில் சாமர்த்தியம். போட்டியில் வெல்வீர்கள். புதிய முயற்சிகள் தொடங்குவீர்கள். தொழில் வளர்ச்சி. உபரி பணவரவு. கடன் தீரும். விருந்து, உபசரிப்பு. |
| மகரம் | குடும்ப பெரியவர்களின் வார்த்தையை மதித்து செயல்படுவது நல்லது. தொழில், புதிய அணுகுமுறை. வரவு சுமார். போட்டி, பந்தயத்தில் ஈடுபட வேண்டாம். தியானம், சாந்தம் தரும். |
| கும்பம் | நேர்மை, சத்தியம் பின்பற்றுவீர்கள். சோதனைகளை தாண்டி நன்மை. தொழில் வளர்ச்சி. உபரி வருமானம். வீடு, வாகனம் மாற்றம். குடும்ப விவகாரத்தில் அனுகூலத்தீர்வு. |
| மீனம் | எடுத்த முயற்சிகளுக்குப் பலன். கூடுதல் உழைப்பால் லாபம். நண்பர்கள் உதவி. வெளியூர்ப் பயண வாய்ப்பு. கொடுத்த கடன் வரும். குடும்ப அன்யோன்யம். பிணி குறையும். |

## பிரேசில் ஓப்பன் ரென்னிஸ் அசத்தினார் நடால்



(சாவ் பாலோ)


பிரேசில் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஸ்பெயினின் நடால் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

பிரேசிலில் உள்ள சாவ் பாலோ நகரில் நடக்கும் இத்தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் நடால், ஆர்ஜென்ரீனாவின் டேவிட் நல்பாண்டியனை சந்தித்தார். இதன் முதல் செட்டை 6-2 என எளிதாக கைப்பற்றிய நடால், இரண்டாவது செட்டையும் 6-3 என வென்றார். முடிவில், ஸ்பெயினின் நடால், 6-2, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, கோப்பையைக் கைப்பற்றினார்.



பெண்களுக்கான உலகக் கிண்ணத்தை அவுஸ்ரேலிய அணி ஆறாவது முறையாகக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. நேற்று முன்தினம் இந்தியாவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை 114 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மன் சதுரங்கம் ஆனந்த் சம்பியன்



ஜேர்மனியில் நடந்த கிரீனிக் சதுரங்கக் கிளாசிக் போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சம்பியன் பட்டம் பெற்றார். கடைசி சுற்றில் அவர் நாடிச்சை வீழ்த்தினார்.

கறுப்பு நிற காய்களுடன் விளையாடிய ஆனந்த் 49ஆவது நகர்த்தலுக்கு பின்னர் வெற்றி பெற்றார். ஆனந்த் 6 புள்ளிகள் பெற்று சம்பியன் பட்டம் பெற்றார்.

## பிரசன்ன அமரசேகர ஓய்வு

(கொழும்பு)

400 மீற்றர் ஓட்டப் போட்டி முன்னாள் தேசிய சம்பியன் பிரசன்ன அமரசேகர விளையாட்டுத்துறையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

புதுமுக வீரர்களுக்கு வாய்ப்பளிக்கும் நோக்கில் தாம் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அவர் கூறுகிறார்.

அப்புத்தளை - அல்துமுல்லை பகுதியில் பிறந்த பிரசன்ன சம்பத் அமரசேகர பண்டார்ரவளை தர்மபால மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற காலத்தில் விளையாட்டுத் துறையில் பிரவேசித்தார்.

1996 ஆம் ஆண்டு அகில இலங்கை பாடசாலைகள் மட்ட விளையாட்டு விழாவில் அவர் 400 மீற்றர் ஓட்டத்தில் வெற்றியீட்டினார்.

2001ஆம் ஆண்டு கனடாவில் நடைபெற்ற உலக மெய்வல்லுநர் போட்டிகளில் 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் பங்கேற்ற பெருமையும் அவருக்குண்டு.

2004 ஆம் ஆண்டு முதல் தடவையாக 400 மீற்றர் ஓட்டத்தில் தேசிய சம்பியன் பட்டத்தை இவர் வெற்றி கொண்டார்.

2005ஆம் ஆண்டில் 400 மீற்றரை 44.47 செக்கன்களில் கடந்த பிரசன்ன தனது சிறந்த காலப்பெறுமதியையும் பதிவு செய்தார்.

## கட்டாரிலும் கலக்கல்



(டோகா)

கட்டார் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பெலாரசின் அஸரன்கா சம்பியன் பட்டம் வென்றார்.

கட்டார் ஓப்பன் ரென்னிஸ் தொடர் டோகாவில் நடைபெற்றது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் அஸரன்கா, அமெரிக்காவின் செரினாவைச் சந்தித்தார். டை பிரேக்கர் வரை சென்ற முதல் செட்டை 7-6 என கைப்பற்றிய அஸரன்கா, இரண்டாவது செட்டை 2-6 என இழந்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி செட்டில் அசத்திய அஸரன்கா 6-3 என தன்வசப்படுத்தினார். முடிவில், பெலாரசின் அஸரன்கா 7-6, 2-6, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, கோப்பையைக் கைப்பற்றினார்.

இத்தொடரில் அஸரன்கா, இரண்டாவது முறையாக (2012, 13) சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

## குற்றம் நிரூபணமானால் 25 வருட காலச் சிறை



(ஜோகனஸ்பேர்க்)

காதலியை சுட்டுக் கொன்ற பிஸ்டோரியஸ் வீட்டில் இருந்து இரத்தக் கறை படிந்த கிரிக்கெட் துடுப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க தடகள வீரர் ஆஸ்கர் பிஸ்டோரியஸ் (வயது - 26). மாற்றுத் திறனாளியான இவர், இரு செயற்கை கால்கள் பொருத்தப்பட்ட நிலையில் ஒலிம்பிக் உட்பட சர்வதேச போட்டிகளில் பங்கேற்றார்.

சமீபத்தில் தனது காதலி ரீவா ஸ்டீன்கேம்ப்பை சுட்டுக் கொன்ற வழக்கில் இவர் கைது செய்யப்பட்டார். திருடன் என நினைத்து காதலியை தவறுதலாக சுட்டுக் கொன்றதாக முதலில் செய்தி வெளியானது. பின், இவர் திட்டமிட்டு கொலை செய்ததாக நீதிமன்றில், பொலிஸார் குற்றம்சாட்டினர். இதையடுத்து பிணை மனு கிடைக்காமல் சிறையில் தவிக்கிறார். இந்நிலையில் புதிய திருப்பமாக, பிஸ்டோரியஸ் வீட்டில் இரத்தக் கறை படிந்த கிரிக்கெட் துடுப்பு, தென்னாபிரிக்க பொலிஸ் கண்டெடுத்ததாக, அங்குள்ள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இதில் கிரிக்கெட் துடுப்பில் நிறைய இரத்தம் படிந்திருந்ததாகவும், ஸ்டீன்கேம்ப், மண்டை ஓடு பலமாக தாக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கிரிக்கெட் துடுப்புக் கொண்டு ஸ்டீன்கேம்ப் தலையில் பிஸ்டோரியஸ் பலமாக தாக்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. மறுபக்கம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கிரிக்கெட் துடுப்பை, ஸ்டீன்கேம்ப் பயன்படுத்தி இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. பிஸ்டோரியஸ் மீதான கொலை குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்கும். பிணைமனு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால், இவர் பங்கேற்க இருந்த தடகள போட்டிகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டன.

## தொடர் தென்னாபிரிக்கா வசம்



(கேப்டவுன்)

பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக் கொண்டது.

பாகிஸ்தான், தென்னாபிரிக்கஅணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நிறைவடைந்தது.

இதில் 182 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய தென்னாபிரிக்க அணி, அம்லாவின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றிபெற்றது. இறுதியில் தென்னாபிரிக்க அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் அம்லா 58, டிவில்லியர்ஸ் 36, ஸ்மித் 29, கலிஸ் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக ரொபின் பீற்றர்சன் தெரிவானார். பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 338. இரண்டாவது இனிங்ஸ் 169. தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸ் 326. இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை ஒரு போட்டி மீதமுள்ள நிலையில் 2-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி தொடரைக் கைப்பற்றியுள்ளது.

## டான் பட்டம் வென்ற ஜூடோ கலை வீராங்கனை 99 வயதில் மரணம்



ஜூடோ தற்காப்பு கலையின் நுணுக்கங்களை அறிந்து, இக்கலையின் உயரிய தகுதியான 10ஆவது டான் பட்டம் பெற்ற ஒரே பெண்மணியான கெய்கோ புகுடா காலமானார்.

1913ஆம் ஆண்டு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பிறந்த இவர், 1964ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தினார்.

1966ஆம் ஆண்டு அமெரிக்காவில் குடியேறி, 1970ஆம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோ நகரில் ஜூடோ பயிற்சி பள்ளி ஒன்றை தொடங்கினார்.

வெறும் 4 அடி 10 அங்குலம் உயரம் கொண்ட இவர், ஜூடோ கலைக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார். கடந்த 2011ஆம் ஆண்டு கெய்கோ புகுடாவிற்கு ஜூடோ கலையின் உயரிய தகுதியான 10ஆவது டான் பட்டம் வழங்கப்பட்டது. இந்த பட்டத்தை பெற்ற உலகின் ஒரே பெண்மணி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதுமை காரணமாக கெய்கோ புகுடா 90 வயதான போதும் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடியே தினமும் ஜூடோ பயிற்சி செய்துவந்தார். திருமதி ஜூடோ என்ற பெயரில் இவரைப்பற்றி எடுக்கப்பட்ட குறும்படம் சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பலரது கவனத்தை ஈர்த்து வருகிறது.

இந்நிலையில் சில நாட்களாக உடல் நலக் குறைவால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த கெய்கோ புகுடா, தனது 99ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

## காலிறுதியுடன் பெடரர் வெளியேற்றம்

நெதர்லாந்தில் நடக்கும் ரோட்டர்டாம் உலக ரென்னிஸ் தொடரின் காலிறுதியில், நடப்பு சம்பியன் ரோஜர் பெடரர் (சுவிஸ்) அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார். காலிறுதியில் பிரான்சின் ஜூலியன் பென்னட்டாவுடன் நேற்று முன்தினம் மோதிய பெடரர் 3-6, 5-7 என்ற நேர் செட்களில் தோற்றார்.

## இன்று இரண்டாவது ஆட்டம்

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி இன்று நடைபெறவுள்ளது. தொடரைத் தீர்மானிக்கும் முக்கியமான போட்டி என்பதால் மிகவும் பரபரப்பு நிறைந்ததாக இப்போட்டி அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இல்ல மெய்வல்லுநர்

(உரும்பிராய்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் மு. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கோப்பாய் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. பாலசுப்பிரமணியம் கலந்துகொள்ளவுள்ளார்.


இதேவேளை, இப்போட்டி நிகழ்வில் கடந்த வியாழக்கிழமை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டபோதும், சீரற்ற காலநிலை காரணமாக குறித்து நாளில் நடாத்த முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

***

வல்வெட்டித்துறை அ.மி. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெல்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு வல்வை திருச்சிற்றம்பலம் பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெறவுள்ளது. பாடசாலைஅதிபர் கூ. சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை இலங்கை வங்கி கிளை முகாமையாளர் சி.ஸ்ரீகாந்தாகலந்துகொள்ளவுள்ளார்(109)

***

யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் பிரித்தானியாவின் பழைய மாணவர் சங்க செயலாளர் செல்லத்துரை தேவராஜா கலந்துகொள்ளவுள்ளதுடன், வெற்றி பெறும் வீரர்களுக்கான பரிசில்களை திருமதி நந்தினிதேவி தேவராஜா வழங்கவுள்ளார். (90)



(படப்பிடிப்பு: சுரேஷ்)

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது, தடை தாண்டல் நிகழ்வில் வீரர் ஒருவர் தடை தாண்டுவதைக் காணலாம்.

## தலைவர் இராஜினாமா

ஒலிம்பிக் போட்டியிலிருந்து மல்யுத்தம் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச மல்யுத்த சம்மேளனத்தின் தலைவர் ரபயல் மார்டினெட்டி தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

எதிர்வரும் 2020 ஒலிம்பிக் போட்டியிலிருந்து மல்யுத்தத்தை அகற்ற சர்வதேச ஒலிம்பிக் குழு தீர்மானித்துள்ளது. இந்நிலையில் புகெட்டில் சர்வதேச மல்யுத்த சம்மேளன நிறைவேற்றுக் குழுக் கூட்டம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் மார்டினெட்டி தனது இராஜினாமாவை அறிவித்தார். சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த மார்டினெட்டி கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் சர்வதேச மல்யுத்த சம்மேளனத்தின் தலைவராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கரைச்சிப் பிரதேச பெருவிளையாட்டு சம்பியன் பட்டம் வென்ற அணிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் பெருவிளையாட்டுப் போட்டிகள் பல நிறைவடைந்துள்ளன. அவற்றில் வெற்றியீட்டிய அணிகளின் விபரம் கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். குமாரினால் வெளியிடப்பட்டுள்ளது.

அவற்றின் விபரம் வருமாறு: ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட், முதலாமிடம் மத்திய தீரர், இரண்டாமிடம் விவேகானந்த நகர் கிருஸ்ணபாரதி அணிகள் பெற்றுக்கொண்டன. பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் முதலாமிடத்தை கனகபுரம் அணியும், இரண்டாமிடத்தை உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணியும் பெற்றுக்கொண்டன.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தை மலையாளபுரம் புதிய பாரதி அணியும், இரண்டாமிடத்தை அம்பாள்குளம் இளந்தென்றல் அணியும் பெற்றுக்கொண்டன. பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தை மலையாளபுரம் புதிய பாரதி அணியும், இரண்டாமிடத்தை வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் அணியும் பிடித்துக்கொண்டன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தை வட்டக்கச்சி இளந்தளிர் அணியும், இரண்டாமிடத்தை வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் அணியும் பெற்றுக்கொண்டன. பெண்களுக்கான எல்லே போட்டியில் முதலாமிடத்தை உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணியும், இரண்டாமிடத்தை ஜெயந்திநகர் மகாதேவா அணியும் பெற்றுக்கொண்டன. (90)




# தெல்லிப்பளை பிரதேச மட்ட கபடி இளவாலை இளஞ்சுடர் சம்பியன்



(இளவாலை)

தெல்லிப்பளை பிரதேச மட்ட கபடிப் போட்டியில் இளவாலை இளஞ்சுடர் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தெல்லிப்பளைப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமாக, தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஆண்களுக்கான கபடிப் போட்டி கடந்த 3ஆம் திகதி இளவாலை வசந்தபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

பல அணிகள் பங்குகொண்டபோதிலும், இதன் இறுதிப் போட்டிக்கு இளவாலை இளஞ்சுடர் அணியும், நகுலேஸ்வரம் அணியும் தகுதிபெற்றன.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், இளவாலை இளஞ்சுடர் அணி அணி 36-23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர், மாவட்ட விளையாட்டுச் செயலகத்தைச் சேர்ந்த விளையாட்டு அலுவலர்கள், விளையாட்டுக்கழகத் தலைவர்கள், செயலாளர்கள், வீர, வீராங்கனைகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தனர். ஏனைய பெருவிளையாட்டுக்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## ஞானப்பிரதாப் தாக்குதல் ஆட்டம் பாடுமீன் இலகு வெற்றி



(யாழ்ப்பாணம்)

ஞானப்பிரதாப் சிறப்பான தாக்குதல் ஆட்டத்தின் மூலம் சென்.நீக்கிலஸ் 'பி' அணியினை பாடுமீன் 'ஏ' அணி இலகுவாக வென்றது.

யாழ்.கால்பந்தாட்ட லீக் மகிந்தன் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியினை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தி வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் பாடுமீன் ஏ அணியினை எதிர்த்து சென்.நீக்கிலஸ் பி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்து 5 ஆவது நிமிடத்தில் பாடுமீன் 'ஏ' அணி சார்பாக ஞானப்பிரதாப் கோல் ஒன்றினை அடித்தார். அதே ஆக்கிரோசத்துடன் இரண்டாவது கோலினையும் ஞானப்பிரதாப் பெற்றுக்கொடுக்க, முதல் பாதியாட்டத்தில் பாடுமீன் 'ஏ' அணி 2:0 என்று முன்னிலை பெற்றது.


இரண்டாவது பாதியாட்டத்தில் துடிப்புடன் விளையாடி சென்.நீக்கிலஸ் வீரர் டிலூசன் தனியாளக ஒரு கோல் பெற்று ஆட்டத்தின் சுவாரசியத்தை அதிகரித்தார். எனினும், ஆட்டத்தின் இறுதி நேரத்தில் பாடுமீன் 'ஏ' அணிக்கு தண்டனை உதைப்பு ஒன்று கிடைக்க அதனைக் சேயன் கோலாக்க, இறுதியில் 3:1 என்ற கோல் கணக்கில் பாடுமீன் 'ஏ' அணி வெற்றிபெற்றது.



# காட்டோடைகளும் கங்காணிகளும்

**– அருணன் மதுரா –** 3

நிறுவன மேலாண்மையில், இன்று சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் சொல் - உணர்வுஜீவித்தனம் (Emotional quotient). அதாவது, நிறுவனத்தில், ஒரு குழுவில் தனது திறனை வெளிப்படுத்தி செயல்களைச் செய்வது. பெப்ஸி போன்ற நிறுவனங்களில் செயல்பட்டு வெற்றி பெற இது மிக முக்கியம். அதில், மிகப்




பெரும் வெற்றியடைந்தவர்தான் ஸ்கல்லி எனினும், ஜொப்ஸ், வெறும் புத்திசாலி மனிதர் மட்டுமல்ல. மிக அதீத புத்திசாலித்தனமும், பிடிவாதமும், குழுக்களை influence செய்யும் திறனும் கொண்டவர். இவரை ஸ்கல்லி சமாளிக்க முடியாமல் திணறினார்.

வேறு வழியின்றி, ஜொப்ஸை அப்பிளை விட்டு வெளியேற்றும் முடிவுக்கு வருகிறார் ஸ்கல்லி. அம்முடிவை, அப்பிளின் நிறுவனர் குழுவையும் ஏற்க வைக்க, காய்களை நகர்த்தி, ஜொப்ஸை வெளியேற்றுகிறார். தனது நடவடிக்கைகள் அத்துமீறிப் போனதை உனர்ந்த ஜொப்ஸ், அப்பிளில் இருந்து வெளியேற்றப் படாமல் இருக்க எல்லாப் போராட்டமும் நடத்துகிறார். வாதம், அழுகை, தூற்றுதல் என தான் தோற்றுவித்த நிறுவனத்தில் இருந்து, தன்னால் நியமிக்கப்பட்ட தலைவராலேயே வெளியேற்றப் படுவது ஜொப்ஸுக்கு பெரும் துயரமாகவே இருந்திருக்கும். வெளியேறிய பின்பு, அப்பிளில் தனக்குப் பிடித்த சிலரை எடுத்துக் கொண்டு, NeXt என்னும் கம்ப்யூட்டர் நிறுவனத்தை உருவாக்கத் துவங்குகிறார். அப்பிளுக்கும், ஜொப்ஸுக்கும் பல வழக்குகள் துவங்குகின்றன.

நெக்ஸ்ட் பெரும் பணம் விழுங்கிக் கொண்டேயிருக்கிறது. ரோஸ் பெரோ (Ross Perot- இவர் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டவர்) என்னும் பெரும் முதலீட்டாளரை மயக்கி, நெக்ஸ்ட்டில் பெரும் முதலீடு செய்ய வைக்கிறார் ஜொப்ஸ். இதே சமயத்தில், பிக்ஸார் (Pixar) என்னும் அனிமேஷன் நிறுவனத்தில் 10 மில்லியன் முதலீடு செய்கிறார் ஜொப்ஸ். தொழில்நுட்பமும் நுகர்வோர் மனமும் சந்திக்கக் கூடிய இடம் அனிமேஷன் படம் தயாரித்தல். பிக்ஸாரின் எட் கட்மல் (Ed Catmull) மற்றும் ஜோன் லாஸெட்டர் - இவர்கள் இருவரும் பிக்ஸாரின் அனிமேஷனில் மிக முக்கிய படைப்பாக்கங்களை உருவாக்கும் முயற்சியில் இருக்கிறார்கள்.

ஒரு கட்டத்தில், பிக்ஸாருக்கு அதிக நிதி தேவைப்படுகிறது. அது திரும்ப வருமா வராதா என்ற நிலையில், லாஸெட்டர், ஜொப்ஸுக்கு, தான் உருவாக்கிய டின் டாய் அனிமேஷனைத் திரையிட்டுக் காட்டுகிறார். அதன் சாத்தியங்களைக் கணித்த ஜொப்ஸ், பிக்ஸாரில் மேலும் அதிக நிதியைக் கொட்டுகிறார். இந்த முடிவே ஒரு பெரும் தொழில் முனைவோரை ஒரு சாதாரண தொழில்துறை அதிகாரியிடமிருந்து வேறுபடுத்தி, அடையாளம் காட்டுகிறது. சாதாரணத் தொழில்துறை அதிகாரியாக இருந்திருந்தால், அவர் ஒரு நிறுவனத்தில் முக்கிய நிர்வாக அதிகாரியாகவே இருந்தாலும், ஏற்கனவே போடப்பட்ட பணம் திரும்ப வருமா, வராதா என்று நிச்சயமில்லாத நிலையில், இன்னும் அதிகப் பணம் முதலீடு செய்யத் தயங்குவார். அவருக்கு தொழிலில் உதவ வேண்டிய நிதி வல்லுநர்களின் நிதி வரவு-செலவு கணிப்பு திட்டங்கள் எதுவும் தொழிலைத் தொடரவோ, முன்னெடுத்துச் செல்லத் தேவையான முதலீடு பற்றியோ முடிவெடுக்க உதவாது. உள்ளுணர்வின் துணையோடு, இது வரை போடப்படாத பாதையை, ஒரு அடர்ந்த கானகத்துள் செய்யும் பயணம் போன்ற ஒன்றைக் கற்பனை செய்ய, வெறும் மாதச் சம்பளம் வாங்கும் அதிகாரிகளால் முடியாது. ஆனால், தீர்க்க தரிசனம் கொண்ட தொழில் முனைவோரால், தடைகளைத்




தாண்டி, தாங்கள் அடையப் போகும் பொன்னுலகைத் தரிசிக்க முடிகிறது. அத்தகைய கனவுகளே, மானிடர் வாழ்வின் மிகப் பெரும் மாற்றங்களை உருவாக்கி இருக்கின்றன.

சுருங்கச் சொன்னால், சாதாரண மனிதர்கள், ஆட்ட விதிகளின் படி, ஆடுகிறார்கள். தலைவர்கள் ஆட்ட விதிகளை, ஏன் சில சமயங்களில் ஆட்டத்தையே மாற்றுகிறார்கள்.

ஜொப்ஸ், அனிமே'ன் துறையின் ஜாம்பவான்களாகிய வோல்ட் டிஸ்னியைச் சந்தித்து, அவர்களைக் கம்ப்யூட்டர் அனிமேஷன் படங்களைத் தயாரிக்க ஒத்துக்கொள்ள வைக்கிறார். அவர்களுடன் இணைந்து ரோய் ஸ்டோரி (Toy story) என்னும் திரைப்படத்தைத் தயாரிக்கிறார். இதில் துவங்கி, பிக்ஸாரும், டிஸ்னியும் தொடர்ந்து 10 மாபெரும் வெற்றிப் படங்களைத் தருகிறார்கள். சினிமா உலகில் இந்தச் சாதனை மிகப் பெரிது. இதில், லாஸெட்டரின் படைப்பூக்கமும், ஜொப்ஸின், தொழில் நுட்ப உச்சங்களை அடையத் தேவையான மூர்க்கத் தனமான பிடிவாதமும் முக்கிய பங்கு வகித்தன.

(தொடரும்)

# உலகிலேயே



- உலகிலேயே அதிகமாக இனிப்பு சாப்பிடுகிறவர்கள் இங்கிலாந்துக்காரர்கள்.
- உலகிலேயே சீனாவில்தான் சைக்கிள்கள் அதிகம்.
- உலகிலேயே அதிக அளவில் தபால் நிலையங்கள் உள்ள நாடு இந்தியா.
- ஜோக்ஸ் சொல்லித் தருவதற்கென்றே ஒரு கல்லூரி இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரத்தில் உள்ளது.
- உலகில் அதிக அளவு கண்தானம் வழங்குபவர்கள் இலங்கையர்கள்தான்.
- உலகிலேயே மினரல் குடிநீர் அதிகம் பயன்படுத்துபவர்கள் ரஷ்யர்கள்தான்.
- உலகிலேயே அதிகமாக சேமிப்பவர்கள் சிங்கப்பூர்க்காரர்கள்தான்.
- அவுஸ்ரேலியாவில் மனிதர்களைவிட ஆடுகளே அதிகம்.
- உலகில் 26 நாடுகளில் கடற்கரை கிடையாது.
- சலவைக்கல்லுக்குப் பெயர் பெற்ற நாடு இத்தாலி.
- உலகிலேயே அதிக மொழிகள் பேசப்படும் நாடு இந்தியா.
- உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் வளரக்கூடிய ஒரே பிராணி நாய்.
- கிரேக்க நாட்டு தேசியகீதம்தான் உலகின் மிக நீளமான தேசியகீதம். 128 வரிகள்.

# கலைமானின் கொம்பு!

ஒரு கலைமான் மிகுந்த தாகத்துடன் தண்ணீர் குடிக்க ஓர் ஓடைக்குச் சென்றது. தண்ணீரில் தெரியும் தனது நிழலைப் பார்த்தது. தனது உருவத்தையும் வித்தியாசமான கொம்பையும் பார்த்துப் பெருமிதம் கொண்டது. தனது பலவீனமான மெல்லிய கால்களைக் கண்டு மனம் வருந்தியது.

இவ்வாறாக, தனது கால்களைப் பார்த்துக் கலைமான் அவமானப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அந்த ஓடைக்கு நீர் அருந்த வந்த சிங்கம், கலைமானைக் கண்டு, அதன் மேல் பாய்ந்தது.

சிங்கம் தன்மேல் பாய்வதை அறிந்த கலைமான் உடனே ஓட்டம் எடுத்தது. எவ்வளவு வேகமாக ஓட் முடியுமோ அவ்வளவு வேகமாக ஓடிச் சிங்கத்திடம் இருந்து தப்பிப் பாதுகாப்பான இடத்துக்குச் சென்றது.



சிங்கத்திடமிருந்து தப்பிவிட்டோம் என்று எண்ணிய கலைமான் மீண்டும் காட்டுக்குள் புகுந்தபோது, அதன் கொம்பு ஒரு செடியில் சிக்கி மாட்டிக்கொண்டது. அதை எடுக்க முடியாமல் கலைமான் திணறிக் கொண்டிருந்தபோது, அந்த வழியே வந்த சிங்கம் வேகமாக அருகே வந்து கலைமானைப் பிடித்துக் கொண்டது.

சிங்கத்திற்கு இரையாகிக் கொண்டிருந்த கலைமான், "எனது புத்தி போன போக்குக்கு நல்ல பரிசு கிடைத்தது. எந்தக் கால்கள் என்னைப் பாதுகாத்தனவோ, அவற்றை நான் இழிவாக எண்ணினேன். எந்தக் கொம்பு எனக்கு மிகவும் அழகு என்று பெருமைப்பட்டேனோ, அதனாலயே எனக்கு அழிவு வந்தது..." என்று தனக்குள்ளே புலம்பியது.

# சினிமா சினிமா



"20 வருஷத்துக்கு முன் உள்ள பிர்புதேவா மாதிரி நினைச்சு என்னை ஆட வைக்காதீங்க. நான் பழைய ஆளு இல்லை. முப்பத்தி ஒன்பது வயசாச்சு. அதுக்கு ஏத்த மாதிரி ஸ்டெப்ஸ் கொடுங்க. என்னை ரொம்ப ஆட விட்டுடாதீங்க." என்றாராம் பிரபுதேவா. சென்னையில் நடந்த விழாவில் பிரபுதேவாவே இதைச் சொல்ல ரசிகர் களுக்கு ஆச்சரியம். ஆனால் விழாவில் திரையிடப்பட்ட ஒரு பாடலில் பிரபுதேவா ஆடிய ஆட்டம் அவரின் சினிமா வாழ்வில் அவரே ஆடாத நடனமாம். தமிழில், போக்கிரி படம் மூலம் இயக்குனரான பிரபுதேவா, ஹிந்திக்கு சென்று சல்மான்கான், அக்ஷய்குமார் போன்ற நடிகர்களை வைத்து படம் இயக்கி, பாலிவுட்டின் முன்னணி இயக்குனராகி விட்டார். இந்நிலையில், பிரபல நடன மாஸ்டர் ரெமோ டிசோசோ இயக்கத்தில், ஏபிசிடி என்ற ஹிந்தி படத்தில் நடித்துள்ளார். நடனத்தை உயிராக மதிக்கும் ஒரு இளைஞனைப் பற்றிய கதையில் உருவாகியுள்ள இப்படம், "ஆடலாம் பாய்ஸ் சின்னதா டான்ஸ்" என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. படத்தின் இயக்குனர் ரெமோ டிசோசோவிடமே மேற்படி கூறினாராம் பிரபுதேவா.

இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ் தயாரிக்கும் புதிய படம் "வத்திக்குச்சி". "எங்கேயும் எப்போதும்" படத்துக்குப் பின் உருவாகும் இப்படத்தில் முருகதாஸின் சகோதரர் திலீபன் கதாநாயகனாக நடிக்கிறார். அஞ்சலி கதாநாயகியாக நடிக்கிறார். முருகதாஸிடம் உதவியாளராக இருந்த கின்ஸ்லின் இயக்குகிறார். படம் குறித்து முருகதாஸ் கூறுகையில், "முன்பெல்லாம் குற்றங்கள் மறைவாக நடந்தது. இப்போது பட்டப்பகலில் நடந்து, நடுங்க வைக்கிறது. வத்திக்குச்சியை பற்ற வைக்க சின்ன உரசல் இருந்தால் போதும், அது போன்ற பாத்திரத்தில் ஹீரோ வருவதால் அந்தப் பெயரை படத்துக்கு வைத்தோம். இதில் ஹீரோவாக நடிக்கும் திலீபன் என் சித்தப்பா மகன். கின்ஸ்லின் உருவாக்கிய கதைப் பாத்திரத்திற்கு திலீபன் பொருத்தமாக இருந்ததால் அறிமுகப்படுத்துகிறோம். ஹீரோ வாழ்க்கையை ஒரு கொடூர சம்பவம் எப்படி மாற்றுகிறது? என்பதுதான் கதை என்றார் முருகதாஸ்.



ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் இயக்குநர் பாலசந்தர் வீட்டில் செக்யூரிட்டியாக இருந்த அஸ்வின் பாலாஜி, தற்போது "கல்லாப்பெட்டி" என்ற படத்தில் ஹீரோவாக அறிமுகமாகிறார். படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழாவுக்கு, உடல் நிலை சரியில்லாத நிலையிலும் அஸ்வின் பாலாஜியை வாழ்த்த வந்திருந்தார் பாலசந்தர். "தமிழ் சினிமாவில் இப்போது இளம் படைப்பாளிகளின் ஆதிக்கம்தான் அதிகமாக இருக்கிறது. அந்த வகையில் அஸ்வின் பாலாஜியின் வருகையும் முக்கியமானதாக இருக்கும். நான் சினிமாவுக்கு வந்த காலத்தில் என்னைப் பாராட்டவோ, விமர்சனங்களை முன் எடுத்து வைக்கவோ யாரும் இல்லை. அப்படி இருந்தவர்கள் எல்லாம் ஜாம்பவான்கள். என் உடல் நிலை சரியில்லை. அப்படி இருந்தும் சில சினிமா விழாக்களுக்கு சென்று வருகிறேன். அது புதிதாக வரும் இளம் இயக்குநர்களுக்கு உந்துதலாக இருக்கும் என்பதற்காகத்தான் அப்படி சென்று வருகிறேன்" என பேசியுள்ளார் பாலசந்தர்.

"மனம் கொத்திப் பறவை" படத்துக்குப் பின் எழில் இயக்கும் படம் "தேசிங்கு ராஜா". விமல் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக பிந்து மாதவி நடிக்கிறார். "ரீலுக்கு ரீல் காமெடி மட்டும் பிரதானமாக இருக்கும். விமல் பெயரைக் கேட்டாலே சிரிப்பு வரும், இதயக்கனி. பிந்துமாதவிக்கு பெயர் தாமரை. படத்துக்கு முதலில் தாமரைக்கனி என பெயர் வைத்தோம். எதற்கு பிரச்சினை என்று தேசிங்கு ராஜா என்று மாற்றி விட்டேன். தன் பெயர் இதயக்கனி என்பதால் எம்.ஜி.ஆர். மீது அத்தனை பற்றுள்ளவராக இருப்பார் விமல். எம்.ஜி.ஆர். பாட்டைப் போட்டாலே போதும் கொடுத்த கடனை கூட திருப்பிக் கேட்காமல் போய் விடுவார். ரஜினி படத்துக்கு ஏறிக் குதித்து டிக்கெட் எடுக்கிற அடாவடிப் பெண்ணாக வருகிறார் பிந்து மாதவி. இப்படியெல்லாம் கலகலப்புடன் சீரியஸான கதையும் இருக்கிறது. கூடவே சின்ன மெசேஜும் இருக்கிறது. படத்தின் தொடக்கத்திலேயே பெரிய அதிர்ச்சி காத்திருக்கும். அதுதான் மொத்த திரைக்கதைக்குமான உயிர் நாடி. நினைத்தால் முழு நேர ஆக்ஷன் படமாகவே செய்திருக்கலாம். ஆனால் இப்போது காமெடி தானே தமிழ் சினிமாவின் பூஸ்டர்" என்கிறார் எழில்.



## புரட்சிகள்...

| | |
|---|---|
| பசுமைப் புரட்சி | - விவசாய உற்பத்தி. |
| வெள்ளைப் புரட்சி | - பால் உற்பத்தி. |
| மஞ்சள் புரட்சி | - எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி. |
| நீலப் புரட்சி | - மீன் உற்பத்தி. |
| சாம்பல் புரட்சி | - மரம் உற்பத்தி. |
| கருப்பு புரட்சி | - பெட்ரோலியப் பொருட்கள் உற்பத்தி. |
| வெள்ளிப் புரட்சி | - முட்டை உற்பத்தி. |
| தங்கப் புரட்சி | - பழம், காய்கறி உற்பத்தி. |

# குடியிருப்பவருக்காகக் காத்திருக்கும் மாளிகை!

திபெத் நாட்டின் தலைவர் குடியிருக்கும் மாளிகைதான் பொடாலா. பொடாலகா என்ற மலையின் பெயரைக் கொண்டு இது பொடாலா மாளிகை என்று பெயரிடப்பட்டது. திபெத்தின் 5ஆவது தலாய்லாமாதான் இந்த மாளிகையை 1645ஆம் ஆண்டு கட்டத் தொடங்கினார். அவரின் மதஆலோசகரின் ஆலோசனையின்படி இந்த மாளிகை கட்டப்பட்டது.


மாளிகை அமைந்துள்ள லாஸா என்ற இடம்தான் இதற்கு ஏற்றது என மத ஆலோசகர் தேர்வு செய்தார். அப்போது அந்த இடத்தில் வெள்ளை மாளிகை என்று அழைக்கப்படும் சிறிய கோட்டை ஒன்று காணப்பட்டது. அதனோடு சேர்த்துதான் இந்த மாளிகை கட்டப்பட்டது. இப்போது அந்த மாளிகை அருங்காட்சியகமாக மாறியுள்ளது.

இந்த மாளிகை நிலநடுக்கம், பூமிஅதிர்வுகளினாலும் பாதிக்கப்படாமல் இருக்க அதன் அடித்தளத்தை மிகவும் உறுதியாக அமைத்துள்ளார்கள். அதற்காக செம்பை உருக்கி அந்த உலோகத் திரவத்தை அடித்தளத்தினுள் ஊற்றியிருக்கிறார்கள்.

இந்த மாளிகையினுள் 1000 அறைகளும், 10,000 சிறிய கோயில்களும், 2 இலட்சம் சிலைகளும் உள்ளன. இதன் வெளிப்புறத்தைக் கட்டி முடிக்க 3 ஆண்டுகள் ஆனது. ஆனால் அதன் உள்புறத்தைக் கட்டி முடிக்கவும், மாளிகைக்குத் தேவையான மரச்சாமான்கள் போன்றவற்றையெல்லாம் வடிவமைத்து முழுவதுமாக கட்டி முடிக்க 45 ஆண்டுகள் பிடித்தன.

1645இல் தொடங்கப்பட்ட இந்த கட்டட வேலைகள் 1694ஆம் ஆண்டுதான் முடிவடைந்தது. ஆனால் 1649ஆம் ஆண்டே தலாய் லாமா அந்த மாளிகைக்குக் குடிவந்துவிட்டார். பணிகள் நிறைவடையும் வரை அவர் அங்கு இருந்த பழைய கோட்டையில்தான் வசித்தார்.

1959ஆம் ஆண்டு திபெத்தியர்கள் சீனர்களுக்கு எதிராகப் போர்க்கொடிய தூக்கிய சமயத்தில் ஏற்பட்ட பிரச்சினையில் பொடாலா மாளிகை



சிறிது சேதமடைந்தது. சீனர்களின் வெடிகுண்டு மாளிகையின் ஜன்னல்களை சேதப்படுத்தியது. அதன்பின்பு 1966ஆம் ஆண்டு அங்கு ஏற்பட்ட கலாசார புரட்சியின் காரணமாக ஏற்பட்ட சண்டையில் சுமார் 1,00,000 புத்தகங்கள், வரலாற்று ஆவணங்கள் மற்றும் கலைப்பொருள்கள் அழிந்துவிட்டன.

மாளிகையின் உட்புறத்தில் 13ஆம் தலாய்லாமாவின் சமாதி உள்ளது. இதனை பார்வையிடச் செல்லும்போது சுற்றுலா பயணியுடன் ஒரு துறவி அல்லது வழிகாட்டி கண்டிப்பாக உடன் வருவார். ஏனென்றால் சமாதிக்கு அருகில் உள்ள 46 அடி ஸ்தூபி விலைமதிக்க முடியாத பொருள்களால் உருவாக்கப்பட்டது. அதாவது 1 தொன் தங்கம், விலை மதிப்பற்ற நகைகள் கொண்டு இது அலங்கரிக்கப்பட்டுள்ளது. மேலும் காணிக்கையாக இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட யானைத் தந்தங்கள், பளிங்கால் செய்யப்பட்ட சிங்கங்கள், பீங்கானால் செய்யப்பட்ட பூச்சாடிகள் என பல்வேறு பொருள்கள் இந்த சமாதியில் காணப்படுகிறது. 2 இலட்சம் முத்துக்களால் உருவாக்கப்பட்ட மண்டலா எனப்படும் ஆன்மீகச் சின்னம் ஒன்றும் இங்குள்ளது.

1994ஆம் ஆண்டு இந்த மாளிகை யுனெஸ்கோ அமைப்பின் உலக பாரம்பரியச் சின்னங்களின் பட்டியலில் இணைக்கப்பட்டது. அதிக அளவில் மக்கள் வந்தால் கட்டடங்கள் சேதமடைந்துவிடும் என்பதால் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1600 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் தினமும் 6 மணி நேரம்தான் இந்த மாளிகை பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படுகிறது.

பயணிகள் மாளிகைக்குள் நுழைந்தவுடனே "உள்ளே கழிவறைகள் கிடையாது" என்ற வாசகம் இருக்கும். ஆயிரம் அறைகள் இருந்தும் அந்த மாளிகைக்குள் கழிவறை இல்லை.

பொடாலாவின் புகைப்படங்கள் எங்கு நோக்கினும் கிடைக்கிறது. ஆனால் தற்போதைய தலாய் லாமாவின் புகைப்படங்கள் எந்தப் பொருளிலும் அச்சிடப்படவில்லை. தலாய்லாமாவின் புகைப்படங்கள் இன்றும் திபெத்தில் தடைசெய்யப்பட்டுள்ளன.

எந்த மதத்தைச் சேர்ந்தவரும் மாளிகைக்குள் சென்று அங்குள்ள திபெத்திய புத்த வழிபாடுகளில் கலந்து கொள்ள முடியும்.

எல்லாம் இருந்தும் அந்த மாளிகை குடியிருப்பவருக்காக அதாவது தலாய் லாமாவுக்காக காத்துக்கொண்டிக்கிறது என்பது மட்டும் உண்மை.



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் தற்போதைய மாதிரித்தோற்றத்தை மாணவர்கள் வடிவமைத்து காட்சிப்படுத்தியுள்ளதையும், முதலாம் ஆண்டு ஒன்றின் வகுப்பறை அழகையும், அவுஸ்ரேலிய நிதியுதவியால் அமைக்கப்பட்ட கட்டடங்களை திறந்துவைக்க வருகைதந்த அவுஸ்ரேலியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் றெபின்மியூலினின் மனதில் இடம்பிடித்துக்கொண்ட ஆசிரியர் கமலேஸ்வரனின் கற்பனையில் உருவாக்கப்பட்ட வரவேற்புக் கோலத்தினையும் காணலாம்.

# பொலிஸ் அதிகாரம் தேவையில்லை; முதலமைச்சர்கள் மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதற்கு 31 ஆவது முதலமைச்சர்கள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஊவா மாகாண முதலமைச்சர் சீஷந்திர ராஜபக்ஷ தலைமையில் 31ஆவது முதலமைச்சர்கள் மாநாடு கடந்த சனிக்கிழமை பதுளையில் இடம்பெற்றது.

இதன்போதே, 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் தெரிவித்தார். இது தொடர்பாக அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பது எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் தற்போதைய நிலையில் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வேண்டும் என அரசாங்கத்தை வற்புறுத்துவதில்லை எனவும் முடிவு செய்யப்பட்டது என கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, மாகாண சபைகளுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள காணி அதிகாரத்தினை அதிகரிக்க வேண்டும் எனவும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுவது என இந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார். இதற்கு மேலதிகமாக மாகாண கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாகவும் மாகாண முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துரையாடப்பட் டது என அவர் மேலும் தெரிவித்தார்.

# 948 பேருக்கு சமுர்த்தி நிவாரணம்

(மன்னார்)

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 2 சமுர்த்தி வலயங்களில், ஒரு சமூக வலயத்தை சேர்ந்த 948 பேருக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

முருங்கன் மத்திய மகாவித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இந்தநிகழ்வு இடம்பெற்றது.

இந்தப் பகுதியில் மொத்தமாக 2 ஆயிரத்து 148 குடும்பங்கள் இந்த நிவாரண உதவியைப் பெற தகுதி பெற்றுள்ளன. நிவாரணங்களை அமைச்சர் றிசாட் பதியுதீன் வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக், பிரதேச செயலாளர் சந்திரையா, வடமாகாண ஆளுனரின் பிராந்திய செயலாளர் சம்சுடீன் லியாதீன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் உரையாற்றிய அமைச்சர் றிசாட் பதியுதீன், நானாட்டான் பிரதேசத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் முரண்பாடுகள் இன்றி வாழ்வதாகவும், இந்த ஒற்றுமை தொடர்ந்தும் நிலைக்க வேண்டும் எனவும் கோரினார்.

# மூளைக்காய்ச்சல் நோயினை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை.



(கொழும்பு)

நாட்டின் பல மாவட்டங்களிலும் பரவியுள்ள மூளைக் காய்ச்சல் நோயினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி மூளைக்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றாத 10 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை 5 வயது பூர்த்தியடைந்த சகல சிறுவர்களுக்கும் இந்த தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அவ் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இரத்தினபுரி, கேகாலை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் மூளைக்காய்ச்சல் நோய் குறித்து பதிவாகியிருந்தது.

இரத்தினபுரி மாவட்டத்தில் மட்டும் மூளைக்காய்ச்சல் நோயிற்கு 50 சிறுவர்களுக்கு மேற்பட்டோர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

பன்றியின் உடலிலுள்ள கிருமிகள் நுளம்பின் ஊடாக மனித உடலில் சேர்வதன் மூலம் மூளைக்காய்ச்சல் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது.

இரத்தினபுரியில் ஏற்பட்டுள்ள மூளைக் காய்ச்சல் நோயிற்கு இரத்தினக்கல் அகழ்வுக்கிடங்கே காரணம் என சப்ரகமுவ மாகாண அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் மூளைக்காய்ச்சல் நாட்டின் பல பாகங்களில் ஏற்பட்டுள்ள நிலையில் அதற்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் துரித கதியில் நடைபெற்று வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## சைபர் தாக்குதல்கள் குறித்து மீண்டும் இலங்கையில் எச்சரிக்கை

சைபர் தாக்குதல்கள் குறித்து எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென இலங்கை கணனி அவசர பாதுகாப்புப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. இணையத்தின் ஊடாக தகவல்களை பரிமாறிக் கொள்ளும் போதும், தகவல்களை உள்ளீடு செய்யும் போதும் மிகவும் கவனமாக செயற்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளது. பாதுகாப்பற்ற இணையத் தளங்களுக்குள் பிரவேசிப்பதனை தவிர்க்க வேண்டும். வைரஸ் பாதுகாப்பு மென்பொருட்களை காலத்துக்கு ஏற்ற வகையில் அப்டேட் செய்வதன் மூலமும் சைபர் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக இலங்கையின் முக்கியமான அரசாங்க இணையத் தளங்கள் மீது சைபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போக்குவரத்து பிரச்சினைக்குத் தீர்வு; முசலி மக்கள் கோரிக்கை



(மன்னார்)

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களில் போக்குவரத்துச் சேவை இல்லாததன் காரணத்தினால் குறித்த கிராம மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக முசலி பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் எஸ்.சுனேஸ் சோசை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முசலி பிரதேச பிரஜைகள் குழுவின் மாதாந்தகுழுக் கூட்டம் கடந்த 16ஆம் திகதி முசலி பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது முசலியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதில் உள்வாங்கப்பட்ட கிராமங்களான அரிப்பு, கொண்டச்சிக்குடா, சவேரியார்புரம், சிலாவத்துறை, சிறிபொற்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களும் கலந்து கொண்டனர்.

நாளாந்தம் இப்பகுதி மக்கள் பலபிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருப்பதனை பிரஜைகள் குழு அவதானித்துக் கொண்டு இருப்பதோடு, மக்களும் பல தடவைகள் அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்யப்பட்டும் இன்னமும் அதிகாரிகள் மக்களை புறக்கணித்துக் கொண்டு இருப்பதாக முசலி பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் சுனேஸ் தெரிவித்தார். குறிப்பாக மன்னாரிலிருந்து அரிப்பிற்கு இ.போ.ச. பஸ்சேவையானது காலையில் 7.45 மணிக்கு முருங்கன் ஊடாக சிலாவத்துறையினை வந்தடைந்து மீண்டும் கொக்குப்படையான் வரைக்கும் சென்று திரும்புவது தான் வழமையான சேவையாகக் காணப்பட்டது.

இருந்தபோதிலும் கடந்த பலகாலமாக இச்சேவையானது புறக்கணிக்கப்பட்ட நிலையில், முசலி பிரதேச செயலகத்துடன் மக்களை இறக்கி விட்டு செல்லக்கூடிய நிலை தற்போது காணப்படுகின்றது.

இதனால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள், வயோதிபர்கள் கர்ப்பிணித்தாய்மார், பாடசாலை மணவர்கள் என பலரும் மூன்று கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் பாதை சீர் இல்லை என அதிகாரிகளினால் கூறப்பட்ட போதிலும், தற்போது சரியான முறையில் பாதை சீர் செய்யப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், மக்கள் தேவைகளை கருதி எங்கு சென்றாலும் முச்சக்கர வண்டியை நம்பி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சிலாவத்துறையில் இருந்து கொண்டச்சிக்குடாவிற்கு செல் வதென்றால் 300 ரூபா கொடுத்து முச்சக்கர வண்டியில் செல்ல வேண்டிய தேவை ஏற் பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்களால் கூறப்படுகிறது. இது குறித்து முதலில் மன்னார் போக்குவரத்து சபைக்கு முதல் கட்டமாக மனு ஒன்றினை அனும்பும் படியாகவும் இதற்கான சரியான பதிலினை எமது பிரஜைகள் குழுவிற்கு அனுப்பி வைக்கும் படியாகவும் இல்லையேல் முசலி பிரதேச பிரஜைகள் குழு போராட்டத்தில் குதிப்போம் எனவும் முசலி பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் சுனேஸ் தெரிவித்தார். எனவே மக்கள் நலன் கருதி இதற்கான சரியான தீர்வு திட்டத்தினை மக்களுக்கு வழங்குமாறு முசலி பிரதேச பிரஜைகள் குழு ஊடாககேட்டுக் கொள்ளுகின்றோம்எனத் தெரிவித்தார்.

# வடபகுதி மீனவர்களின் பிரச்சினை; அரசியல் ரீதியாக அணுகவேண்டாம்

## - பாதிக்கப்பட்ட மீனவர்கள் சார்பாக கோரிக்கை

(வவுனியா)

எமது மீனவ சமூகத்தின் பிரச்சினையை மேலும் மேலும் கிளறிவிட்டு, எரியவிட்டு அதில் குளிர்காயும் வாக்கு வங்கி அரசியலை நிறுத்தி உண்மையான தூர நோக்குடன் செயற்பட தவறினால், எமது சமூகத்தை மீண்டும் ஒரு அழிவிற்குள் தள்ளிவிட்ட அவப்பெயரையும் தாங்கள் சந்திக்க வேண்டி ஏற்படும். எமது மீனவர்களின் பிரச்சினைகளை அரசியல் ரீதியில் அணுகாமல் உங்களைத் தாழ்த்தி நிர்வாக மட்டங்களில் அணுகுவதன் மூலமாக இப்பிரச்சினையை இலகுவில் தீர்க்க முடியும் என போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் தலைவர் வி. சகாதேவன் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வட பகுதி மீனவர்கள் பாதிக்கப்படுவதை கண்டித்து மன்னார்- முள்ளிக்குளத்தில் இருந்து முல்லைத்தீவின் கொக்கிளாய் வரை நடை பயணம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது தொடர்ந்தும் அங்கு கருத்துத் தெரிவித்த அவர்,

நடை பயண யாத்திரையானது மீனவ மக்களுக்கு மாத்திரமல்லாது சமூகத்தின் சகல மட்டங்களிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்தியுள்ளது. எமது நடைபயணமானது பல இடங்களில் பேரணியாகவும், கண்டன ஆர்ப்பாட்டங்களாகவும் எழுச்சி பெற்றது. அரசியல்வாதிகளின் எதிர்ப்பையும் மீறி மக்கள் அணி திரண்டார்கள். சில இடங்களில் அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பும் இந்தப்பாத யாத்திரைக்கு கிடைத்தது. நாம் பாதயாத்திரை செய்த இடங்களில் எல்லாம் கடல் இயற்கை வளம் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டிருந்ததை அவதானித்தோம்.

அந்த வகையில் நாம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

இழுவைப்படகுத் தொழிலை நிறுத்துவது, வெளிப்பிரதேச மீனவர்களின் அத்துமீறலை தடுப்பது. எமது இயற்கை வளங்களைப்பாதுகாப்பது, தடை செய்யப்பட்ட மீன்பிடியை நிறுத்துவது மற்றும் இத்தகைய கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை,இந்திய அரசாங்கத்திடம் ஆராயப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம்.

மேலும் வெளிப்பிரதேச அரசியல்வாதிகளின் இடையூறுகள் எமது மக்களின் கடல் வளம் சார்ந்த அபிவிருத்திக்கு சாதகமாக அமைய வேண்டுமே தவிர அவற்றை அழிப்பதற்கும், சுரண்டுவதற்கும், எமது மக்களின் வாழ்வுரிமையைப் பாதிப்பதற்கும் அனுமதிக்கக் கூடாது. அத்துடன் எமது இந்த அகிம்சை ரீதியான நியாயமான கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் முகமாக பலாலி-மயிலிட்டி அதியுயர் பாதுகாப்பு வலையப் பாதையை 23 வருடங்களுக்கு முன் திறந்து விட்டுள்ளது போல, அப்பகுதிகளில் எமது மக்கள் மனித உரிமை நியதிக்கு அமைவாக சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழ வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் கொக்கிளாய், முள்ளிக்குளம் உட்பட எமது மீனவ சமூகத்தின் பிரச்சினையை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (160)

# போக்குவரத்து வசதிகள் இன்மையே கல்வியை இடைநிறுத்தக் காரணம்

## - பெற்றோர்கள் கவலையுடன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில், உள்ளூர் கிராமங்களில் உள்ள மாணவர்கள் பலர் போக்குவரத்து வசதிகள் இன்மையாலேயே இடைநடுவில் பாடசாலையை விட்டு விலகுவதாக மாணவர்களின் பெற்றோர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இக்கிராம மக்கள் தற்போது ஓரளவு வாழ்வாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்து வரும் நிலையில், தாம் கல்வித்துறையில் முன்னேற்றம் அடைவது கேள்விக்குறியாக இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

உள்ளூர், கிராம மக்கள் தரம் 1முதல் 5 வரையான மற்றும் தரம் 1முதல் 9 வரையான வகுப்புகளை கொண்ட பாடசாலைகள் உள்ள நிலையில் இப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் அடுத்த தரத்தை கற்பதற்கு நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு செல்ல வேண்டியுள்ளது. இதற்கு போக்குவரத்து வசதிகள் அத்தியாவசியமானதாக காணப்படுவதாக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

உள்ளூர் கிராமங்களுக்கு பேருந்து சேவைகள் இல்லை. துவிச்சக்கரவேண்டிகளில் நெடுந்தூரம் சென்று படிப்பது என்பது உகந்ததாக இல்லை மற்றும் தனியார் வாகனங்களில் பணத்தை செலுத்தி பிள்ளைகளை அனுப்புவது என்பது இயலாத விடயமாகும் எனவும் தமது ஆதங்கங்களை பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக ஆனைவிழுந்தான் உயர்தரப்பாடசாலை, அக்கராயன் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகள் உள்ளூரிலிருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளன. இங்கு செல்வதற்கு பேருந்து வசதிகள் வேண்டும். இதனாலேயே உள்ளூர் கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் மட்டும் படித்துவிட்டு ஆர்வமிருந்தும் பிள்ளைகள் படிப்பை இடைநிறுத்துவதாக தெரிவிக்கும் பெற்றோர்கள் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டால் எமது பிள்ளைகளும் கல்வியை தொடர்வார்கள் எனத் தெரிவிக்கின்றனர். (கே)

# பிரதேசசபை உறுப்பினரின் விருப்பின்படி பொருத்தப்படும் வீதி விளக்குகள்

(திருநெல்வேலி)

கல்வியங்காடு புதிய செம்மணி வீதி மற்றும் பருத்தித்துறை வீதிச் சந்திக்கும் இடையில் பல மாதங்களாக வீதி வெளிச்சம் எதுவும் இல்லாமல் இருட்டாகக் காணப்படுவதினால் பொதுமக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தியில் இலங்கை மின்சார சபையின் மின்பிறப்பாக்கியொன்றும் உள்ளது. இந்த இடத்திலுள்ள மின் கம்பம் ஒன்றில் கடந்த சில வருடங்களாக வீதி வெளிச்சம் போடப்பட்டிருந்தது. சில மாதங்களுக்கு முன்னர் அது பழுதடைந்த நிலையில் மீண்டும் அதற்கான வெளிச்சம் போடப்படாமல் உள்ளது.

இதே நேரம், முக்கிய இடமான இச்சந்தியில் போடப்படாது இரண்டு புதிய மின் விளக்குகள் கல்வியங்காடு - பருத்தித்துறை வீதியிலிருந்து சற்றுத் தள்ளி இருக்கும் தனியார் வீடு ஒன்றுக்கு முன்பாகவும் அந்த வீட்டுக்குச் செல்லும் சிறிய ஒழுங்கைக்கு முன்பாக பருத்தித்துறை வீதியிலும், நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் விருப்பத்தின் பேரில் பொருத்தப்பட்டிருப்பதாக பொது மக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இச்சந்தியில், பல மாதங்களாக வீதி வெளிச்சம் இல்லாமலிருப்பதை எடுத்துக்காட்டி இலங்கை மின்சாரசபைக்கும், நல்லூர் பிரதேச சபைக்கும் பொது மக்களினால் செய்யப்பட்ட முறைப்பாடுகள் எதுவும் பலன் தரவில்லை என அவர்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவில் இவ்விடம் இருட்டாக காணப்படுவதினால் இவ்விடத்தில் அமைந்துள்ள ஆலயமொன்றின் வீதியில் இரவில் மது அருந்திப் புகைப்பிடிக்கும் கூட்டம் அதிகம் காணப்படுவதாகவும், வீதியில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் அதிளவில் காணப்படும் இப்பகுதியில் மின் விளக்குகள் அவசியம் பொருத்தப்பட வேண்டும் எனவும் இதன் முக்கியத்துவம் கருதி மின்சார சபையும், நல்லூர் பிரதேச சபையும் இதற்கான துரித நடவடிக்கையில் ஈடுபடல் வேண்டும் எனவும் பொதுமக்கள் பலரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (137)

# பதிவிறக்கப் பெட்டகம்

அவர் மற்றவர்களின் கருத்துக்களைப் புரிந்துகொண்டு, அவற்றை மதிப்பவர். அவரது அறிவுரை எப்போதும் மதிக் கத்தக்கதாக இருக்கும் – அதன்படி நாம் நடக்க முடியாமல் இருந்தாலும் கூட.
**– காந்தி பற்றி நேரு**

ஒவ்வொன்றையும் நன்றாகப் பார்க்க அது அதற்கான இடைவெளிகள் வேண்டும். சிலசமயம் காலத்தின் இடைவெளி. சிலசமயம் தூரத்தின் இடைவெளி.
**– ஜேஜே**

ஃபிரான்ஸ் அல்ஜீரியாவை அடிமைப்படுத்தி வைத்துள்ளது பற்றி கருத்துச் சொன்ன ஃப்ரெஞ்ச் எழுத்தாளர் சார்த்தருக்கு அவர் நாட்டு மக்கள் அளித்த பெயரும் துரோகிதான்.
**– ஸக்கரியா**

மற்ற ஒவ்வொரு மனிதனின் சுதந்திரத்தையும் அங்கீகரித்த பிறகேதான் எனது சுதந்திரத்தை நான் பயன்படுத்த முடியும். சுதந்திரத்துக்கான ஊற்றுக்கண் மற்றவர்களின் சுதந்திரத்தை ஏற்பதுதான். அதேசமயம் தமது சுதந்திரத்தையும் ஏற்றுக்கொள்ளுமாறு மற்றவர்களைக் கோருவதும் ஆகும். எனவே மனித சுதந்திரம் என்பது ஆரம்பத்திலிருந்தே இணக்கத்தையே தனது அடிப்படையாகக் கொண்டது.
**– சார்த்தர்**

உன்னைப் பற்றிய அவதூறுகளுக்கு விளக்கம் சொல்லி நேரத்தை வீணடிக்காதே. அவர்கள் கேட்க விரும்புவதை மட்டுமே கேட்பார்கள்.
**– பாவ்லோ கொய்லோ**

உங்களினுள்ளே அழகாகவோ அவலட்சணமாகவோ நீங்கள் இருப்பதை உங்களைத் தவிர வேறு ஒருவரால் எப்படிக் காட்ட முடியும்?
**– ஜெயகாந்தன்**

சோற்றால் அல்ல, வார்த்தைகளால் உயிர்வாழ்கிறோம்.
**– ராஜ சுந்தரராஜன்**

வார்த்தைகள் நிலவைக் காட்டும் விரல்கள். அவற்றைப் பிடித்துக்கொண்டு யாரும் தொங்க வேண்டாம். **– ஸென்**

அவர்கள் வலியவர்களாக இருப்பதற்குக் காரணம், அவர்கள் தாம் வலியவர்களாக இருப்பதாக எண்ணுவதுதான்.
**– லத்தீன் பழமொழி**

ஒருவருக்குத் தற்கொலை செய்துகொள்வதற்கான திறமை உண்டு என்றால், அவர் அதைச் செய்யவேண்டியதில்லை.
**– காஃப்கா**

தினமும் குடித்துக்கொண்டிருந்தவன் அதை நிறுத்தியதும் முதலில் தடுமாற்றங்களோடே இருப்பான், பிறகு அந்த வாழ்க்கை இலகுவாக ஆனபிறகு, ஒருவித விடுதலை உணர்வுக்கும் நிம்மதிக்கும் ஆளாவான். மீண்டும் குடிப்பதற்கான அழைப்புகள் விடுக்கப்படும்போது மிகுந்த தயக்கத்தோடு தவிர்ப்பான். “அளவோடு குடித்தால் தப்பில்லை” என்று நண்பர்கள் சொல்லும்போது ஒரு சஞ்சலம் ஏற்படும். ‘தேவைப்பட்டால் எப் போது வேண்டுமானாலும் இப்போதுபோலவே மீண்டும் நிறுத்திக்கொள்ளலாம், நான் ஒன்றும் குடி அடிமை அல்லவே’ என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டு ஒருநாள் குடிக்க ஆரம்பித்துவிடுவான்.
**– சார்லஸ்**

விருப்பப்படி வாழ முடியவில்லையே என்று சாகும்போது வருத்தப்படாதே.
**– கண்ணதாசன்**

நல்லவனாயிருந்து தோல்வியுறுவது கெட்டவனாயிருந்து ஜெயிப்பதை விட மேல்.
**– யாரோ**

உங்கள் கடந்தகால நிகழ்ச்சிகளில் நீங்கள் உங்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை மட்டுமே காண்கிறீர்கள். மனச்சாட்சி போடும் ஒவ்வொரு வரவு செலவுக் கணக்கையும் தன்னைப் பற்றிக் கழிவிரக்கம் கொள்ளவும் ஒரு சந்தர்ப்பமாக அந்த மனச்சாட்சி பயன்படுத்திக் கொள்கிறது. தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களையே நினைத்து வருத்தப்பட்டு அதன்மூலம் தன்னைத்தானே புகழ்பாடும் மனப்பான்மையை நான் மதிக்க முடியாது. வேண்டுமென்றே இப்படி ஒருவர் வருந்தும் போக்கை நான் வெறுக்கிறேன். அதனால் உண்மையான துயரத்தையோ, தியாகம் செய்தவரின் கடும் மனத் துயரையோ புரிந்துகொள்ள ஒருவனால் இயலாது. மற்றவர்களின் துயரங்கள், மற்றவர்களின் வேதனைக் கதறல், மற்றவர்களின் மரண பயம் ஆகியவற்றை நம் நினைவில் தேடும் பழக்கத்தை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.
**– நிரபராதிகளின் காலம் நாடகத்தில்**

அனைத்து உயிர்களையும் தன்னுள் காண்பவன் மட்டுமே உண்மையில் காண்பவனாகிறான்.
**– ஈசா உபநிஷதம்**

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

இரசாயனவியல்

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

**களிக்கந்தகத்தை தயாரித்தல்**

ஒரு முகவையில் நீரை ஆயத்தமாக வைத்துக்கொள்க. கந்தகத்தூளை ஒரு சோதனைக் குழாயில் 3 ச.மீ. ஆழத்திற்கு எடுத்து மெதுவாக வெப்பமேற்றுக. கந்தகம் நிறமாற்றம் அடைந்து 114.5$^0$C யில் உருகும். ஒரு அம்பர் (Amber) நிறத்திரவமாக மாறும். 160$^0$C யில் அதுபாகு (Viscous) ஆகமாறுகிறது. தொடர்ந்தும் வெப்பமேற்றுக. திரவம் கருமையடைந்து பாகுத்தன்மை குறைந்துவிடும். 444$^0$C யில் இது கொதித்து ஆவியைத்தரும். இந்நிலையில் கந்தகத் திரவத்தை குளிர் நீருக்குள் ஊற்றுக. கந்தகம் களிக்கந்தகமாக திண்ம நிலையடைகிறது.

**பளிங்குருவற்ற கந்தகம் : கூழ்க்கந்தகம்**

பொற்றாசிய பரமங்கனேற்றுக் கரைசலுக்குள் ஐதரசன் சல்பைட்டைச் செலுத்துக. அதன் ஊதா நிறம் மறைந்ததும் ஐதான HCl ஐ சேர்த்து இளம் சிவப்பு மங்கனசு சல்பைட்டை கரைக்கவும்.

$8H_2S + 2KMnO_4 \rightarrow K_2S + 2MnS + 8H_2O + 5S$
$MnS + 2HCl \rightarrow MnCl_2 + H_2S$

தூய வெள்ளை நிறமான கூழ்க்கந்தகம் மிகுதியாகவிருக்கும்

**ஐதரசன் சல்பைட்டு ($H_2S$)**

**தயாரிப்பு** : ஐதரசனை உருக்கிய கந்தகத்திற்கூடாகச் செலுத்தி ஐதரசன் சல்பைட்டை நேரடியாகத் தயாரிக்கலாம்.

$H_2 + S \rightarrow H_2S$

ஆய்வுகூடத்தில் ஐதரசன் சல்பைட்டைத் தயாரிப்பதற்கு இரும்பு சல்பைட்டுடன் ஐதரோக்குளோறிக்கமிலத்தை தாக்கமுறச் செய்யலாம். இப் பரிசோதனைக்கு கிப்பின் ஆய்கருவியை உபயோகித்தால் ஐதரசன் சல்பைட்டை வேண்டிய சமயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

$FeS + 2HCl \rightarrow H_2S \uparrow + FeCl_2$

பெரசு சல்பைட்டு தூய நிலையில் கிடைப்பதில்லை. அதனுடன் இரும்பு மாசுப்பொருளாகக் காணப்படுவதால் அமிலத்துடன் இரும்பின் தாக்கத்தினால் உருவாகும் ஐதரசனும், ஐதரசன் சல்பைட்டுடன் கலந்து காணப்படும். அந்திமணி சல்பைட்டுடன் செறிந்த ஐதரோக்குளோறிக்கமிலம் தாக்கமுறுவதாலும் ஐதரசன் சல்பைட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

$Sb_2S_3 + 6HCl \rightarrow 2SbCl_3 + 3H_2S$

**பௌதிகவியல்புகள்**

i) ஐதரசன் சல்பைட்டு ஒரு நிறமற்ற வாயு, ஏறக்குறைய கூழ்முட்டையின் மணத்தை உடையது.
ii) அது வளியிலும் சிறிதுபாரம் கூடியது.
iii) அது நீரில் ஓரளவு கரையும் கரைசல் ஐதரசன் சல்பைட்டின் மணத்தை உடையதாகும்.
iv) இது மிகுந்த நச்சுத்தன்மையான வாயு. சிறிதளவில் சுவாசித்தால் தலையிடி உண்டாகும். பெருமளவு சுவாசிக்கப்பட்டால் மரணம் சம்பவிக்கலாம். (1% அபாயகரமானது)
v) இதை இலகுவாக திரவமாக்கலாம். (கொதிநிலை = 60$^0$C) திண்மமாக்கலாம் (உருகுநிலை = -83$^0$C)

**இரசாயனவியல்புகள்**

i) ஐதரசன் சல்பைட்டு வளியில் நீலச்சுவாலையுடன் எரியும். வளிபற்றாக்குறையாக இருப்பின் நீரும் கந்தகமும் மட்டும் உண்டாகும்.

$2H_2S + 3O_2 \rightarrow 2H_2O + 2SO_2$

$2H_2S + O_2 \rightarrow 2H_2O + S$

ii) வெப்பக் கூட்டப்பிரிகை : ஐதரசன் சல்பைட்டு வெப்பத்தினால் ஐதரசனாகவும் கந்தகமாகவும் பிரியும்.

$H_2S \rightleftharpoons H_2 + S$

இத்தாக்கம் 310$^0$C யில் ஆரம்பித்து 770$^0$C யில் பூர்த்தியாகும்.

iii) **அமிலவியல்பு** : ஐதரசன் சல்பைட்டின் நீர்க்கரைசல் ஒரு இரு மூல அமிலமாகத் தொழிற்படுகிறது. இக்கரைசலை ஐதரோ சல்பூரிக்கமிலம் என்று அழைக்கலாம். உலர்ந்த ஐதரசன் சல்பைட்டுக்கு பாசிச் சாயத்தாளில் தாக்கமில்லை. ஆனால் ஈரலிப்பான ஐதரசன் சல்பைட்டு நீலப் பாசிச்சாயத்தாளை மென் சிவப்பாக மாற்றும். ஆகவே இது ஒரு மென் அமிலமாகும். அயனாக்கம் நீரில் இரண்டு நிலையில் நிகழும். பிந்தியது குறைந்த அளவில் நிகழும்.

$H_2O + H_2S \rightleftharpoons H_3O^+ + HS^-$

$H_2O + HS^- \rightleftharpoons H_3O^+ + S^{2-}$

காரக் கரைசல்களுடன் தாக்கமுறும்போது ஐதரோ சல்பைட்டையும், சல்பைட்டையும் உருவாக்கும்.

**உதாரணம் :**

i) $NaOH + H_2S \rightleftharpoons NaHS + H_2O$
$OH^- + H_2S \rightleftharpoons H_2O + HS^-$

ii) $NaHS + NaOH \rightleftharpoons Na_2S + H_2O$
$HS^- + OH^- \rightleftharpoons H_2O + S^{2-}$

விளைபொருட்களாகப் பெற்றுக்கொள்ளப்படும் உப்புக்கள் இரு சந்தர்ப்பங்களிலும் நீர் பகுப்பு அடையக்கூடியவையாகும். (மீள் தாக்கம்) ஆகவே இவற்றின் கரைசல்கள் காரவியல்பைக் காட்டும்.

iv) ஐதரசன் சல்பைட்டு ஒரு தாழ்த்தும் கருவியாகும்.

a) இது அலசன்களை அலசன் அமிலங்களாகத் தாழ்த்துகிறது.
உதாரணம் : $H_2S + Cl_2 = 2HCl + S\downarrow$

$H_2S + Br_2 \rightarrow 2HBr + S\downarrow$

கந்தகம் மஞ்சள்நிற வீழ்படிவாகக் கிடைக்கின்றது.

b) இது கந்தக வீரொட்சைட்டை கந்தகமாகத் தாழ்த்தும்.
$SO_2 + 2H_2S \rightarrow 3S + 2H_2O$

c) அமிலமாக்கப்பட்ட இருகுறோமேற்றுக் கரைசல்களையும் குறோமேற்றுக் கரைசல்களையும் (இவை அமில ஊடகத்தில் இரு குறோமேற்றுக்களாக மாறும்) தாழ்த்தி குறோமிக் உப்புக்களாக மாற்றும். செம்மஞ்சள் நிறமான இரு குறோமேற்றுக் கரைசல், பச்சை நிறமான நீரேறிய குறோமிக் அயனாக மாறுகிறது.

$K_2Cr_2O7 + 4H_2SO_4 + 3H_2S \rightarrow K_2SO_4 + Cr_2(SO_4)_3 + 7H_2O + 3S\downarrow$
செம்மஞ்சள் பச்சை

$Cr_2O_7^{2-} + 8H^+ + 3H_2S \rightarrow 2Cr^{3+} + 7H_2O + 3S$

d) இது பரமங்கனேற்றுக் கரைசல்களை (ஊதா நிறம்) தாழ்த்தி மங்கன அயன் கரைசல்களாக (நிறமற்றது) மாற்றுகிறது.

உதாரணம் :
$2KMnO_4 + 3H_2SO_4 + 5H_2S \rightarrow \underbrace{K_2SO_4 + 2MnSO_4 + 2\ MnSO_4}_{} + 8H_2O + 5S$

(ஊதா) நிறமற்றவை

$2MnO_2 + 6H^+ + 5H_2S \rightarrow 5S + 8H_2O + 2Mn^{2+}$

a) பெரிக்கு உப்புக்களை பெரசு உப்புக்களாகத் தாழ்த்துகின்றது.

**உதாரணம் :-**
$2FeCl_3 + H_2S \rightarrow 2FeCl_2 + 2HCl + S$
$2Fe^{3+} + H_2S \rightarrow 2Fe^{2+} + 2H^+ + S\downarrow$

b) இது சல்பூரிக்கமிலத்தை கந்தகவீரொட்சைட்டாகத் தாழ்த்துகிறது. நைத்திரிக் கமிலத்தை நைதரசன் ஈரொட்சைட்டாக தாழ்த்துகிறது.

$H_2SO_4 + H_2S \rightarrow SO_2\ 2H_2O + S$
$2HNO_3 + H_2S \rightarrow 2NO_2 + 2H_2O + S$

**குறிப்பு:** ஐதரசன் சல்பைட்டை உலர்த்துவதற்கு செறிந்த கல்பூரிக்கமிலத்தை உபயோகிப்பதில்லை. உலர்த்த வேண்டுமாயின் பொஸ்பரசு ஒட்சைட்டை அல்லது கல்சியம் குளோரைட்டை உபயோகிக்கலாம்.

**c) வீழ்படிவாக்கல் தொடர்பான தாக்கங்கள்**

பல உலோகங்களின் சல்பைட்டுக்களை வீழ்படிவாக்க பண்பறி பகுப்பில் ஐதரசன் சல்பைட்டு உபயோகிக்கப்படுகிறது. நடைமுறையில் கட்டுப்பாட்டு நிபந்தனைகளை உபயோகித்து இரண்டு வகையான சல்பைட்டுக்களை இனம் காணக்கூடியதாக வகுக்கலாம். பண்பறி பகுப்புத் தொகுதி II ஆம் தொகுதி IV உம் (இவை ஆவர்த்தன அட்டவணை தொகுதிகள் அல்ல)

**தொகுதி II:** அமில ஊடகத்தில் உள்ள உலோக உப்புக்களின் கரைசல்களுக்குள் ஐதரசன் சல்பைட்டைச் செலுத்தினால் இரசம் (II) ஈயம், பிசுமத், செம்பு (II) கட்மியம், ஆசேனிக்கு, அந்திமனி, வெள்ளீயம் ஆகியவற்றின் சல்பைட்டுகள் வீழ்படிவாகும்.

**உதாரணம்:**

$$Pb(NO_3)_2 + H_2S = PbS\downarrow + 2HNO_3$$

கரிய

$$Pb^{++} + H_2S = PbS\downarrow + 2H+$$

**தொகுதி IV:** இத் தொகுதி உலோக சல்பைட்டுகள் அவற்றின் உலோக உப்புக்களின் கரைசல்களை, அமோனியம் குளோரைட்டு, அமோனியம் ஐதரொட்சைட்டு ஆகிய கரைசல்களைச் சேர்த்து கார ஊடகமாக்கிய பின்னர் அதனூடாக ஐதரசன் சல்பைட்டைச் செலுத்தி பெறப்படும். இவ்வாறு வீழ்படிவாவது நிக்கல், கோபால்ற், மங்கனீசு, நாகம் ஆகியவற்றின் சல்பைட்டுக்கள் ஆகும்.

**ஐதரசன் சல்பைட்டுக்கான சோதனை.**

ஈய அசற்றேற்றுக் கரைசலில் தோய்த்த வடிதாளில் ஐதரசன் சல்பைட்டு பட்ட மாத்திரத்தில் கரிய நிறமான ஈயசல்பைட்டு வீழ்படிவாகக் கிடைக்கின்றது.

$$(CH_3COO)_2\,Pb + H_2S \rightarrow PbS\downarrow + 2CH_3COOH$$

$$Pb^{++} + H_2S \rightarrow PbS\downarrow + 2H^+$$

**நீரின் இயல்புகளை ஐதரசன் சல்பைட்டின் இயல்புகளுடன் ஒப்பிடுதல்.**

எல்லா ஆறாம் தொகுதி மூலகங்களும் $H_2X$ என்ற பொதுச் சூத்திரமுடைய ஐதரைட்டுக்களை உருவாக்கும். நீரைவிட ஏனைய ஐதரைட்டுகள் நச்சுத்தன்மை வாய்ந்த வாயுக்களாகும். நீர் மணமற்றது. ஏனைய ஐதரைட்டுகள் மணமுள்ளவை. பின்வரும் அட்டவணை ஆறாம் தொகுதி மூலகங்களின் ஐதரைட்டுகளின் பௌதிகவியல்புகளை எடுத்துக்காட்டுகிறது. எமது பாடத் திட்டத்தில் நீரையும் ஐதரசனையும் ஒப்பிட்டறிதல் போதுமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

| இயல்பு | $H_2O$ | $H_2S$ | $H_2Se$ | $H_2Te$ |
|---|---|---|---|---|
| 1. சூத்திரத்திணிவு | 18·0 | 34·0 | 80·0 | 129·6 |
| 2. உருகுநிலை °C | 0·00 | – 85·60 | – 60·4 | – 51° |
| 3. கொலை நிலை °C | 100·00 | – 60·75 | – 41·5 | – 1·8° |
| 4. மாறுநிலை வெப்பநிலை °C | 374·1 | 100·4 | 137 | — — |
| 5. உருகல் மறை வெப்பம் Kcal/mol | 1·435 | ·568 | — — | — — |
| 6. ஆவியாதல் மறை வெப்பம் Kcal/mol | 9·719 | 4·468 | 4·75 | 5·7 |
| 7. தோன்றல் வெப்பம் Kcal/mol | 68·35 | 4·80 | - 18·5 | – 34·2 |
| 8. இருமுனைவுத் திருப்பு திறன் உரிய அலகில் | 1·85 | 1·10 | — — | — — |
| 9. அடர்த்தி (உருகு நிலையில்) gm/mol | 0·958 | 0·993 | 2·004 | 2·650 |
| 10. மின் கூட்டற் பிரிகை 18 °C யில் | $1{\cdot}07\times10^{-14}$ | $\cdot91\times10^{-7}$ | $1{\cdot}7\times10^{-4}$ | $2{\cdot}3\times10^{3}$ |

இவற்றில் சில இயல்புகளைப்பற்றி நீங்கள் அறிந்திருக்கமாட்டீர்கள். பிந்திய அலகுகளில் இவற்றைப்பற்றி அறிவீர்க்ள்.

பௌதிகவியல்புகளைக் கவனிக்கும் போது நீரின் பலவியல்புகள் அதே தொகுதியில் உள்ள ஐதரசன் சல்பைட்டின் இயல்புகளிலும் (ஏனைய ஐதரைட்டுக்களில் இருந்தும்) வேறுபடுவதை அவதானிக்கலாம். இதற்கான காரணம் நீர் ஐதசன் பிணைப்புக்களைக் கொண்ட தொகுதி அமைப்புக்களைக் கொண்டுள்ளது. ஐதரசன் சல்பைட்டில் இவ்வாறான பிணைப்புக்கள் இல்லை என்பதாகும்.

**இரண்டு பதார்த்தங்களிலும் மூலக்கூறுகள் நேர்கோடற்ற அமைப்பை உடையவையாகும்.**

ஆனால் ஒட்சிசன், கந்தகம் அணுவிலும் அதிக மின் எதிர்மை உடையது. (தொகுதியின் வழியே மின் எதிர்மை குறையும்) மேலும் ஒட்சிசன் அணு கந்தகம் அணுவிலும் சிறிய அணுவாகும். இதனால் ஒட்சிசன் அணு ஐதரசனுடன் ஏற்படுத்தியுள்ள பங்கீட்டு வலுப்பிணைப்பில் உள்ள இலத்திரன்களை தன்பால் கவர்வதால், இவ் ஐதரசன் ஒரு போதியளவு நேர் ஏற்றமுடையதாக இருக்கும். இந்த ஐதரசன் அணு அடுத்துள்ள நீர் மூலக்கூறில் உள்ள எதிர் முனையை போதியளவு வன்மையாகக் கவரும். இக்கவர்ச்சிப் பிணைப்பே ஐதரசன் பிணைப்பாகும். இத் தொகுதியில் உள்ள ஏனைய மூலகங்களுக்கு இத்தகைய பிணைப்பு ஏற்படுத்த முடியாது. ஏனெனில் அவை பெரிய பருமனும் குறைந்த மின் எதிர்மையும் உடைய அணுக்களைக் கொண்டவையாகும். ஐதரசன் பிணைப்பு நீளங்கள் சாதாரண பங்கீட்டுப் பிணைப்பு நீளங்களிலும் நீண்டவை. பனிக்கட்டியின் அடர்த்தி குறைவாகவிருப்பதற்கு ஐதரசன் பிணைப்புக்கள் மூலக்கூறுகளுக்கிடையில் அதிக இடைவெளிகளை ஏற்படுத்துவதாகும். மேலும் இப்பிணைப்புகள் தகர்க்கப்படுவதற்கு அதிக சக்தி தேவை என்பதனால் நீரின் உருகல் மறை வெப்பம் உயர்ந்ததாகவும் இருக்கிறது. மேலும் கொதி நிலைகள் உயர்வாய் இருப்பது, ஆவியாதல் மறைவெப்பம் உயர்வாய் இருப்பது, எஞ்சிய ஐதரசன் பிணைப்புகள் உடைக்கப்பட அதிக சக்தி தேவை என்பதனால் ஆகும்.

## கந்தகவீரொட்சைட்டு $SO_2$

**தயாரிப்பு :** கந்தகம் வளியில் அல்லது ஒட்சிசனில் எரிக்கப்பட்டால், கந்தகவீரொட்சைட்டு உண்டாகும். அதனுடன் சிறிதளவு கந்தக மூவொட்சைட்டும் உண்டாகலாம்.

$$S + O_2 = SO_2$$

ஆய்வுகூடத்தில் சோடியம் சல்பைற்றுடன் ஐதான சல்பூரிக்கமிலம் தாக்கமுறுவதனால் பெற்றுக்கொள்ளப்படும்.

$$Na_2SO_3 + H_2SO_4 \rightarrow H_2O + SO_2\uparrow + Na_2SO_4$$

$$SO_3^{2-} + 2H+ \rightarrow H_2O\ SO_2\uparrow$$

ஆய்வுகூடத்தில் செறிந்த சல்பூரிக்கமிலத்துடன் செப்புத்துருவலை வெப்பமேற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

$$Cu + 2H_2SO_4 = CuSO_4 + 2H_2O + SO_2$$

**பௌதிக இயல்புகள் :**

கந்தகவீரொட்சைட்டு ஒரு நிறமற்ற, மூச்சைத் திணற வைக்கும் வாயுவாகும். எரியும் கந்தகத்தின் மணத்தை உடையது. இது நீரில் நன்றாகக் கரையக்கூடியதாகும். $\theta\,^0C$ யில் ஒரு கனவளவு நீரில் 80 கனவளவு வாயு கரையும். இலகுவில் திரவமாக்கலாம். $20^0C$ யில் மூன்று வளிமண்டல அமுக்கத்தினால் திரவமாக்கக்கூடியது. இத் திரவத்தின் கொதி நிலை $20^0C$ ஆகும்.

**இரசாயன இயல்புகள்:**

கந்தகவீரொட்சைட்டு நீரில் கரைத்து சல்பூரசு அமிலம் உண்டாகின்றது. சல்பூரசு அமிலத்தை வெப்பமேற்றினால் அது மீண்டும் பிரிந்து நீராகவும் கந்தகவீரொட்சைட்டாகவும் பிரியும். சல்புரசு அமிலம் ஒரு மென் அமிலமாகும். சல்புரசு அமிலம் கரைசலாகவே அறியப்பட்டுள்ளது.

$$SO_2 + H_2O \rightleftharpoons H_2SO_3 \rightleftharpoons H^+ + HSO_3 \rightleftharpoons 2H^+ + SO_3^{2-}$$

கந்தகவீரொட்சைட்டு அமிலவியல்புள்ள வாயுவாகையால் அது சோடியம் ஐதரொட்சைட்டுப் போன்ற காரக் கரைசல்களுடன் தாக்கமுற்று சல்பைற்றுக்கள், ஐதரசன் சல்பைற்றுக்கள் ஆகிய உப்புக்களைத் தரும்.

$$2NaOH + SO_2 \rightarrow Na_2SO_3 + H_2O$$

$$NaOH + SO_2 \rightarrow NO_2HSO_3$$

நீருடனும் காரங்களுடனும், $SO_2$ வின் தாக்கம், காபனீரொட்சைட்டின் தாக்கத்திற்கு ஒத்ததாகும்.

**கந்தகவீரொட்சைட்டு ஒரு தாழ்த்தும் கருவியாகும்.**

**உதாரணம் :-**

i) அமில பொற்றாசியம் பரமங்கனேற்றுக் கரைசலை இது நிறமற்றதாக மாற்றுகிறது.

$$2KMnO_4 + 3H_2SO_4 = K_2SO_4 + 2MnSO_4 + 3H_2O + 5\ \text{'O'}$$

$$5\text{'O'} + 5SO_2 + 5H_2O + 5H_2SO_4$$ கூட்டல்

$$2KMnO_4 + 5SO_2 + 2H_2O = K_2SO_4 + 2MnSO_4 + 2H_2SO_4$$

**அல்லது**

$$5SO_2 + 2MnO_4^- + 2H_2O = 5SO4^{2-} + 4H^+ + 2\,Mn^{2+}$$

**உதாரணம் : ii)**

அமில பொற்றாசியம் இரு குரோமேற்றுக் கரைசலுக்குள் கந்தகவீரொட்சைட்டு வாயு செலுத்தப்பட்டால் கரைசல் பச்சை நிறமாக மாறும்.

$$K_2Cr_2O_7 + 4H_2SO_4 \rightarrow K_2SO_4 + Cr_2(SO_4)_3 + 4H_2O + 3\text{'O'}$$

$$3\text{'O'} + 3SO_2 + 3H_2O \rightarrow 3H_2SO_4$$ பச்சை கூட்டல்

$$K_2Cr_2O_7 + 3SO_2 + H_2SO_4 \rightarrow K_2SO_4\ _Cr_2(SO_4)_3 + H_2O$$

**அல்லது**

$$Cr_2O_7^{2-}\ 3SO_2 + 2H^+ \rightarrow 3SO_4^{2-} + H_2O + 2Cr^{3+}$$

**உதாரணம் : (iii)**

பெரிக்கு உப்புக்களை பெரசு உப்புக்களாகத் தாழ்த்தும்

$$Fe_2(SO_4)_3 + 2H_2O + SO_2 \rightarrow 2\,FeSO_4 + 2H_2SO_4$$

**அல்லது**

$$2Fe^{3+} + SO_2 + 2H_2O \rightarrow 2Fe^{2+} + SO_4^{2-} + 4H^+$$

**உதாரணம் : iv)** அலசன்களை அலசன் அமிலங்களாகத் தாழ்த்தும்

$$Cl_2 + SO_2 + 2H_2O \rightarrow H_2SO_4 + 2HCl^{3-}$$

$$Cl_2 + SO_2 + 2H_2O \rightarrow SO_4^{2-} + 2Cl + 4H^+$$

$$I_2 + SO_2 + 2H_2O \rightarrow SO_4^{2-} + 2I^- + 4H^+$$

மேலே விபரித்த கந்தகவீரொட்சைட்டின் தாழ்தல் தாக்கங்களை, அவை ஈரலிப்பான சூழலில் நிகழ்வதால், சல்புரசு அமிலத்தின் தாக்கங்களாக இன்னும் சிறப்பாக சல்பைற்று அயன்களின் $(SO_3^-)$ தாக்கங்களாகக் கருதலாம்.

$$SO_2 + H_2O \rightleftharpoons H_2SO_3 \rightleftharpoons (H+)_2\,SO_3^{2-}$$

**உதாரணம் :**

$Cl_2 + SO_3^{2-} + H_2O = 2Cl^- + SO_4^{2-} + 2H^+$

கந்தகவீரொட்சைட்டுக் கரைசலை நீண்ட நேரம் வளியில் திறந்து வைத்தால் அது சல்பூரிக்கமிலமாக ஒட்சியேற்றப்படும்.

$$H_2O + SO_2 = H_2SO_3$$

$$2H_2SO_3 + O_2 = 2H_2SO_4$$

$$ie :: 2SO_3^{2-} + O_2 = SO_4^{2-}$$

### கந்தகவீரொட்சைட்டின் வெளிற்றும் தாக்கம்

ஈரலிப்பான கந்தகவீரொட்சைட்டு பல தாவரச் சாயங்களை நிறநீக்கம் அடையச் செய்யும். இத்தாக்கம் தாழ்த்தலால் நிகழ்கின்றது. இவ்வாறு வெளிற்றப்பட்ட பதார்த்தங்கள் வளியில் வைக்கப்பட்டால் வளி ஒட்சிசனால் ஒட்சியேற்றப்பட்டு மீண்டும் நிறத்தைப் பெற்றுக்கொள்ளும். ஆகவே கந்தகவீரொட்சைட்டினால் வெளிற்றுவது நிலையற்றதாகும்.

தாவர நிறப்பொருள் $+ SO_2 + 2H_2O \rightleftharpoons$ தாழ்த்தப்பட்ட நிறப்பொருள் $+ H_2SO_4$

கந்தகவீரொட்சைட்டு உள்ள வாயுச் சாடியினுள் ஈரலிப்பான நீலப் பாசித்தாளை இட்டால் அது சிவப்பாக மாற்றப்பட்டு பின்பு வெளிற்றப்படும். இதேபோல் சில செவ்வரத்தம் இதழ்களை இட்டால் அவை வெளிற்றப்படுவதை அவ தானிக்கலாம்.

**கந்தகவீரொட்சைட்டின் ஒட்சியேற்றுமியல்பு**

கந்தகவீரொட்சைட்டு சில சந்தர்ப்பங்களில் ஒட்சியேற்றும் கருவியாகவும் தொழிற்படலாம். உதாரணமாக $SO_2$ வாயு நிரம்பிய ஒரு வாயுச் சாடியை, ஐதரசன் சல்பைட்டு உள்ள வாயுச் சாடியின் மீது கவிழ்த்தால் அல்லது இரண்டினதும் நீர்க்கரைசல்களை கலந்தால் கந்தகம் வீழ்படிவாகும்.

$$SO_2 + 2H_2S = 3S + 2H_2O$$

இத்தாக்கத்தில் $H_2S$ வலிமையான தாழ்த்தும் கருவியாகும்.

கந்தகவீரொட்சைட்டில் பொற்றாசியம் மக்னீசியம் போன்ற உலோகங்கள் தொடர்ந்து எரியும் என்பதும் ஒட்சியேற்றலை எடுத்துக்காட்டும்.

**கந்தகவீரொட்சைட்டிற்கான சோதனை**

i) கந்தகம் எரியும் மணத்தை உடையது.

ii) பொற்றாசியம் இருகுறோமேற்றுத் தாளை பச்சை நிறமாக மாற்றும்.

பெற்றாசியம் குறோமேற்றும் இந்நிறத்தைத் தரும். அமில ஊடகத்தில் பொற்றாசியம் குறோமேற்று பொற்றாசியம் இரு குறோமேற்றாக மாறும். பின்பு பச்சை நிறமாக மாறும்.

**கந்தகவீரொட்சைட்டின் பயன்கள்**

i) சல்பூரிக்கமிலத்தின் தொழில்முறைத் தயாரிப்பில் உபயோகப்படுகிறது.

ii) மென்மையான பொருட்களை வெளிற்றுதல், வெல்லத்தை (சீனி) தரப்படுத்துதல் (Refining)

iii) கிருமி நாசினியாகவும், புகைபோட்டு சுத்தம் செய்யவும் (fumigation) உபயோகப்படுகின்றது.

iv) கந்தகவீரொட்சைட்டு குளிர்சாதனப் பெட்டிகளில் குளிரூட்டியாக உபயோகபபடு கின்றது.

### சல்பூரிக்கமிலம் $H_2SO_4$

1) சல்பூரிக்கமிலம் முன்பு துத்தத்தைலம் (oil of vitriol) என்று அழைக்கப்பட்டது. ஏனெனில் பெரசு சல்பேற்று பளிங்குகளை வடித்து முன்னர் தயாரிக்கப்பட்டது. இப்பொழுது பெரும் தொழிலில் உள்ள மிக முக்கியமான சேர்வை சல்பூரிக்கமில மாகும். இது தொடுகை முறையினால் பெருந்தொழிலில் தயாரிக்கப்படுகிறது.

**தொடுகை முறை:**

A) தொடுகை முறையின் படிகள்

i) கந்தகவீரொட்சைட்டு கந்தகத்தை எரித்து அல்லது இரும்பு கந்தகக் கல்லை அல்லது நாகமயக்கியை எரித்து பெறப்படுகிறது.

$$S + O_2 \rightarrow SO_2$$

$$4FeS_2 + IIO_2 \rightarrow 2Fe_2O^3 + 8SO_2$$

$$2ZnS + 3O_2 \rightarrow 2ZnO + 2SO_2$$

ii) இவ்வாறு பெறப்பட்ட கந்தகவீரொட்சைட்டு ஊக்கிகளின் முன்னிலையில் வளி ஒட்சிசனை உபயோகித்து கந்தக மூவொட்சைட்டாக ஒட்சியேற்றப்படுகிறது.

$$2SO_2 + O_2 \xrightarrow{V_2O_5} 2SO_3 + 2 \times 27.6 \text{ கி.கலோரிகள்}$$

$\leftarrow$

ஊக்கியுடன். இவ் வாயுக்களின் தொடுகையில் தாக்கங்கள் நிகழ்வதனால் இம்முறை தொடுகைமுறை எனப்படுகிறது. வெவ்வேறு தொழில் முறைகளில் வெவ்வேறு ஊக்கிகள் உபயோகப்படுகின்றன. இரும்புக் குழாய்கள் சோடியம் வனடேற் அல்லது வனேடியமையொட்சைட்டினால் நிரப்பப்பட்டு இவற்றினூடாக முன்பே சூடாக்கப்பட்ட வாயுக் கீலவைள் அனுப்பப்படுகின்றன. இத்தாக்கம் புற வெப்பத் தாக்கமாகையால், தாக்கம் நிகழத் தொடங்கிய பின்பு வெப்பம் ஏற்றப்படத் தேவையில்லை. இத்தாக்கத்தின் சிறப்பு வெப்பநிலை $450^0C$ ஆகும்.

iii) இவ்வாறு பெறப்பட்ட கந்தக மூவொட்சைட்டு சல்பூரிக்கமிலத்தில் உறிஞ்சப்படுகிறது. விளைபொருளாக புகைக் கந்தகவமிலம் (Oleum) கிடைக்கிறது. இதனுடன் நீர் சேர்க்கப்பட்டு தேவையான செறிவுக்கு மாற்றப்படலாம்.

$SO_3 + H_2SO_4 \rightarrow H_2S_2O_3$ (புகை சல்பூரிக்கமிலம்

$H_2S_2O_3 + H_2O \rightarrow 2H_2SO_4$ அல்லது புகை கந்தகவமிலம்)

**உயர் விளைவைத் தரும் நிபந்தனைகள்**

சல்பூரிக்கமிலத்தின் அடிப்படைத் தாக்கம் கந்தக மூவொட்சைட்டு உருவாவது ஆகும்.

$$2SO_2 + O_2 \underset{V_2O_5}{\leftrightarrows} 2SO_3 ; \Delta H = \cdot 45200 \text{ கலோரிகள்}$$

இத்தாக்கம் மீள்தாக்கமாகவும், புறவெப்பத் தாக்கமாகவும், கனவளவுக் குறைவுடன் நிகழ்வதாகவும் அமைந்துள்ளது. இலச்சற்றலியேயின் விதியின்படி உயர்விளைவைத் தரக்கூடிய நிபந்தனைகளாவன.

**தாழ்ந்த வெப்பநிலை:**

இத்தாக்கம் புற வெப்பத் தாக்கமாகையால், தாழ்ந்த வெப்பநிலை, கந்தகமூவொட்சைட்டின் உயர் விளைவைத் தூண்டும். ஆனால் வெப்பநிலை மிகவும் குறைவாகவிருந்தால் தாக்கவீதம் மிகவும் மந்தமாகக்கூடும். ஆகவே தாக்கவீதத்தை மந்தமாக்காமல் அதே சமயம் உயர் விளைவைத் தரக்கூடிய ஒரு சிறப்பு (optimum) வெப்பநிலையில் இம் மாற்றத்தை நிகழ்த்த வேண்டும். இச் சிறப்பு வெப்பநிலை ஏறக்குறைய $450^0C$ ஆகும். இவ்வெப்ப நிலையில் 95 தொடக்கம் 98 சதவீதம் வரையிலான மாற்ற வீதத்தைப் பெற்றுக்கொள்ள லாம்.

**உயர் அமுக்கம் :**

இத்தாக்கம் நிகழும் போது கனவளவுக் குறைவு நிகழ்கின்றது. 3 கனவளவு தாக்கிகள் தாக்கமுற்று 2 கனவளவு விளைபொருட்களைக் கொடுக்கின்றது. இத்தாக்கத்தின் போக்கில் அமுக்கம் குறைகின்றது. ஆகவே உயர் அமுக்கம் உயர்விளைவைக் கொடுக்கும். தாக்க வீதத்தையும் கூட்டும். ஆனால் சாதாரண அமுக்கத்தில் விளைவின் அளவும், தாக்கவீதமும் திருப்திகரமாகவிருக்கின்றது. ஆகவே அமுக்கத்தைக் கூட்டுவதற்காக தேவைப்படும் உபகரண நிர்மாணச் செலவு தேவையற்றதாகக் கருதப்படுகிறது.

**மேல் அதிகமான ஒட்சிசன்:**

ஒட்சிசன் செறிவு மேலதிகமாக இருந்தால் தாக்கத்தின் சமநிலை இடது பக்கமாகத் தள்ளப்படும். ஆகவே நடைமுறையில் தேவைக்கும் சிறிதளவு அதிகமான ஒட்சிசன் (அல்லது வளி) உபயோகிக்கப்படும். நவீன தொழிறசாலை களில் திரவவளியில் இருந்து ஒட்சிசன் பெறப்படுகிறது.

**ஊக்கியின் உபயோகம்:**

தாழ்ந்த வெப்பநிலையில் இத்தாக்கம் செயற்படுத்தப்படுவதால் ஊக்கியின் உபயோகம் அவசியமாகிறது. வனேடியம் ஐஒட்சைட்டு $(V_2O_5)$ ஊக்கியாக உபயோகப்படுகிறது.

ஊக்கியின் உபயோகத்தில் அது நஞ்சூட்டப்படாமல் (செயல் இழக்காமல்) இருப்பதற்காக கந்தகவீரொட்சைட்டு மிகவும் கடுமையாக துப்புரவாக்கப்படும். ஆசனிக்கு போன்ற மாசுக்கள் அகற்றப்படும்.

**சல்பூரிக்கமிலத் தொழில்முறைத் தயாரிப்பில் சக்தி மாற்றங்கள்:**

இத்தாக்கம் புறவெப்பத் தாக்கமாகையால் தாக்கத்தின் பெருமளவு சக்தி வெளிவிடப்படும். ஆகவே ஆரம்பத்தில் மட்டும் இத்தாக்கிகளுக்கு சக்தி வழங்கப்படும். தாக்கத்தில் விடுவிக்கப்படும் சக்தி உள்ளே வரும் வாயுக்களை வெப்பமேற்றும் வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கும்.

### சல்பூரிக்கமிலத்தின் இயல்புகள்

**பௌதிகவியல்புகள் :**

இது ஒரு நிறமற்ற பாகுபோன்ற திரவமாகும். இதன் அடர்த்தி 1.85 g $cm^{-2}$ இதன் கொதி நிலை $338^0C$. கொதிநிலையில் வடிதிரவத்தின் அமைப்பில் 98.3 சதவீதம் சல்பூரிக்கமிலம், மிகுதி நீருமாகும்.

செறிந்த சல்பூரிக்கமிலம் வளியில் புகைக்கும். சல்பூரிக்கமிலத்தின் உயர்ந்த கொதிநிலைக்கும் பாகுத் தன்மைக்கும் காரணம், இவற்றின் மூலக்கூறுகளுக் கிடையில் காணப்படும் ஐதரசன் பிணைப்புகளாகும்.

(தொடரும்...)

# தமிழகத்தில் 65 இலட்சம் மரக்கன்றுகள்; ஜெயலலிதாவின் பிறந்தநாள் பரிசு



(சென்னை)

முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்த நாளையொட்டி ஆண்டுதோறும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தமிழக வனத் துறை மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டும் மரக்கன்றுகள் நடும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதையொட்டி சென்னை மெரீனா கடற்கரையில் நாளை மரக்கன்றுகளை நட்டு இந்த திட்டத்தை முதலமைச்சர் ஜெயலலிதா தொடங்கி வைக்கிறார். அவர் மரக்கன்று நடும் இடத்தை வனத்துறை அமைச்சர் கே.டி.பச்சைமால் அதிகாரிகளுடன் சென்று ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது;

முதலமைச்சர் புரட்சித் தலைவியின் ஒவ்வொரு பிறந்த நாளிலும் வனத்துறை, மரங்கள் நட்டு சிறப்பாக கொண்டாடி வருகிறது.

கடந்த ஆண்டு 64 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டது. இந்த ஆண்டு 65ஆவது பிறந்த நாளையொட்டி தமிழகம் முழுவதும் 65 இலட்சம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த திட்டத்திற்காக ரூ.43.50 கோடி செலவிடப்படும். சென்னையில் மாநில கல்லூரி எதிரே கடற்கரை பூங்காவில் நாளை முதலமைச்சர் மரக்கன்றுகளை நட்டு இத்திட்டத்தை தொடங்கி வைக்கிறார். சென்னையை பொறுத்தவரை மெரீனா கடற்கரையில் எம்.ஜி.ஆர். நினைவிடம் முதல் கலங்கரை விளக்கம் வரை சுற்றுலாப் பயணிகளை கவரவும் நிழல் ஏற்படுத்தவும் நிழல் தரும் மரங்கள் வளர்க்கப்படும். பள்ளிகள், கல்லூரிகள், தனியார் நிறுவனங்கள், ஆர்வத்துடன் மரம் நட முன் வந்தால் அவர்களுக்கு தேவையான மரங்கள் வழங்கப்படும் என்றார்.

### இந்தியச் செய்திகள்

# 6 கோடி இளைஞர்களைத் திரட்ட ஹசாரேயின் இந்திய சுற்றுப் பயணம்



(ஐதராபாத்)

சமூக சேவகர் அன்னா ஹசாரே ஊழலை ஒழிக்க இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். ஆந்திரா சென்ற அவர் ஐதராபாத்தில் அங்கு நடந்த பொதுக் கூட்டத்தில் பேசியதாவது;

மக்களுக்கு சேவை செய்வதில் எனக்கு திருப்தி கிடைக்கிறது. டில்லி ஜந்தர் மந்தரில் நான் 12 நாள் உண்ணாவிரதம் இருந்த பின்னர் தான், தகவல் அறியும் உரிமை சட்டம் கொண்டு வரப்பட்டது. ஊழலற்ற சமூகத்தை உறுதி செய்வதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம் ஆகும். இந்தச் சட்டத்தின் மூலம் பலவேறு ஊழல்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

ஊழலுக்கு எதிரான சட்டத்தின் மூலம் 6 ஊழல் மந்திரிகளை பதவி விலக செய்தோம். இந்தியாவில் 120 கோடி மக்கள் உள்ளனர். அவர்கள் விழிப்புடன் போராடினால் ஊழலை ஒழித்து விடலாம். ஆனால் நம்மிடம் நிறைய குடும்பத்தினர் உள்ளனர். தனி வீட்டை மாற்ற முடியாத அவர்கள் நாட்டை எப்படி மாற்றி காட்டுவார்கள். இருந்தாலும் எனது ஊழலுக்கு எதிரான இயக்கத்தில் 6 கோடி இளைஞர்கள் திரளுவார்கள் என நம்பிக்கை உள்ளது.

35 ஆயிரம் இளைஞர்கள் என்னுடன் சிறை செல்ல தயாராக உள்ளனர். இதன் மூலம் 50 சதவீத ஊழலை ஒழிக்கலாம். ஆனால் ஊழலை முற்றிலும் ஒழிக்க வேண்டும். அதற்கு இளைஞர்கள் முன்வர வேண்டும் என்றார்.

# கிறிஸ்தவ நற்சிந்தனை

## செபிப்பது எப்படி?


"செபம் ஓர் அகப்பயணம், இதயத்தை மையப்படுத்தி அவன் தன் விழிப்புணர்வில் இறை உணர்வு கொள்ளல்"

செபம் என்பது வாழ்க்கை முறை. ஒருவரின் வாழ்க்கை எப்படி காணப்படுகின்றதோ, அப்படியே செபமும் காணப்படும். அக - புறச் சூழல்கள் செபத்தில் துறந்து அகஒளி பெற்றவரே செபத்தில் உயர்வை அனுபவிப்பார்.

செபம் என்பது நாம் பேசுவதை இறைவன் கேட்பது என்பதிலும் பார்க்க, இறைவன் பேசுவதை நாம் கேட்பதில் தான் அடங்கியுள்ளது. அதன் சிறப்பு சுயகட்டுப்பாடு இல்லாத மனம் இறைவனிடம் பிதட்டுகின்றது. சொற்களை அடுக்கிக்கொண்ட போகின்றது.

"நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கின்றார்" (மத்தேயு 6:8). எனவே எங்கள் தேவையை இறைவனிடம் பட்டியல் இடுவதிலும் பார்க்க மற்றவர்களுக்காகச் செபிப்பது முக்கியம்.

-வி.பி.தனேந்திரா.




# வீரப்பன் கூட்டாளிகளின் தூக்கு தற்காலிகமாக இரத்து

வீரப்பன் கூட்டாளிகள் 4 பேருக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை நாளை வரை நிறுத்தி வைக்க உச்ச நீதி மன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

இது தொடர்பான மனுவினை அவசர மனுவாக ஏற்க முடியாது என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அல்டமாஸ் கபீர், கடந்த சனிக்கிழமை மறுத்து விட்டதை அடுத்து இந்த மனு தாக்கல் செய்யப்படுகிறது. இந்த மனுவரிசைப்படி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 1993ஆம் ஆண்டு நிகழ்ந்த பாலாறு கண்ணிவெடி விபத்தில் வனத்துறை, காவல் துறை அதிகாரிகள் உள்பட 22 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். இந்த வழக்கில், சந்தனக் கடத்தல் வீரப்பனின் கூட்டாளிகளான ஞானப்பிரகாசம், சைமன் மீசை, மாதையன் மற்றும் பிலவேந்திரன் ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டு உச்சநீதி மன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டனர்.

நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த இவர்களின் கருணை மனுவினை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, கடந்த 11ஆம் திகதி நிராகரித்தார். இதனையடுத்து கர்நாடகாவில் உள்ள பெல்காம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இவர்கள் 4 பேருக்கும் அடுத்த 14 நாட்களுக்குள் தூக்கு தண்டனை நிறைவேற்றப்படும் என தகவல் வெளியானது.

இதனால், தூக்கு தண்டனை கைதிகள் நால்வரின் குடும்பத்தினரும் கலக்கத்தில் உள்ளனர். இதனிடையே மரண தண்டனையை முற்றிலுமாக இரத்துச் செய்ய வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி உள்ளது. இந்நிலையில் இம்மனுவை விசாரித்த உச்ச நீதி மன்றம், நாளை வரை நிறுத்தி வைக்க உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர்.




பிலவேந்திரன் சைமன்



ஞான பிரகாசம் மாதையன்

# எடியூரப்பா ஆட்சிக்கு வந்தால் கல்வித்துறைக்கு முக்கியத்துவம்

கர்நாடக முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பா பாரதிய ஜனதாவில் இருந்து விலகி கர்நாடகா ஜனதா கட்சியைச் தொடங்கியுள்ளார். இந்த நிலையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மடங்கள், கல்வி நிறுவனங்களுக்கு ரூ. 500 கோடி ஒதுக்கப்படும் என்று எடியூரப்பா அறிவித்துள்ளார். 24 ஆவது விஜயயார்யா சங்கமேஸ்வர ஜெயந்தி விழா ஹங்கலில் நடந்தது. இதில் கலந்து கொண்ட எடியூரப்பா இது



தொடர்பாக கூறியதாவது;

கர்நாடகா ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால் கல்வித் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். கல்வி நிறுவனங்களுக்கும், மடங்களுக்கும் ரூ. 500 கோடி ஒதுக்குவோம். பால்வளத் துறையை மேம்படுத்தப்படுத்துவோம். பெண்களின் முன்னேற்றத்திற்கு ஊக்கம் அளிக்கப்படும். சமூக வளர்ச்சிக்கு மடங்கள் பெரும் பங்கு ஆற்றுவதால் மடங்களுக்கு தமது கட்சி அதிகமான நிதி உதவி அளித்து ஊக்கப்படுத்தும் என்றார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பிரச்சினைகளை விவாதிக்கத்தயார் மன்மோகன் சிங் அறிவிப்பு

முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்ய இத்தாலி நிறுவனத்திடம் இருந்து ஹெலிகொப்டர் வாங்கியதில் ரூ. 360 கோடி இலஞ்சம் பெற்றதாக புகார் எழுந்துள்ளது. இது குறித்து பிரச்சினை கிளப்பி நாடாளுமன்றத்தை முடக்கப் போவதாக எதிர்க் கட்சிகள் மிரட்டல் விடுத்துள்ளன.

இதுகுறித்து பேட்டி அளித்த பிரதமர் மன்மோகன்சிங், இப்பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த தயாராக உள்ளோம். மேலும் மற்ற ஊழல் புகார்களும் ஒளிவு



மறைவு இன்றி விவாதிக்கப்படும் என்றார்.

# புதிய டைட்டானிக் கப்பலில் பயணிக்க ஆர்வம்



அவுஸ்ரேலிய கோடீஸ்வரர் தயாரிக்கவுள்ள புதிய டைட்டானிக் கப்பலில் பயணிக்க உலகமெங்கும் உள்ள பயணிகள் ஆர்வம் காட்டுகின்றனர். உலகின் மிகப்பெரிய கப்பல் என்ற பெருமையுடன் 1912ஆம் ஆண்டில், தன் பயணத்தை தொடங்கிய டைட்டானிக் கப்பல் வட அட்லாண்டிக் கடல்ப் பகுதியில் பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளாகி மூழ்கியது.

இது தொடர்பாக இயக்குனர் ஜேம்ஸ் கமரூன் இயக்கத்தில் வெளிவந்த டைட்டானிக் திரைப்படமும் மக்களிடையே இக்கப்பல் பற்றிய ஆர்வத்தை அதிகரித்தது. இப்போது அதே பெயரில், அதே தோற்றத்துடன், புதிய கப்பலை உருவாக்க அவுஸ்ரேலியாவை சேர்ந்த கோடீஸ்வரர் கிளைவ் பால்மர் திட்டமிட்டுள்ளார்.

இதற்காக அவர் சீனாவில் உள்ள சி.எஸ்.சி ஜின்லிங் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளார்.

ஒரிஜினல் டைட்டானிக் கப்பல் போன்ற தோற்றத்துடனும் நவீன வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் இந்த கப்பல் தயாரிக்கப்படவுள்ளது. கப்பல் தயாரிப்பு பணிகள் இன்னும் தொடங்காத நிலையில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த பயணிகள் இந்த கப்பலில் பயணிக்க ஆர்வத்துடன் உள்ளனர். இதற்காக, ஐந்து கோடி ரூபாயை தர பயணிகள் சிலர் முன்வந்துள்ளதாக கிளைவ் பால்மரின் உதவியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ரஷ்யாவில் விழுந்த எரிகல்

# அணுகுண்டைவிட 30 மடங்கு சக்தி

## நாசா விஞ்ஞானிகள் அதிர்ச்சித் தகவல்



ரஷ்யாவில் யுரல் மலைப் பகுதியில் கடந்த 15ஆம் திகதி விழுந்த சிறு நட்சத்திர வகையைச்சேர்ந்த அந்த எரிகல் சுமார் 10 தொன் எடையும், 55 அடி அகலமும் கொண்டவை. 54 ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் ஒளிப்பிழம்பை உமிழ்ந்தபடி வந்து தரையில் விழுந்த அந்த எரி நட்சத்திரம் மோதுவதற்கு முன்பு 3 துண்டுகளாக உடைந்துள்ளது.

இதனால் நான்குபுறமும் சிதறி விழுந்த எரிகல்லின் துகள்கள் தாக்கியதில் சிலியாபின்ஸ்க் நகரில் சுமார் 1200 பேர் காயம் அடைந்தனர். மற்றும் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து சேதம் அடைந்துள்ளன.

இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை விட இந்த எரிகல் அதிக சக்தி கொண்டது என்றும் ஜப்பான் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டை விட 30 மடங்குக்கும் மேலான வேகத்துடன் வந்து விழுந்துள்ளது எனவும் அமெரிக்காவின் "நாசா" மார்ஷல் விண்வெளி மையத்தின எரிகல் சுற்றுச்சூழல் அமைப்பு தலைவர் பில் கூக் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், அந்த எரிகல் 50 கிலோ தொன் சக்தியுடன் சூரியனை விட மிக பிரகாசமான நெருப்புப்பந்து போல வந்து விழுந்தது என்றும் கூறினார்.

**உலகச் செய்திகள்**

# ஆறாத காயத்தையும் குணமாக்கும் சர்க்கரை



நோய்த் தடுப்பு மருந்துகள், குணப்படுத்தாத காயங்களைக்கூட சாதாரண சர்க்கரை குணப்படுத்தும் அதிசய மருத்துவம் பிரிட்டனில் வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டுள்ளது. புண்களை குணப்படுத்த "ஆன்டிபயாடிக்ஸ்" மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. புண், ரணம், சீழ் பிடித்தல், சளி போன்றவற்றைக் குணப்படுத்த "ஆன்டிபயாடிக்ஸ்" மருந்துகளால் தான் முடியும்" என்ற மருத்துவ கொள்கையை சிம்பாவே நாட்டை சேர்ந்த டாக்டர், தகர்த்துள்ளார். பிரிட்டனின் "வோல்பர்ஹாம்ப்டன்" மருத்துவ பல்கலைக் கழகத்தில் மூத்த பேராசிரியராக பணியாற்றுபவர் மோசஸ் முருண்டு. சிம்பாவே நாட்டை பூர்வீகமாக கொண்ட இவரின் தந்தை நாட்டு மருத்துவர்.


முழங்காலுக்கு மேலே கால் வெட்டி எடுக்கப்பட்ட பேலிஸ் என்ற 62 வயது பிரிட்டன் இன்ஜினியரின் கால்க் காயம் ஆறாது அவருக்கு மிகுந்த சிரமத்தை கொடுத்து வந்தது. எவ்வளவோ மேன்மையான ஆன்டிபயாடிக்ஸ் மருந்துகளை கொடுத்த பிறகும் அவரின் கால் காயம் ஆறவில்லை.மோசஸ் முருண்டுவிடம் சிகிச்சைக்காக பேலிஸ் வந்தார். அவரின் மருத்துவ வரலாற்றை கேட்டறிந்த முருண்டு சிம்பாவே மருத்துவம் தான் அவருக்கு சரியாகும் என கருதி யாருமே இதுவரை செய்திராத அதிரடி சிகிச்சை அளித்தார்.


பேலிசின் வெட்டுபட்ட காலை நன்றாக சுத்தம் செய்து, அதில் தேனீருக்கு பயன்படுத்தும் சர்க்கரையை கொட்டி கட்டு போட்டு அனுப்பி விட்டார். நான்கு நாட்கள் கழித்து கட்டை அவிழ்த்து பார்த்த போது காயம ஆறியிருந்தது. இப்படியே ஒரு மாதத்திற்குள் முழு காயத்தையும் சர்க்கரையால் முருண்டு சரிபடுத்திவிட்டார். இதை "மருத்துவ அதிசயம்" என போற்றிய சக டாக்டர்கள் முருண்டுவின் மருத்து வத்தை எண்ணி வியந்தனர்.

இதுபற்றி சர்க்கரை சிகிச்சைக்கு ஆளான, இன்ஜினியர், பேலிஸ் கூறியதாவது:

முதலில் எனக்கும் சந்தேகமாகத்தான் இருந்தது. ரணமாக இருந்த காயத்தின் மீது முதலில், ஒரு கப் சர்க்கரையை கொட்டி டாக்டர் முருண்டு கட்டு போட்டார். காயத் திலிருந்த நீர் அனைத்தையும் சர்க்கரை ஈர்த்துவிட்டது. இதனால் காயம் லேசாக ஆறியது. அடுத்த சில நாட்களில் படிப்படியாக சர்க்கரை அளவை குறைத்து இப்போது காயமே இல்லாத அளவிற்கு செய்து விட்டார்.

# சீனாவில் உடைந்தது அணை; மக்கள் அவசரமாக வெளியேற்றம்






மத்திய சீனாவின் ஷாங்சி மாகாணத்தில் உள்ள குவிட்டிங் அணையின் தடுப்புச்சுவர் திடீரென உடைந்ததால் அப்பகுதியில் பயங்கர வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. 1959ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த அணையின் தடுப்புச்சுவர் உடைந்ததால் பெருக்கெடுத்து பாய்ந்த வெள்ளம், சாலைகள் மற்றும் ரெயில் பாதைகளில் தேங்கியது.

சில இடங்களில் தண்டவாளங்களை பெயர்த்துக்கொண்டு வெள்ள நீர் கட்டுக்கடங்காமல் பாய்ந்ததுடன், ஷாங்சி மாகாணத்தின் முக்கிய நெடுஞ்சாலை ஒன்றும் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டது. விபத்துகளை தவிரக்க 8 பாதைகளின் ரெயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதால், சுமார் 3000 பயணிகள் கடும் சிரமத்திற்குள்ளானார்கள். தற்காலிக முகாம் அமைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு டிக்கெட் கட்டணம் திரும்ப வழங்கப்பட்டது.

அணையின் அருகாமையில் உள்ள கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ள நீரில் மூழ்கி யாரும் காயமடைந்ததாகவோ, உயிரிழந்ததாகவோ இதுவரை தகவல் ஏதும் இல்லை என்று ஹாங்டாங் மாவட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.



வத்திக்கான் சென்றிருந்த ருமேனியா அதிபர் தரையான் பஸிஸ்கூ, போப் 16ஆம் பெனிடிகை சந்தித்து பேசினார்.

# பலியான ஆசிரியைகளுக்கு ஜனாதிபதி விருது

அமெரிக்காவின் கனெக்டிகட் மாகாணத்தில் உள்ள சாண்டி ஹுக் மழலையர் பாடசாலையில் கடந்த டிசம்பர் மாதம் 14ஆம் திகதி நடந்த துப்பாக்கிச் சூட்டில் 20 குழந்தைகள், 6 ஆசிரியைகள் உட்பட 26 பேர் பலியாகினர். உலக நாடுகளை உலுக்கிய இச்சம்பவத்துக்குப் பின்னர் துப்பாக்கி உரிமம் தொடர்பான சட்டங்களில் கட்டுப்பாடுகளை விதிக்க அமெரிக்க அரசு ஆலோசித்து வருகிறது.

இந்நிலையில், சாண்டி ஹுக் பாடசாலையில் துப்பாக்கிச் சூட்டில் பலியான 6 ஆசிரியைகளின் பெயர்கள் அமெரிக்காவின் 2ஆவது உயரிய விருதான ஜனாதிபதி விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, வெள்ளை மாளிகையில நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் பலியான ஆசிரியர்களின் குடும்பத்தாரிடம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இவ்விருதுகளை வழங்கினார்.

இவ்விழாவில் ஒபாமா பேசியதாவது பாடசாலைக்குழந்தைகளை காப்பாற்றும் முயற்சியில் பலியான ஆசிரியைகள் நினைத்திருந்தால் தங்களது உயிரை தற்காத்துக் கொண்டிருக்க முடியும். ஆனால் அவர்கள் தன்னலத்தை பெரிதாக கருதாமல் தங்களது பாதுகாப்பில் இருந்த குழந்தைகளின் விலைமதிப்பில்லாத உயிர்களை பாதுகாப்பதற்காக தங்களது உயிர்களை அவர்கள் இழந்தனர் என்றார்.

# உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடு

# யாழ். நீதிமன்றம் விதித்தது காலக்கெடு

## முன்னேற்றம் இல்லையேல் சட்டநடவடிக்கை



சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிவந்த 11 உணவகங்ளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஒரு உணவகத்திற்கு தடை விதிக்கப்பட்டதுடன் ஏனைய உணவகங்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுளளதாக யாழ். மாநகரசபை பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.ஜீவநாதன் தெரிவித்தார்.

யாழ். நீதவான் நீதிமன்றினால் இத் தீர்ப்பு விதிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய உணவகங்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுளளதாக அவர் தெரிவிததார்.

யாழ். பொதுச் சுகாதார பரிசோதனை நிலையத்திற்குட்பட்ட 11 உணவகங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட சுகாதார பரிசோதனை நடவடிக்கையின்போது 11 உணவகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிவந்தமை கண்டறியப்பட்டு அவற்றுக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் 1 உணவகத்திற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய 10 உணவகங்களுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதி கால அவகாசம் வழங்கியும் யாழ். நீதிவான் க.சிவகுமார் தீர்ப்பளித்தார்.

இந்நிலையில், எதிர்வரும் 21 ஆம் திகதிக்குள் உணவகங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யாத ஏனைய உணவகங்களுக்கு வியாபார தடை விதிக்கபபடுமென்றும் அவர் கூறினார்.

அத்துடன், யாழ். நகர் மற்றும் வண்ணார் பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதனை நிலையத்திற்குட்பட்ட பகுதியில் 2 உணவகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வருகின்றதாகவும், உணவகங்களைப் பரிசோதனை மேற்கொண்ட வேளையில், உணவகங்களை திருத்தி அமைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாகவும், சுகாதார சீர்கேடுகளை திருத்தியமைக்காத பட்சத்தில் இரு உணவகங்களுக்கு வியாபார தடை விதிக்கப்படவுள்ளதாகவும அவர் மேலும் கூறினார். (25)

# கண்ணிவெடி அகற்ற புதிய தொழில்நுட்பம்

## முற்றாக அகற்ற பத்துவருடம் தேவை

யாழில் மிதிவெடி அகற்றும் பணிகள் நிறைவடைய 10 வருடங்களுக்கு தாமதமாகும் என யாழ். மாவட்ட கண்ணிவெடி செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

வடக்கில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக அகற்றப்பட்டு வருகின்றன. ஏ-9 வீதியில் முகமாலை மற்றும் பளை பிரதேசத்தில் மிதிவெடிகள் அகற்றும் பணி துரிதப்படுத்தப்பட்டு வருகின்றது.

விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புக்கள் உள்ளிட்ட மக்கள் நடமாடும் பிரதேசங்களில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு அங்கு அச்சமற்ற நிலைமை இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் அந்த இடங்கள் மக்களின் பாவனைக்கு கையளிக்கப்படும்.

த ஹலோ ரஸ்ட் மற்றும் டனிஸ் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தின் பணியாளர்கள் மிதிவெடி அகற்றும் பணியை துரிதப்படுத்தியுள்ளனர். இந்த நிறுவனங்களின் கீழ் மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் பெண்கள் அதிகளவில் பணியாற்றி வருகின்றனர்.

மிதிவெடி அகற்றும் பணியில ஈடுபட்டுள்ள டனிஸ் நிறுவனம் அவுஸ்ரேலியன் எய்ட் நிறுவனம் ஆகியன உயர்தொழில்நுட்ப சாதனத்தின் மூலம் பணியாளர்களின் உச்சகட்டப் பாதுகாப்பில் மிதிவெடி அகற்றும் பணியினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(25)

# "மொழி உரிமையும் மனித நேயமும்"

# கட்டுரைப் போட்டிக்கு அழைப்பு

## வட, கிழக்கு மாணவர்களுக்கு வாய்ப்பு

கொழும்பிலுள்ள மாற்றுக் கொள்கைகளின் நிலையம், வடக்கு, கிழக்கு மாகாணப் பாடசாலைக்ளில் க.பொ.த. சாதாரணதரம் மற்றும் உயர்தர வகுபபுக்களில் கல்வி கற்கும் மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றினை நடத்தவுள்ளது. இதற்கான கட்டுரைகளை மாணவர்களிடமிருந்து மாற்றுக்கொள்கைகளிற்கான சமூகப்பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் செயலணி கோரியுள்ளது.

"மொழியும் மனிதநேயமும்" என்னும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் தத்தமக்குரிய மொழிபற்றிய அதாவது, தாய் மொழிபற்றிய முக்கியத்துவம், தாய் மொழியை இழக்க நேரிடுவதால ஏற்படும் வேதனைகள், பாதிப்புக்கள் பற்றிக் கட்டுரை எழுதலாம். இக்கட்டுரைகள் மனித சமூகத்தை மேலும் நல்நிலைக்கு இட்டுச் செல்வதாக அமையவேண்டும்.

கட்டுரைகள் ஒவ்வொன்றும் 750 - 1000 சொற்களைக் கொண்டதாக ஏ - 4 தாளின் ஒருபக்கத்தில் மட்டும் எழுதப்படவேண்டும். பாடசாலை மாணவர்களது கட்டுரைகளைப் பாடசாலை அதிபர் சான்றுப்படுத்த வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் 'கட்டுரைப் போட்டி' எனக் குறிப்பிடவேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினைகளும் மொழியுரிமைகளும் மனித உரிமைகளே மொழி உரிமையும் இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வும், கலாசாரப் பன்மைத்துவத்தின் அடிப்படையாக மொழி உரிமைகளை மதிப்போம் முதலான தலைப்புக்களில் கட்டுரைகள் எழுதப்பட வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து கட்டுரைகளிற்கு முறையே 7500, 6000, 5000, 3000, 2000 பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன. 6-10 ஆம் இடத்தைப் பெறும் கட்டுரையாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும். கட்டுரைகளை 01.03. 2013 இற்கு முன் "பொறுப்பதிகாரி, மாற்றுக்கொள்கைக்கான நிலையம், இல 105, 5 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 03 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். (06)

### ஊடகவியலாளர்...

சாத்தியப்பட்டால், இதுபற்றி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொண்டதாகவும் உவிந்து குருகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கை அடுத்து இடம்பெற்ற இராப்போசன விருந்தின் போது, லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பாக மேலதிக விசாரணை நடத்தக்கோரும் லால் விக்கிரமதுங்கவின் கடிதத்தின் பிரதியை உவிந்து குருகுலசூரிய, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் கையளித்ததாக அறியப்படுவதாக கொழும்பு ரெலிகிராப் செய்தி வெளியிட்டுள்ளது.

### எதிர்க்கட்சிக்...

வெளிநாட்டுக்கு சென்றிருப்பதால் அவர் நாடு திரும்பியதன் பின்னர் கூடி ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்று அவர் தனதுரையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கூட்டமைப்பின் தலைவர் நாடு திரும்பியுள்ளதுடன் வெளிமாவட்டங்களில் தங்கியுள்ள கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று ஆரம்பமாக விருக்கின்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காக வருகைதருவார்கள் அத்துடன் இன்றைய தினமே கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக்கூட்டமும் நடைபெறும்.

அந்தக் கூட்டத்தின் போது எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு கூட்டணியின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பம் வைப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

### சிறிதரன்...

ஜெயலத் ஜெயவர்த்தன ஆகியோருடன் இளநிலை சட்டத்தரணியான சயந்தனும் நேரில் சமூகமளித்திருக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

தனது அலுவலகத்தில் கைபபற்றப்பட்டதாகக் கூறப்படும் வெடிபொருட்கள் மற்றும் குறுந்தகடுகள் இராணுவத் தகவல்கள் தொடர்பாகவே விசாரணைகள் இடம்பெற்றதாக சிறிதரன் விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்கு தகவல் தெரிவித்தார்.

குறிப்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கட்சியின் மாவட்ட அமைப்பாளர் வேழமாலிகிதன் மற்றும் தனிப்பட்ட செயலாளர் பொன்காந்தன் ஆகியோரிடம் நடைபெற்ற விசாரணைகளது தொடர்ச்சியாகவே விசாரணைகள் இடம்பெற்றதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக தமது அலுவலகத்தில் மீட்கப்பட்டதாகக் கூறப்பட்ட வெடிபொருட்கள் மற்றும் குறுந்தகடுகள் உள்ளிட்டவை பற்றி தாம் முற்றாக நிராகரித்ததாகத் தெரிவித்த அவர் தமது உதவியாளர்களும் விசாரணைகளின் போது அதனை நிராகரித்திருந்ததாக அறிந்து கொணடதாகவும் தெரிவித்தார்.

எனினும் தம்மீதான விசாரணைகள் இடம்பெற்ற போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கட்சியின் மாவட்ட அமைப்பாளர் வேழமாலிகிதன் மற்றும் தனிப்பட்ட செயலாளர் பொன்காந்தன் ஆகியோரது நிலை தொடர்பாகவோ அவர்கள் எங்கு வைக்கபபட்டுள்ளனர் என்பது பற்றியதகவல்களோ ஏதும் தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

### யாழ். பிரதிப் பொலிஸ்...

சிகேரா உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர். 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் திகதி முதல நேற்று முன்தினம் வரை பிரதிப் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றி வந்த எரிக்பெரேரா கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (பா,25)

### இரகசிய...

இதேவேளை தென்பகுதியைப் போன்று வடக்கில் வாழக்கூடிய பொதுமக்களும் தமது அனறாட வாழ்க்கையை எந்தவித தடையுமின்றி சந்தோஷமாக முன்னெடுத்து வருகின்றனர்.

அதேபோன்று சகல அரசியல் கட்சிகளும் 'தமது அரசியல் நடவடிக்கைகளை பயமின்றி முன்னெடுத்து வருகின்றன. யாழ். குடாநாடு உட்பட சகல பிரதேசங்களிலும் சுமார் 15 ஆயிரம இராணுவ வீரர்களே தற்போது சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மீண்டும் பயங்கரவாதம் ஏற்படாத வகையில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் பாதுகாப்புச் செயலாளரின் வழிகாட்டலில் இராணுவ தளபதியின் ஆலோசனைக்கமைய அந்தந்த பிரதேச கட்டளைத் தளபதிகளினால் பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மக்கள் நலன் வேலைத் திட்டங்கள், 'அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். கட்டளைகளையும், நிர்வாக நடவடிக்கைகளையும் சிறந்த முறையில் முன்னெடுத்து வரும் ஒழுக்கம் மற்றும் தொழில் ரீதியாகவும் முன்னணியில் இருக்கும் இராணுவம் என்ற வகையில் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தனியாகவோ, இரகசியமாகவோ எந்த ஒரு ஆயுதக் குழுக்களையும் வைத்திருக்க வேண்டிய எந்தவித தேவைகளும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### அரசாங்கம்...

ராஜபக்ஷவை குற்றம் கூறாமல், திறைசேரிச் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர மீது இலங்கையின் பொருளாதாரத்தை சீரழித்துவிட்டதாக வீரவன்ச குற்றம் சுமத்துகின்றார்.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றம் வரையில் பொருளாதார அபிவிருத்தியும் முதலீடும் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் அமைச்சின் பகுதியாக இருந்தன. மத்திய வங்கி கூறுவதற்கு மாறாக இலங்கையில் வெளிநாட்டு முதலீடு வீழ்ச்சி கண்டுள்ளது. இப்போது முதலீட்டு பகுதி பிரித்தெடுக்கப்பட்டு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பாவிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய தற்போது அவர் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக உயர்த்தப்பட்டுள்ளார். இதன் மூலம் ராஜபக்ஷ குடும்பத்தினர் பொருளாதாரத்தை முகாமை செய்வதில் தமது இயலாமையை மீண்டும் ஒருமுறை மூடிமறைக்க முயல்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

# போராளிகள் புனர்வாழ்வு, காணி சுவீகரிப்பு தொடர்ந்து நடக்கும் என்கிறது இராணுவம்

சமூகத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளவர்கள் என்று அடையாளம் காணப்படும் முன்னாள் போராளிகள் அனைவரும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று பிரிகேடியர் ருவான் வணிகசூரிய பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

கிராமங்களில் மக்களுக்கு தொந்தரவாக இருப்பவர்கள் என்று கிடைக்கின்ற முறைப்பாடுகளின் படியே சிலர் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுவருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

ஆனால், விடுதலைப் புலிகளின் முன்னாள் தலைவர்களும் அவர்களின் போராளிகளும் கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள், ஆனால் சாதாரண குடும்ப வாழ்க்கையில் பல ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளவர்களை மட்டும் அரசு புனர்வாழ்வுக்கு உட்படுத்த நினைப்பது பற்றி கேள்வி எழுப்பியபோது, குறித்த முன்னாள் தலைவர்களும், அவர்களின் போராளிகளும் இயல்பாகவே புனர்வாழ்வு அடைந்துவிட்டதாகவும் அவர்களால் சமூகத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் இராணுவப் பேச்சாளர் பதிலளித்தார்.

இராணுவ முகாம்கள் நாட்டுக்கு அவசியம் என்பதால் முகாம்கள் அமைந்துள்ள காணிகள் கையகப்படுத்தப்படும் என்கிறது இலங்கை இராணுவம்.

இதேவேளை, வடக்கில் பலாலி இராணுவத் தளமும் ஏனைய இராணுவ முகாம்களும் அமைந்திருக்கும் காணிகளை இராணுவத் தேவைகளுக்காக கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

அதேபோல பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் போன்ற மையங்களை விஸ்தரித்து அபிவிருத்தி செய்யும் தேவைகளுக்காகவும் அரசாங்கம் குறித்த காணிகளை கையேற்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய கூறினார்.

அபிவிருத்திப் பணிகளுக்காக மக்களின் காணிகளை சுவீகரிக்க வேண்டியது அவசியம் என்றும் காணிகளை இழக்கும் மக்களுக்கு இழப்பீடும் மாற்றிடங்களும் வழங்கப்படும் என்றும் பிரிகேடியர் வணிகசூரிய தெரிவித்தார்.

இதேவேளை, 2009 ஆம் ஆண்டில் வடக்கில் இராணுவம் நிலைகொண்டிருந்த சுமார் 4500 ஹெக்டேர் பரப்புக் காணி இப்போது 2000 ஹெக்டெயராக குறைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தினரின் எண்ணிக்கையும் 15 ஆயிரமாகக் குறைந்துள்ளதாகவும் அவர் தமிழோசையிடம் தெரிவித்தார்.

# மாக்கர் பேனாக் குண்டு மீட்பு

(கொழும்பு)

மூடியை கழற்றும்போது வெடிக்கும் வகையில் மாக்கர் வகை பேனாவினால் தயாரிக்கப்பட்ட குண்டு உட்பட பல்வேறு வெடி பொருட்களுடன் இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டிய, பனாமுர வலகொட பகுதியில் வைத்தே குறித்த இளைஞன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உற்பத்தி செய்யப்படுகின்ற கைக்குண்டுகள் இரண்டு, 12 ரவைகளைக் கொண்ட துப்பாக்கி, 100 கிராம் சீ-4 வகை வெடிபொருள் உள்ளிட்ட வெடிபொருட்களும் அந்த இளைஞரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

குறித்த இளைஞனின் வீட்டிலிருந்தே இந்தப் பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் அந்த பிரதேசத்திற்கு அடிக்கொரு தடவை சென்றுவருகின்ற பிரமுகரை இலக்கு வைத்தே இந்த வெடிப்பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு; காமினி சமரநாயக்க விடுதலை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க உயர்நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், உயர்நீதிமன்ற நீதியரசர்களான பீ.ஏ.ரத்நாயக்க, பிரியசாத் டெப் ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்களின் இஸட் புள்ளி பிரச்சினை தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உடனடியாக செயற்படுத்துவதற்கு தவறியதாகத் தெரிவித்து முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, நீதியரசர்களான காமினி அமரதுங்க, கே.ஸ்ரீபவன் ஆகியோரடங்கிய குழாமினால் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பள்ளி மாணவர்களுக்கு கடும் தண்டனை வேண்டாம்

பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்களால் வழங்கப்படும் கடும் தண்டனைகளை தவிர்த்து, முறையான செயற்பாட்டை முன்னெடுப்பது தொடர்பான யோசனையொன்றை கொண்டுவர உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாந்து புள்ளே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரம் கல்வி தொடர்பான நாடாளுமன்றக் குழுநிலை விவாதத்தில் இந்த யோசனை முன்வைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கையடக்க தொலைபேசியை வகுப்புக்கு கொண்டு வந்த குற்றத்திற்காக வகுப்புத் தடை விதிக்கப்பட்ட மினுவாங்கொட நாலந்தா மகளிர் வித்தியாலய மாணவி ஒருவர் தூக்கிட்டு மரணமானதையடுத்தே இந்த யோசனை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆயுதங்கள், வெடி பொருட்களை இலங்கைக்கு விற்ற பிரிட்டன்

(கொழும்பு)

இலங்கைக்கு மில்லியன் கணக்கான பவுண்ட்ஸ் பெறுமதியான சிறிய ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை பிரித்தானியா கடந்த ஆண்டு விற்பனை செய்துள்ளதாக, பிரித்தானியாவின் இன்டிபென்டென்ட் நாளேடு குற்றம்சாட்டியுள்ளது.

நேற்று வெளியாகியுள்ள இன்டிபென்டென்ட் நாளேட்டின் தலைப்புச் செய்தியிலேயே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

அரசாங்கப் புள்ளிவிபரங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ள தகவல்களின் படி, குறைந்தது, 3 மில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதியான ஆயுதங்கள் கொழும்புக்கு விற்கப்பட்டுள்ளன.

கைத்துப்பாக்கிகள், துப்பாக்கிகள், குண்டு துளைக்காத உடற்கவசங்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் விற்கப்பட்டுள்ளன.

பிரித்தானியாவின் ஏற்றுமதி கட்டுப்பாட்டு அமைப்பு வெளியிட்ட, கடந்த ஜூலை தொடக்கம் செப்ரெம்பர் வரையிலான காலாண்டுத் தரவுகளில் இருந்தே இலங்கைக்கு ஆயுதங்கள் விற்கப்பட்ட விபரம் தெரியவந்துள்ளது.

இதன்படி இலங்கைக்கு 3.741 மில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதியான ஏற்றுமதிக்கு பிரித்தானியா அனுமதி அளித்துள்ளது.

இதில் 3 மில்லியின் பவுண்ட்ஸ் இராணுவத் தளபாடங்களாகும்.

2 மில்லியன் பெறுமதியான விற்பனை, 'ஆடு1' என்ற அடையாளத்தின் கீழ், சிறிய ஆயுதங்கள், என்ற வகைக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூலையில் ஒரு தடவையும், ஆகஸ்ட் மாதம் மூன்று தடவைகளும் என நான்கு சந்தர்ப்பங்களில் இந்த ஏற்றுமதிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மொத்தமாக, 600 தாக்குதல் துப்பாக்கிகள், 650 துப்பாக்கிகள், 100 கைத்துப்பாக்கிகள், 50 தாக்குதல் சொட் கண்கள், என்பனவற்றை விற்க பிரித்தானிய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் இலங்கைக்கு 330,000 பவுண்ஸ் பெறுமதியான வெடிபொருட்களையும், 665,000 பவுண்ட்ஸ் பெறுமதியான குண்டு துளைக்காத உடற் கவசங்களையும் விற்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2008 தொடக்கம் 2012 ஜூன் வரையில், இலங்கைக்கு 12 மில்லியன் பவுண்டஸ் ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரிட்டன் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்ததாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

# வர்த்தகர்கள் மீது தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் காலாவதியான பொருட்கள் மற்றும் விலைப் பட்டியல் சட்ட முறைகளை வர்த்தகர்கள் கடைப்பிடிக்கத் தவறுவதுடன், காலாவதியான பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையின் அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்தார்.

யாழ். நகரப்பகுதி வர்த்தக நிலையங்களில் பரிசோதனை மேற்கொண்ட வேளையில், 18 வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்றும் அவர் மேலும் கூறினார். (25)

இறுதிச் சந்தர்ப்பம்!
மாதம் 50,000/- வருமானத்துடன்
SEGi பல்கலைக்கழகத்தில் கற்று
University of East London சான்றிதழுடன்
சிங்கப்பூர், சீனா, அவுஸ்ரேலியா, மலேசியாவில் Work Permit உடன் வேலைவாய்ப்புக்களையும் வழங்கும்
ஹொட்டேல் பயிற்சிநெறி
3மாத இலவச ஆங்கிலம், கணினி வகுப்புக்களுடன்

No IELTS, Bank Balance, Sponsor or Interview Needed
தங்குமிடம், உணவு இலவசம்
பயிற்சிநெறி முடிவில் 75.000 - 100.000/- வரையான வருமானத்துடன் தொழில்வாய்ப்பு
1ம் அணி மாணவர்கள் வருமானத்துடனான தொழிற்பயிற்சியில் இணைந்தனர். 2ம் அணிக்கு பயிற்சிநெறி ஆரம்பம்.
3ம் அணியில் இணைய பெப். 20 காலை 10 மணிக்கு நேரில் சமூகமளிக்கவும்
15க்கும் மேற்பட்ட UK, Australia, Canada, America & Malaysia பல்கலைக்கழகங்களின் வட மாகாண ஏக பிரதிநிதிகளான
சிகரம் SIKARAM MEDIA & EDUCATION கல்வி - தொழில் வழிகாட்டி
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com www.sikaram.lk
(C/2448)

1500க்கும் மேற்பட்ட தொழில்வாய்ப்புக்கள் & University of Wollongong Australiaவில் பட்டக்கல்வியுடன்
Business & Marketing Communications (வணிகத் தொடர்பாடல் கற்கைகள்)
&
Dan தமிழ் ஒளி & FM 91.4 இல்
நேரடிப் பயிற்சி, தொழில்வாய்ப்புடன்
Mass Communications & Media Studies (ஊடகக் கற்கைகள்)
with
English for Communication
Information Technology
சுயவிபரக்கோவை, தொலைபேசி இலக்கத்துடன், தொடரவிரும்பும் கற்கைநெறியை கடித உறையில் குறிப்பிட்டு, பெப்ரவரி 20ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
SMS பதிவுகளுக்கு, 'Media' அல்லது 'Business' என்று Type செய்து 077 36 16 798க்கு அனுப்பவும்
சிகரம் SIKARAM MEDIA & EDUCATION கல்வி - தொழில் வழிகாட்டி
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk
(C/2447)

அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்க பல்கலை. அனுமதி பெற்ற மாணவர்களுக்கு
விசா வழங்கல்

University of Wollongong Australia, Toronto University Canada, Missouri University of Science and Technology America ஆகியவற்றுக்கு சிகரம் ஊடாக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான விசா அனுமதி கடிதம் 16-02-2013 சனிக்கிழமை சிகரம் நிறுவனத்தில் பணிப்பாளரால் வழங்கிவைக்கப்பட்டது.
இம்மாத இறுதியில் மேலும் ஒரு தொகுதி மாணவர்களுக்கு விசா அனுமதி வழங்கப்படவுள்ளது.
IELTS, வங்கிப்பணம், தூதரக நேர்முகத்தேர்வு எதுவுமின்றி Australia, Canada, America, New Zealand, Malaysia, UK ஆகிய நாடுகளில் கல்வி கற்க விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்
சிகரம் SIKARAM MEDIA & EDUCATION கல்வி - தொழில் வழிகாட்டி
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com www.sikaram.lk
(C/2449)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.